# வைகறை வெளிச்சம்

விலை ரூ.40/-

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-17 Issue-2 பிப்ரவரி-2024 ரஜப் - ஷாபான் 1445




• தாருல் இஸ்லாம் கள செய்திகள்

## ரமழான் சிறப்பிதழ்

• முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? 2ஆம் பாகம் 1

بسم الله الرحمن الرحيم

மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் அல்லாஹ்விடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் நன்கறிபவன், (யாவற்றையும் சூழ்ந்து) தெரிந்தவன்.

(அல்குர்ஆன் : 49 : 13)


மனித வரலாற்றில் நோன்பு - 4

இஸ்லாம் கடமையாக்கிய நோன்பும்.. இதர சமயங்களின் நோன்பும்... - 7

ரமழானே வருக! - 14

நான் ஏன் ஓர் அமெரிக்கன் அல்ல? - 16

ஃபாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு - 18

உமர் (ரழி)யின் ஒப்பந்தம் - 24

44ஆம் ஆண்டில் தாஃவா - 27

பாலஸ்தீனத்தில் ஒரு தாய்! - 37

தன் மகனை அல்லாஹ்வின் பாதையில் தந்த தாய்! - 38

பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்கள் - 39

பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள் - 44

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? 2ஆம் பாகம் - 49

தலையங்கம் - 52

குழந்தை வளர்ப்பு - 58

மருத்துவம் - 60



பிப்ரவரி-2024 ரஜப் - ஷாபான் 1445

# வைகறை வெளிச்சம்



ஆசிரியர்
மு.குலாம் முஹம்மது,M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



தனி இதழ்: ரூ.40 | ஆண்டுச் சந்தா - உள் நாடு: ரூ.480 / வெளி நாடு: ரூ.5000

VAIGARAI VELICHAM
52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.
+91 81481 29887 | Email: darultrust@yahoo.com | Web: www.darultrust.in

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



# மனித வரலாற்றில் நோன்பு

**இந்த மாதத்தில் தான் நோன்பு "சவ்ம்" என்பது முஸ்லிம்களுக்குக் கடமை யாக்கப்பட்டது. இது ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் முஸ்லிம்கள் மீது கடமை என அறிவிக்கப்பட்டது. அதே ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் இடம்பெற்ற பத்ருப் போருக்கு முன் கடமையாக்கப்பட்டது.**

*இதன் பெருமையை அல்குர்ஆன் இப்படிக் கூறுகின்றது.*

> *"ரமழான் மாதம் எத்தகையதென்றால் அதில்தான், மனிதர்களுக்கு வழிகாட்டி யாகவும் நேரான வழியைத் தெளிவாக்கக் கூடியதாகவும் (நன்மை-தீமைகளை) பிரித் தறிவிக்கக் கூடியதுமான குர்ஆன் இறக்கி அருளப்பெற்றது.*
>
> *ஆகவே உங்களில் எவர் அம்மாதத்தை அடைகின்றாரோ அவர் நோன்பு நோற்க வேண்டும். எனினும் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கின்றவர் களைத் தவிர, அவர் அந்த நோன்பை மற்ற நாட்களில் கணக்கிட்டு நோற்று விடலாம். அல்லாஹ் உங்களுக்கு இலகு வானதையே நாடுகின்றான். உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை. நோன்பின் எண்ணிக்கையை நீங்கள் பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வை நீங்கள் பெருமைப்படுத்துவதற்காகவும் நீங்கள் நன்றி செலுத்துவதற்காகவுமே, இதன்மூலம் நாடுகின்றான்."*
>
> *(அல்குர்ஆன் அல்பகரா 2: 185)*

**மனித வரலாற்றில் நோன்பு**

*அல்லாஹ் நோன்பை கடமையாக்கிய முதல் வசனத்தில் இப்படிக் கூறுகின்றான்.*

*"நம்பிக்கைக் கொண்டோரே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது, நோன்பு விதியாக்கப் பட்டிருந்ததுபோல் உங்கள் மீதும் அது விதிக்கப் பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்ச முடையோர் ஆகலாம்." (அல் பகரா 2:182)*

*உங்களுக்கு முன்பிருந்தவர்களுக்கு... என்ற இந்த அல்குர்ஆனின் வரலாற்று வரிகள், நம்மை நோன்பு நோற்பவர்களை முந்தைய சமுதாயங்களோடு பிணைக்கின்றன.*

*முதல் மனிதர் ஆதம்(அலை) அவர்கள், அவர்களே முதல் இறைத்தூதருமாவார். அவர்கள் இந்த மண்ணில் 1000 ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக வரலாறுகள் பேசுகின்றன.*



vaigarai velicham official

அவர்களுடைய மகனார் சீது(அலை) அவர்கள் அடுத்த நபி இறைத்தூதர் அவர்களும் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக வரலாறு உண்டு. இந்த முதல் மனிதர் / முதல் நபி காலத்திலிருந்தே நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை மேலே உள்ள இறைமறை வசனம் 2:183 ஊர்ஜிதம் செய்கின்றது. அதாவது இறை நெருக் கத்திற்காகவும், இறை அச்சத்தை பெறுவதற் காகவும் அதாவது இறை நெருக்கமான ரிழாவைப் பெறுவதற்கும் இறைவனை அஞ்சி வாழும் "தக்வாவைப் பெறுவதற்காகவும் நோன்பிருத்தல்" என்ற கொள்கை Concept of Fasting இறைவனால் ஆதிமனிதன் காலத்திலிருந்தே புழக்கத்தில் இருக்கின்றது. அதேபோல் "The Concept of God" இறைவன் இருக்கின்றான் என்பதும் அன்றி லிருந்தே புழகத்திலிருக்கின்றது.

இறைவன் ஒருவன், அவன் தான் அல்லாஹ் என்ற கொள்கை காலப்போக்கில் மனிதன் இறைவனை நெருங்குவதற்கு சில இடைத்தரகர் களை கண்டெடுத்தான். காலப்போக்கில் இந்த இடைத் தரகர்களையே அவன் சந்ததியினர் கடவுளாக ஆக்கிக் கொண்டார்கள். இறைவன் ஒருவன்தான் என்ற கொள்கை சிதறுண்டது. சின்னாபின்னமானது.

அதேபோல் The Concept of Fasting-வும் சீர்குலைந்தது, அது பல்வேறு வடிவங்களைப் பெற்றது. மாதத்தில் சில நாட்கள், வாரத்தில் சில பொழுதுகளில், உண்ணாமலிருப்பது போன்ற வடிவங்களைப் பெற்றது.

எல்லா மத வழிபாடுகளிலும் உண்ணாமை நோன்பிருத்தல் இருந்தது. Encyclopedia Brita nnica என்ற என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்ற கலைக்களஞ்சியம், எல்லா மத வழிபாடு களிலும் நோன்பிருத்தல் இருந்தது என்பதை இப்படிக் கூறுகின்றது.

"The world lies difficult to name any Religious system, of any discipline in which it is wholly unrecognized"-(as quoted in Shahih Muslim. Kitab al Sawm. pg 629)

நோன்பிருத்தலை முற்றாக அங்கீகரிக்காத எந்த ஒரு மத வழிமுறையையும் நாம் பெயர் குறிப்பிட இயலாது. அதாவது உலகிலுள்ள எல்லா மதங்களும் நோன்பு நோற்றலை ஒரு வகையில் அல்லது இன்னொரு விதத்தில் வலியுறுத்தியே இருக்கின்றன. இந்த சிதைந்து போன மதங்களிலும், வழிபாடுகளிலும் விரதம், நோன்பு அல்லது உண்ணாமை "ஆத்மாவை சுத்தப்படுத்தும்" (Purification Soul) இறை வழி பாடாகவே பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

அரபுலகில், இஸ்லாம் அறிமுகமாகாத காலத்திற்கு முந்தைய காலத்திலும், அரபு உலகில் நோன்பு ஒரு மத வழிபாடாக புழக்கத்திலிருந்தது. குறிப்பாக மொஹரம் பத்தில் அவர்கள் அரபுக்கள் நோன்பிருந்தார்கள். காரணம் இந்த நாளில்தான் அல்லாஹ் மூஸா (அலை) அவர் களையும், அவர்களது தோழர்களையும் பிர்ஆவ்ன் என்ற கொடுங்கோலனின் கைகளில் இருந்து காப்பாற்றினான். பின்னர் ஆழ்கடலில் மூழ்கடிக் கப்பட்டு இறந்தான்.

அதேபோல் கிறிஸ்தவர்களும் 40 நாட்கள் நோன்பிருப்பதை பழக்கமாக்கி வருகின்றார்கள். பல விதிவிலக்குகள் உண்டு உண்பதிலும் பருகுவதிலும்.

**அதாவது இறை நெருக்கத்திற்காகவும், இறை அச்சத்தை பெறுவதற்காகவும் அதாவது இறை நெருக்கமான ரிழாவைப் பெறுவதற்கும், இறைவனை அஞ்சி வாழும் "தக்வா"வைப் பெறுவதற்காகவும் "நோன்பிருத்தல்" என்ற கொள்கை Concept of Fasting இறைவனால் ஆதிமனிதன் காலத்-திலிருந்தே புழக்கத்தில் இருக்கின்றது.**

**இந்துக்களிடமும் :** இந்துக்களும் பல வகை நோன்புகளை நோற்கின்றார்கள். சில நாட்கள், கிழமையில் சில நேரங்களில் அல்லது பொழுது களில் உண்ணாமை மகா சிவராத்திரி விரதம் என்றெல்லாம் நோன்புகளை தோற்கின்றார்கள்.

### கிருபானந்த வாரியார்

கிருபானந்த வாரியார் அவர்கள் தன்னுடைய உரைகளில் மோட்சம் என்ற "பதவியை" அடை வதற்கு சில வழியைச் சொல்லுவார், அவை பசித்திருப்பது. தனித்திருப்பது. விழித்திருப்பது என்று குறிப்பிடுவார்.



இப்படி எல்லா மதங்களிலும், இறை நம்பிக்கையோடு தொடர்புபடுத்தி விரதம் இருப்பது நோன்பு நோற்பது பழக்கத்தில் இருக்கின்றது.

ஆக "The Concept of Fasting" என்ற நோன் பிருக்கும் முறை அல்லாஹ்வால் ஆதிமனிதன் வழி அறிமுகப்படுத்தப்பட்டு சிதறிய நிலை யிலும் புழக்கத்திலிருந்து வத்தது.

### அல்லாஹ்வின் அறுதி வழிகாட்டுதல்

ஆனால் அந்த நோன்புகள் எல்லாம் ஒருமுகப் படுத்தியது அல்லாஹ்வின் அறுதி வேதமாகிய அல்குர்ஆன்தான். இதில் நோன்பு குறிப்பிட்ட ரமழான் மாதத்தில்தான் என்பதை நிலை. நிறுத்தப்பட்டது.

நோன்பின் காலமும் நிலை நிறுத்தப்பட்டது காலை முதல் மாலை வரை. சூரிய உதயத்திற்கு முன் தொடங்கி சூரியன் மறைந்த உடன் முடியும் என வரையறுக்கப்பட்டது. நோன்பின் கால அளவில் உண்பது, பருகுவது, உடலுறவு கொள்வது என எல்லாம் தடை செய்யப்பட்டது. நோன்பு துறந்த பின் எல்லாம் அனுமதிக்கப் பட்டது. கடைசி பத்து நாட்களில் மட்டும் உடலுறவுக்குப் பக்கத்தில் கூட அண்டக் கூடாது.

> ரமளான் மாதம் எத்தகையதென்றால் அதில் தான் மனிதர்களுக்கு (முழுமையான வழிகாட்டியாகவும், தெளிவான சான்று களைக் கொண்டதாகவும்; (நன்மை - தீமைகளைப்) பிரித்தறிவிப்பதுமான அல் குர்ஆன் இறக்கியருளப் பெற்றது; ஆகவே, உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம்மாதம் நோன்பு நோற்க வேண்டும்; எனினும் எவர் நோயாளியாகவோ அல்லது பயணத்திலோ இருக்கிறாரோ (அவர் அக்குறிப்பிட்ட நாட்களின் நோன்பைப்) பின்வரும் நாட்களில் நோற்க வேண்டும்; அல்லாஹ் உங்களுக்கு இலகுவானதை நாடுகிறானே தவிர, உங்களுக்கு சிரமமானதை அவன் நாடவில்லை; குறிப்பிட்ட நாட்கள் (நோன்பில் விடுபட்டுப் போனதைப்) பூர்த்தி செய்யவும், உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக அல்லாஹ்வின் மகத்து வத்தை நீங்கள் போற்றி நன்றி செலுத்து வதற்காகவுமே (அல்லாஹ் இதன்மூலம் நாடுகிறான்). *(அல்குர்ஆன் : 2:185)*

### நோன்பின் நோக்கம்

நோன்பிருப்பது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. சில நாட்டு மருத்துவம் நோன்பிருப்பதை சில நோய் களுக்கு நிவாரணமாக கூறுகின்றன.

இப்படி எத்தனையோ இதர பலாபலன்கள். ஆனால் இறைவன் நோன்பின் நோக்கமாகக் கூறுவது நீங்கள் இறையச்சம் உடையவர்களாக வாழலாம் என்பதே!

இதை இலட்சியமாகக் கொண்டு நோன்பிருப் போம் அதை அடைவோம். வாழ்வின் இதர நாட்களிலும் இறையச்சம் உடையவர்களாகவே வாழ்வோம், இறைவனிடம் எல்லா வகையான கூலிகளையும் பெறுவோம். இன்ஷா அல்லாஹ்.

**- MGM**

# இஸ்லாம் கடமையாக்கிய நோன்பும்.. இதர சமயங்களின் நோன்பும்...



**நோன்பு, இஸ்லாத்திற்கே உரிய ஒழுக்க, ஆன்மீக தனித் தன்மைகளுள் ஒன்றாகும். வைகறை வரும்முன் தொடங்கி சூரியன் அடையும்வரை உணவு, பானம், உடலுறவு, இன்னும் இவை போன்றவற்றிலிருந்து விலகி இருத்தலே நோன்பாகும். இது ரமளான் மாதம் முழுவதும் நோற்கப்படுவதாகும்.**

இஸ்லாம் கடமையாக்கியுள்ள நோன்பிற்குப் பல பரந்த பொருள்களுண்டு. அதனுடைய நோக்கம் மிகவும் விரிவானதாகும்.

இஸ்லாம் நோன்பு என்ற இந்த மாண்புமிக்க கடமையை ஏற்படுத்தியதன்மூலம், ஓர் ஒப்பற்ற நல்வாழ்வுத் திட்டத்தை அமைத்துத் தந்துள்ளது. நோன்பின் ஆன்மீகப் பொருள் விளக்கம் பின்வருமாறு:

*1)* நோன்பு, அன்பு என்னும் அற்புதத் தத்துவத்தை மனிதனுக்குக் கற்றுத் தருகின்றது. ஏனெனில், ஒரு மனிதன் நோன்பினை நோற்கிறான் என்றால், அது அவன் இறைவன்பால் கொண்ட ஆழமான அன்பினால்தான். இறைவனை உண்மையாக நேசிக்கின்றவன் உண்மையான அன்பு என்னவென்பதை உணர்ந்தவனே யாவான்.

*2)* நோன்பு மனிதனிடம் ஆக்கப்பூர்வமான தன்னம்பிக்கையை வளர்க்கின்றது. நோன்பு நோற்பவன் வாழ்வை வளமான நேர்மையான வாழ்க்கை காத்திருக்கின்றன. நம்பிக்கையுடன் நடத்துகிறான். நோன்பு வாழ்க்கையில் மனிதனுக்கு ஒரு பிடிப்பை ஏற்படுத்துகின்றது. ஏனெனில், மனிதன் பெறுவதற்காகவே நோன்பினை நோற்கின்றான். அவன், அதன்மூலம் நம்பிக்கையோடு இறைவனின் கருணையை நாடுகின்றான்.

*3)* ஆழ்ந்த வஞ்சகமில்லாத இறைநேசம் என்னும் உண்மையான நற்பண்பையும் நோன்பு ஏற்படுத்துகிறது. அது நேர்த்தியான ஈடுபாடு இறை நெருக்கம் என்னும் உன்னத நிலைகளை ஏற்படுத்தித் தருகின்றது. ஏனெனில், ஒருவன் நோன்பு ருக்கின்றான் என்றால், அவன் இறைவனுக்காகவே உலக இன்பங்களையும் உணவுகளையும் அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் துறந்திருக்கின்றான். அவன் இறைவனுக்காக மட்டுமே அவ்வாறு செய்கின்றான்.

*4)* மனிதனிடத்தில் பண்பட்டதொரு மனச்சாட்சியை நோன்பு உருவாக்குகின்றது. நோன்பை நோற்பவர் தன்னை யாரும் கண்காணித்திடாத போதும், நோன்பைக் கண்ணெனக் காத்து வருகின்றார். மறைவான, இடத்தில் வைத்து, அவர் எதையேனும் உண்டாலோ பருகினாலோ கண்டுகொள்பவர் எவருமில்லை. இருந்தும், அவர் நோன்பைக் காத்து வருகின்றார்.

நோன்பினை நோற்றுத்தான் ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்துபவர் எவருமில்லை. தனிமையிலும் வெளியிலும் அவர் நோன்பினைக் காத்திடுவதன் காரணம், இறைவனின் திருப்

பொருத்தம் தனக்குக் கிடைக்கும் என்பதே. இதன்மூலம், அவர் (தனது மனசாட்சியை திருப்தி படுத்துகிறார் நல்ல மனசாட்சியை வளர்த்திட இதுவே சிறந்த வழி.

*5)* மனிதனுக்குப் பொறுமையைக் கற்றுத் தருகின்றது நோன்பு. சுயநலமற்ற உணர்வு மனிதனிடத்தில்வளரநோன்புவகைசெய்கின்றது. ஏனெனில், நோன்பினை நோற்றிடுபவர் பசியின் வேதனையை உணர்கிறார். இருந்தும், அதனைப் பொறுமையோடு சகித்துக் கொள்கிறார். இவ்வாறு பசியோடிருப்பது தற்காலிகமானது தான். இருந்தாலும் இதன்வழி, அவர் வறியவர் களின் வாட்டத்தை, பஞ்சையர்களின் பசியை நன்றாக உணர்ந்து விடுகின்றார். ஒரு நாள் பசி, வாழ்நாள் முழுவதும் வாடுபவர்களின் வறுமையை அவருக்கு உணர்த்துகின்றது. இத்தகைய அனுபவத்தைப்பெறுபவர்சுயநலமற்ற வகையில் வறியவர்களுக்கு வாரி வழங்குவதைப் வழக்கமாக்கிக் கொள்கிறார். இதில் அவர் ஏனையவர்களைவிட முன்வரிசையில் நிற்கிறார். மனக்கட்டுப்பாடு என்னும் நற்பண்பைக் கற்றுத் தருகின்றது நோன்பு. தனது இச்சைகளை உடல் தாபங்களையும் அடக்கிக்கொள்ளும் பெற்றவர்களே நோன்பு நோற்கின்றார்கள். நிச்சயமாக இவர்கள், நற்குணம், நன்னடத்தை, மனக்கட்டுப்பாடு, உளத்திண்மை இவற்றைப் பெறுவார்கள்; பெற்றிருப்பார்கள்.

*7)* மனிதன் சிந்திப்பதற்கான மனத் தெளிவை ஏற்படுத்துகின்றது நோன்பு. உற்சாகத் தோடும், சுறுசுறுப்போடும் இயங்கும் வகையில் உடலை மாற்றுகின்றது நோன்பு. உணவுக் கட்டுப்பாட்டினால், இன்னும் பல நன்மைகள் உண்டு. மருத்துவ உரைகளும், உயிரியல் விதிகளும், அறிவார்ந்த அனுபவங்களும் இந்த உண்மையை உறுதிப்படுத்துகின்றன; நோன்பின் மாண்புகளை விளக்குகின்றன.

*8)* நோன்பு சிறந்த ஒரு குடும்ப வரவு செலவுத் திட்டத்தை அமைப்பதற்கும், சீரிய சேமிப்பிற்கும் வழிகாட்டுகிறது.

*9)* வருவாயில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு களுக்கு ஏற்ப மனிதன் வாழ்ந்திடத் தேவையான பயிற்சியாக அமைகின்றது, நோன்பு. அதுபோலவே, சூழ்நிலைகளுக்கு ஏற்ப மனிதன் தனது உணவுப் பழக்கங்களை வளைத்துக் கொள்ள உதவுகின்றது. நோன்பிருக்கும் காலங்களில், மனிதனின் அன்றாட வாழ்க்கை



முறைகள் முற்றிலும் மாறிவிடுகின்றன.

இந்த மாற்றங்களுக்கு ஏற்ற வகையில், தனது உணவுப் பழக்கங்களையும் ஏனைய நடை முறைகளையும் மாற்றிக்கொள்ள மனிதன் இயல்பாகவே முயற்சி செய்கின்றான். காலப் போக்கில் இது, புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்றபடி வாழும் திறனை மனிதனுக்களிக்கின்றது. வாழ்க்கையில் எதிர்பாராத விதத்தில் ஏற்படும் வாட்டத்தை சகித்துக் கொள்ளவும், வருவாயில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளைச் சமாளித்திடவும் மனிதன் பயிற்சி பெறுகின்றான்.

இந்த வகையில், அவன் தனக்கென ஒரு சுய ஆற்றலைப் பெற்றிடுகின்றான். புதிய சூழ்நிலைகளுக்கேற்ப வாழும் துணிவையும் துணிச்சலையும் விரும்புபவர்களும் வரவேற் பவர்களும் நோன்பின் இந்நற்பண்புகளை எளிதில் ஏற்றுக்கொள்வர்.

*10)* நோன்பு மனிதனுக்கு ஒழுங்கு, கட்டுப்பாடு, ஆரோக்கியமான வாழ்வுமுறை ஆகியவற்றை அளிக்கின்றது. புனித ரமளான் மாதத்தில், தொடர்ந்து ஒழுங்காக நோன்பு நோற்று வருபவர், ஒவ்வோர் ஆண்டிலும் நோன் பினை நிறைவேற்றி வருபவர், தன்னை ஓர் உயர்ந்த கட்டுப் பாட்டுடைய வயிற்றுக்கும் ஜீரண உறுப்புகளுக்கும் கனமான வேலையி லிருந்து ஓய்வு கொடுப்பதால், வயிற்றுக் கோளாறு களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறார். இவ்வாறு உடலைப் பேணுவதின்மூலம், அவர் உடல் ஆரோக்கியமைடைகின்றது. உடலின் ஆரோக்கியம், உள்ளத்திற்கும் ஆரோக்கியத்தை அளிக்கின்றது. அவருடைய ஆன்மா தூய்மை யுடனும் அமைதியுடனும் வலுவுடனும் இலங்குகின்றது.

*11)* நோன்பு மனிதனுக்குச் சமூக உணர் வையும், ஒற்றுமை உணர்வையும், சகோதரத்துவ உணர்வையும் ஊட்டுகிறது. இறைவனின் முன்பும்,


vaigarai velicham official

இறைவன் வகுத்துத்தந்துள்ள சட்டத்தின் முன்பும், அனைவரும் சமமானவர்கள் என்ற உணர்வுகளை அளிக்கின்றது. ஒரு முஸ்லிம் நோன்பு நோற்கின்றபோது, அதே கடமையை, அதே இலட்சியத்திற்காக நிறைவேற்றும் உலக முஸ்லிம்களில் தானும் ஒருவர் என்பதை உணருகிறார். இஸ்லாம் அமைத்துத் தந்த இந்த உன்னதமான கடமைக்கு நிகராக எதுவுமில்லை. இத்தகையதோர் அரிய ஏற்பாட்டை இஸ்லாத்தில் அல்லாமல், வேறு எங்கும் காணவியலாது. சமூக அறிவியலாளர்கள் யாரும் கற்பனையில் கூட இப்படிப்பட்டதோர் அமைப்பை எண்ணிப் பார்த்ததில்லை.

மனிதனாக மதிக்கப்படதக்க, அந்தஸ்திற்காக உறவுக்காக, ஒற்றுமைக்காக, சகோதரத்துவத்திற்காக, மக்கள் காலங்காலமாக ஏங்கித் தவிக்கின்றார்கள். அவர்கள், இதுவரை அதற்கு எந்த வழியையும் காணவில்லை. இவற்றைப் பெற்றுத்தருவதாகப் பறைசாற்றிய மதங்கள் எல்லாம், மக்களுக்கு ஏமாற்றத்தையே தந்தன. இவர்களுக்கு இஸ்லாம் மட்டுமே வழிகாட்ட முடியும். இஸ்லாம் ஒன்றே, அவர்களின் ஏக்கம் போக்க உற்ற மார்க்கம், இஸ்லாம் இன்றி, இவர்கள் உலகச் சகோதரத்துவம், உலக ஒற்றுமை என்ற கனவுக்கோட்டைகளை நனவாக்கிட முடியாது.

*12)* தன்னம்பிக்கை மனிதனின் இலட்சிய வெற்றிக்கு உயிர் போன்றது. இந்தத் தன்னம்பிக்கையை மனிதனிடம் வளர்ப்பது நோன்பு. மனிதனுக்குச் சுதந்திரம், கண்ணியம், அமைதி, இவற்றோடு வெற்றியையும்பெற்றுத்தருகின்றது; பாவங்களிலிருந்து மனிதனை விடுவிக்கின்றது. முறையாக நோன்பு நோற்பவர், நோன்பின் இத்தகைய பலன்களை அனுபவத்தால் அறிகின்றார். இந்த நன்மைகளை அடையும் ஒருவர், உள்ளத்தில் அமைதி பெறுகிறார்; இறைவனின் அருளைப் பெறுகிறார்; தான் வாழும் வட்டத்தில் நிம்மதியாக வாழ்கின்றார்.

இப்போது நோன்பினால் இவ்வளவு நலன்கள் விளையும் என்பது உண்மையானால், முஸ்லிம்கள் ஏன் ஓர் உயர்ந்த நிலையை அடையவில்லை என்ற கேள்வியைச் சிலர் எழுப்பலாம். உண்மை என்னவெனில், முஸ்லிம்கள் தங்களுடைய வரலாற்றின் குறிப்பிட்ட ஒரு சகாப்தத்தில், இத்தகைய உன்னத நிலையை அடையவே செய்தார்கள். இது மனித வரலாற்றிலேயே தனித்தன்மை வாய்ந்த ஒரு சாதனையாகும். தனித்தன்மை வாய்ந்தது என்று சொல்வதற்கான காரணம், இஸ்லாத்தைத் தவிர வேறு எந்தச் சமயமும், சமூக அமைப்பும் தன்னுடைய இலட்சியத்தில் வெற்றி யடைந்ததில்லை. ஏனைய கொள்கைகள் அனைத்தும் ஏட்டுச் சுரைக்காயாக இருந்தனவே தவிர, நடைமுறைப் படுத்தப்பட்டதில்லை. இவை, சில வேளைகளில் தெளிவாகத் தென்பட்டன. ஆனால், பல வேளைகளில் அவை தெளிவற்றே திண்டாடின.

இஸ்லாத்தின் கொள்கைகள் முழு அளவில் செயல்படுத்திக் காட்டப்பட்டன. இதன் பொருள், இஸ்லாத்தின் இலட்சியங்களை இந்த உலகில் மீண்டும் நிலைநாட்டிட முடியும் என்பதாகும். அவை எப்போதும் செயல்படுத்திக் காட்டிடும் வகையில் வலுவான அடிப்படையில் அமைந்தவை.

இன்றைய நாள்களில், இஸ்லாத்தின் இலட்சியங்கள் ஏன் நிலைநிறுத்தப்படவில்லை என்பதற்குப் பல காரணங்கள் உண்டு. நோன்பு என்ற கடமையைப் பொறுத்தவரையில், முஸ்லிம்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டிருப்பவர்களில் பலர் இந்தக் கடமையை நிறைவேற்றுவதில்லை. இன்னும் பலர் இதில் போதிய அளவு கவனம் செலுத்துவதில்லை. நோன்பினை நோற்பவர்களில் பலர், அதன் உண்மையான பொருளைத் தெரிந்து முறையாக நிறைவேற்றுவதில்லை. இதனால், இன்னும் பலருக்கு அதிலிருந்து எந்தப் பலனுமே கிடைப்பதில்லை. இதனால்தான், நோன்பின் உண்மையான பலன்களை இன்றைய முஸ்லிம்கள் முழுமையாகப் பெறவில்லை.

இஸ்லாம் கடமையாக்கிய நோன்பு பற்றிச் சொல்லப்படுவதெல்லாம் யூத, கிறிஸ்தவ, காந்திய வகை நோன்புகளுக்கும் பொருந்தும் எனச் சிலர் எண்ணலாம். இந்த அடிப்படையில் சிலர், முஸ்லிம்கள் ஏன் தங்களது நோன்பு பற்றி இப்படி பீற்றிக் கொள்கிறார்கள் என்றொரு கேள்வியையும் கேட்கலாம். இவர்களுக்கு நமது பணிவான பதில் இதுதான்.

இறைத் தூதர்களை இகழ்வதும், உண்மைகளை ஊதாசீனப் படுத்துவதும், இறைவனின் அருளிய மார்க்கங்களில் எதையாவது பொய்யாக்குவதும் இஸ்லாத்திற்கு எதிரானதாகும், இத்தகைய பொறுப்பற்ற செயல்களைச் செய்திடச் சுதந்திரம் இருப்பதாகச் சிலர் எண்ணுகிறார்கள்.

ஆனால், முஸ்லிம்கள் அவ்வாறு எண்ணுவதில்லை. இத்தகைய இழிசெயல்களைச் செய்பவர்கள் இஸ்லாத்திற்கு எதிராகச் செயல்பட்டவர்களாகக் கருதப்படுவார்கள்.

வரலாறு எவ்வளவு தொன்மையானதோ அவ்வளவு தொன்மையானது நோன்புமுறை. முஸ்லிம்களுக்கு விதிக்கப்பட்டதுபோலவே இஸ்லாத்திற்கு முன்பிருந்தவர்களுக்கும் நோன்பு விதிக்கப்பட்டிருக்கின்றது. இறைவன் விதித்த மற்ற நோன்புகளின் சரியான முறைகள் நமக்குத் தெரியாது. தெரிந்ததாகச் சொல்லிக் கொள்பவர்களின் கூற்றுகள் ஏற்கும் தரத்தில் இல்லை. ஆயினும், உண்மையைத் தெரிந்துகொள்ளும் முகத்தான், இஸ்லாத்தின் நோன்பு முறையை, மற்ற நோன்பு முறைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

**நோன்புகள் : ஓர் ஒப்பாய்வு**

1) ஏனைய மதங்களிலும், கொள்கைகளிலும் நோன்பு நோற்பவர்கள் நோன்பிருக்கும் நேரத்தில் குறிப்பிட்ட சில உணவுகளையும், பானங்களையும் மட்டுமே தவிர்த்திடும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால், முஸ்லிம்கள் எல்லா வகையான பானங்களிலிருந்தும் உணவுகளிலிருந்தும் விலகி இருக்கும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள். அந்தக் குறிப்பிட்ட நேரம்வரை, அவர்கள் எதையும் அருந்திடக்கூடாது.

2) ஏனைய மதங்களிலும் கொள்கைகளிலும் நோன்பு நோற்பதன் நோக்கம், முழுமையானதாக இல்லை. ஆன்மீகம், அறிவு வளர்ச்சி, உடல் வளர்ச்சி இவற்றில் ஏதேனும் ஒன்றையே நோக்கமாகக் கொண்டதாக இருக்கின்றன.

ஆனால், இஸ்லாம் கடமையாக்கியுள்ள நோன்பு, இவை அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இஸ்லாம் / பணித்துள்ள நோன்பு, நோக்கத்தில் பூரணமானது; விளக்கத்தில் தெளிவானது; இலட்சியத்தில் முழுமையானது; ஆன்மீகத்தில் ஆழமானது.

3. ஏனைய நோன்பு முறைகள் குறிப்பிட்ட சில உலகியல் தேவைகளை மட்டுமே புறக்கணிக்கும்படி கோருகின்றன.

ஆனால், இஸ்லாம் பணித்துள்ள நோன்பு, இவற்றோடு வழக்கமானதைவிட அதிகமான தொழுகைகளை மேற்கொள்ளும்படி கோருகின்றது. நோன்பு மாதத்தில் தர்மங்கள் தாராளமாகச் செய்யப்படுகின்றன. குர்ஆன் ஓதுதல் அதிகமாக நடைபெறுகின்றது. நோன்பு நல்ல மனச்சாட்சியை ஏற்படுத்துகின்றது.

சுயக்கட்டுப்பாட்டைப் பயிற்றுவிக்கின்றது. இதனால், நோன்பு நோற்கும் முஸ்லிம் அகத்திலும் புறத்திலும் முற்றிலும் ஒரு புதிய மனிதராகிறார். அதை அவர் உணர்கிறார். இதன்மூலம் அவர் இறைவனை நெருங்குகின்றார். நேசத்தால், பாசத்தால் பள்ளிகொள்கின்றார்.

4. நம் அறிவுக்கு எட்டியதைக் கொண்டும், அன்றாட அனுபவத்தைக் கொண்டும் சொல்வதானால், மற்ற மதங்களும், கொள்கைகளும் மனிதன் உலக வாழ்க்கை யிலிருந்து தன்னை முற்றாகப் பிடுங்கிக் கொண்டாலன்றி, அவன் தனது ஆன்மீக இலட்சியங்களை அடைய முடியாது என்றும், இறைவனின் ராஜ்யத்துக்குள் நுழைய முடியாது என்றும் போதிக்கின்றன. அக்கொள்கைகளின்படி மனிதன் உலக வாழ்க்கையை பின் அத்தனை ஆசாபாசங்களிலிருந்தும் தான் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகளிலிருந்தும் தன்னை முற்றாக விடுவித்துக்கொள்ள வேண்டும்.

இந்த வகையில் நோன்பு, அவர்களுக்கு முக்கியமானதாகும். இந்த முறையில் நோன்பு நோற்கும் மனிதர்கள், தாங்கள் வாழ்க்கையில் தோல்வியுற்றதை மறைப்பதற்கு, நோன்பை ஒரு போர்வையாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால், இஸ்லாம் கற்றுத் தரும். நோன்பு வாழ்க்கையைவிட்டு ஓடுவதற்கல்ல. வாழ்க்கையோடு பிணைந்து, இனிய முறையில் வாழ்வதற்கே. வாழ்க்கையிலிருந்து தப்பிப்பதற்கல்ல ஆன்மீக ஆயுதம் கொண்டு வாழ்க்கையில் நுழைந்து நுகர்வதற்கே வாழ்க்கையைப் புறக்கணிப்பதற்கல்ல வாழ்க்கையின் அகத்தையும் புறத்தையும் ஒழுக்கத்தால் அலங்கரிப்பதற்கே.

இஸ்லாம் பணித்துள்ள நோன்புமுறை மதத்திலிருந்து நித்திய வாழ்வை நீக்கிவிடுவதற்காக அல்ல; அல்லது ஆன்மாவை உடலிலிருந்து பிரிப்பதற்காகவும் அல்ல; நித்திய வாழ்வில் நீந்திக்களிப்பதற்கே! ஆன்மாவை உடலோடு ஐக்கியப்படுத்துவதற்கே.!!




இஸ்லாமிய ஆண்டின் ஒன்பதாவது மாதமான புனித ரமலான் மாதத்தில்தான் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. சந்திரனின் சுழற்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய ஆண்டு கணக்கிடப்படுகின்றது. இதனைப் பிறையாண்டு எனப் பொதுவாக வழங்குவர். குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள் ரமலான் மாதம் நான்கு பருவ காலங்களிலும் வந்து விடுகின்றது. இதனால், முஸ்லிம்கள் எல்லாப் பருவ காலங்களிலும் நோன்பு நோற்றிடும் வாய்ப்பினைப் பெறுகின்றார்கள். இது ஓர் ஆண்டில் வெயில் காயும். கோடை காலத்தில் வரும். இன்னோர் ஆண்டில் மழைக் காலத்தில் வரும். இன்னொரு ஆண்டில் குலை நடுங்கும் குளிர் காலத்தில் வரும். ஆக, கோடையும், மழையும், குளிரும் நோன்பு நோற்பவர்களுக்கு எளிதாகிவிடுகின்றது.

ஆனால், மற்ற நோன்பு முறைகளில் ஆண்டில் குறிப்பிட்ட ஒரு பருவ காலத்தில் மட்டுமே நோன்பு வருகின்றது.

**நோன்பின் காலம்**

நோன்பு ரமலான் மாதத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாகும். நோன்பு வைகறைக்குச் சற்று முன்னர் / தொடங்கி சூரியன் மறைந்தவுடன் முடிவடைகிறது. நோன்புக் காலத்தைத் துல்லியமாகத் தெரிவிக்கும் கால அட்டவணைகள் இருக்கின்றன. ஆனால், இந்த அட்டவணைகள் கிட்டாதபோது கடிகாரத்தையும் சூரியனுடைய நிலைகளையும் வானிலை பற்றியும் நேரங்களைப் பற்றியும் நாளிதழ்களும், வானொலியும் தெரியத் தரும் தகவல்களைத் துணையாகக் கொள்ளலாம்.

ரமலானில் நோன்பு நோற்பது, முஸ்லிம்களின் ஒருமித்த கடமையாகும். இந்த நோன்புகளைத் தவிர, வேறு சில நாள்களிலும் நோன்பு நோற்றிடும்படி முஹம்மது (ஸல்) அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள்.

திங்கட்கிழமைகளிலும், வியாழக்கிழமைகளிலும், இஸ்லாமிய ஆண்டின் ரஜப், ஷஃபான் மாதங்களில் சில நாள்களிலும் நோன்புப் பெருநாளை அடுத்த ஆறு நாள்களிலும் நோன்பு நோற்கலாம். இரு பெருநாள்களையும் வெள்ளிக்கிழமைகளையும் தவிர, வேறு எந்த நாளிலும் நோன்பு நோற்கலாம்.

எந்த நிலையிலும் முஸ்லிம்கள் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பதை விட்டுவிடக் கூடாது. இந்த நோன்புகள் சந்திரனின் சூழற்சியைப் பொறுத்து 29 முதல் 30 நாள்கள் வரை இருக்கும்.

நோன்பு இஸ்லாத்தின் தூண்களில் ஒன்றாகும். தகுந்த காரணங்களின்றி, அதனை நிறைவேற்றிடத் தவறுவது தண்டனைக்குரிய பாவமாகும்.

நோன்பு, மனிதனுக்குப் பல வகையில் நன்மையளிக்கும் என்பதை அறிந்த இறைவன் இன்னும் சில சந்தர்ப்பங்களில் நோன்பை விதித்திருக்கின்றான்.

கொடுத்த வாக்குறுதியை முறித்துவிட்டால், அதற்கு ஈடாக மூன்று நாள்கள் நோன்பிருக்க வேண்டும்.

ஒருவர், தனது மனைவியை தாய்க்கு ஒப்பிட்டுத் தனக்கு ஆகாதவள் என்று கூறிப் பின்னர் மீண்டும் அவளோடு சேர விரும்பினால், இவ்வாறு ஒப்பிட்டுக் கூறியதற்குப் பரிகாரமாக இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும்.

(திருக்குர்ஆன் 2:183, 5:92, 58:1-4)

வாக்குறுதியை ஒருவர் முறித்துவிட்டால், அதற்குப் பரிகாரமாக அவர் பத்து வறியவர்களுக்கு உணவு அளித்தல் வேண்டும், அல்லது உடை அளித்தல் வேண்டும். அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால், அவர் ஓர் அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அதுவும் முடியவில்லையென்றால், மூன்று நாள்கள் நோன்பு நோற்க வேண்டும் (அல்குர்ஆன் 5:92). தன் மனைவியிடம் மேற்சொன்ன பொறுப்பற்ற சொற்களைக் கூறுபவர், அதற்குப் பரிகாரமாக ஓர் அடிமையை விடுவித்தல் வேண்டும்; அல்லது விடுதலைக்கான பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால், தன் மனைவியை நெருங்குவதற்கு முன்பு தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் அவர் நோன்பு நோற்க வேண்டும். அவரால் நோன்பு நோற்க

இயலவில்லை என்றால், அறுபது ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும் சாப்பாட்டை அல்லது அறுபது பேர்களுக்கு உள்ள ஏழைகளிடையே பங்கிட வேண்டும். நிறைவேற்ற முடியாத செயல்களுக்குப் பதிலாக நோன்பு நோற்கும்படி கட்டளையிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களும் உள்ளன (குர்ஆன் 58:1-4, 2:196).

**நோன்பு நோற்கக் கடமைப்பட்டவர் யார் ?**

பின்வரும் தகுதிகளையுடைய முஸ்லிம்கள் ரமளான் மாதத்தில் நோன்பு நோற்பது கட்டாயமாகிறது.

1) மனத்தாலும் உடலாலும் தகுதியுடைய வராக இருத்தல். அதாவது, புத்தி சுவாதீனமும் உடல் உள்ளவராயிருத்தல்.

2) தகுந்த வயதுடையவராயிருத்தல். அதாவது, பருவம் அடைந்து நல்லது கெட்டதுபுரியும் வயது. இது சாதாரண மாக 14 வயதாகும். இந்த வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நோன்பினை நோற்றிட உற்சாகமூட்ட வேண்டும். அப்போதுதான், அவர்கள் பருவமடைந் தவுடன் நோன்பு நோற்பதற்கு உள்ளத் தளவிலும் உடலளவிலும் தயாராக இருப்பார்கள்.

3) ஒரே இடத்திலிருந்து, அதாவது ஐம்பது மைல் அல்லது அதற்கு மேற்பட்ட தொலைவுக்குப் பயணம் செய்யாதிருத்தல்.

4) பசி, தாகம் முதலியவற்றைத் தவிர, உடலிலோ உள்ளத்திலோ தீங்கு எதனை யும் நோன்பு அனேகமாக விளைவிக்காது என்று ஓரளவேனும் நிச்சயமாயிருத்தல்.

**சில விதிவிலக்குகள் பின்வருபவர்கள் நோன்பு நோற்கத் தேவையில்லை.**

1) பருவம் அடையாத மற்றும் போதிய அறிவு வளர்ச்சி இல்லாத குழந்தைகள்.

2) புத்தி சுவாதீனமில்லாதவர்கள். மேற் சொன்ன இரு வகையினரும் நோன்பு நோற்கும் கடமையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டவர்களாவர். அவர்கள் நோன்பு நோற்காதிருப்பதற்குப் பதிலா கவோ, ஈடாகவோ எதையும் செய்ய வேண்டியதில்லை.

3) மிக முதுமை அடைந்து நோன்பு நோற்பதற்கு வேண்டிய ஆற்றலின்றி, பசிசை தாகத்தை தாங்கிக்கொள்ள இயலாதவர்கள். ஆனால், இத்தகைய வர்கள் நோன்பு நோற்பதற்குப் பதிலாகக் குறைந்தது ஒவ்வொரு நாளும் ஓர் ஏழை முஸ்லிமுக்கு நிறைவாக உணவளிக்க வேண்டும்.

அல்லது அதற்கு ஈடான பொருளை அல்லது தொகையை அளிக்க வேண்டும். இதில் அடங்கியுள்ள கருத்து என்னவெனில், இத்தகைய முதியவர்கள் தங்களால் முடியுமானால், ரமலான் மாதத்தில் ஒரு நாளைக்காவது நோன்பு நோற்க வேண்டும். மற்ற நாள்களுக்கு விதிக்கப்பட்ட முறையில் ஈடு செய்ய வேண்டும். இல்லாவிட்டால், அசட்டையாக இருந்ததற்கு அவர்கள் பொறுப்பாவார்கள்.

4) நோன்பு நோற்பதனால், தங்களுடைய ஆரோக்கியம் கடுமையாகப் பாதிக்கப் படக்கூடிய நிலையிலுள்ள நோயாளிகள், அவர்கள் நோயிலிருக்கும் வரையில் நோன்பைத் தள்ளிப் போடலாம். ஆனால், பின்னர் எத்தனை நோன்புகளை விட்டார்களோ, அத்தனை நோன்பு களையும் நோற்றாக வேண்டும்.

5) ஏறத்தாழ 50 மைல்கள் அல்லது அதற்கு மேற்பட்ட தொலைவுக்குப் பயணம் செய்பவர்கள். இவ்வாறு பயணம் செய்ப வர்கள் பயணம் முடியும்வரையில், நோன்பு நோற்பதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம். எனினும், விட்டுப் போன நோன்புகளுக்குப் பதிலாக பின்னர் நோன்பு நோற்றாக வேண்டும். ஆனால், அதிக சிரமம் இல்லாவிட்டால், பயணக் காலத்திலும் நோன்பை விடாமலிருப்பது நல்லது.

6) கர்ப்பமுற்றிருக்கும் பெண்களும், குழந் தைகளை வைத்திருக்கும் தாய்மார்களும் தங்களுடைய ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடியதாயிருந்தால், நோன்பு நோற்பதைத் தற்காலிகமாக விட்டு விடலாம். ஆனால், பின்னர் விட்டுப் போன நோன்புகளுக்குப் பகரமாக நோன்பு நோற்க வேண்டும்.

இஸ்லாத்தின் இதரக் கடமைகளைத் தொடங்குவதற்கு முன்பு எவ்வாறு நிய்யத்



செய்து கொள்கின்றோமோ, அதேபோன்று நோன்பு எண்ணம் நோற்கும்போதும் நிய்யத் செய்ய வேண்டும். அதாவது, இறைவனுக்குப் பணிந்து, அவனுக்காகவே அந்தக் கடமையைச் செய்யத் தொடங்குவதாக உறுதி பூண வேண்டும்.

நோன்பிருப்பது நன்றாக நினைவிருந்தும் உணவுகளை உட்கொண்டால், அல்லது ஏதேனும் பானங்களைப் பருகினால், அல்லது வீடு கூடினால் நோன்பு முறிந்து விடும்.

இஸ்லாமியச் சட்டங்கள் அனுமதிக்கின்ற நியாயமான காரணங்கள் ஏதுமின்றி, வேண்டு மென்றே மேலே சொன்னவற்றில் ஏதேனும் ஒன்றைச் செய்வது குற்றமாகும். இதற்கான பரிகாரம் 60 நாள்கள் தொடர்ந்து நோன்பிருப் பதாகும். இதற்கான இரண்டாவது பரிகாரம் 60 ஏழைகளுக்குப் போதிய அளவு உணவு அளிப்பதாகும். அத்தோடு குறிப்பிடப்பட்ட நோன்புகளையும் ஒவ்வொன்றாக நோற்றாக வேண்டும்.

சில விதிவிலக்குகள் என்ற தலைப்பின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சட்டப்படியான காரணங் களுக்காக ரமளான் மாதத்தில் நோற்க வேண்டிய நோன்பல்லாத வேறு நோன்புகள் முறிக்கப்பட்டு விட்டால், அவ்வாறு நோன்பை முறித்தவர் ஒரு நோன்பிற்கு ஒரு நோன்பு என்ற விகிதத்தில் பின்னர் நோன்பு நோற்க வேண்டும்.

நோன்பின் நினைவில்லாமல், ஒருவர் நோன்பை முறிக்கக் கூடிய செயலைச் செய்யத் தொடங்கிய பின்னர், நாம் நோன்பிருக்கின்றோம் என்று உணர்ந்தவுடனேயே, அச்செயலை நிறுத்திக் கொண்டால், அந்த நோன்பு முறிந்ததாகக் கொள்ளப்படாது.

ரமலான் மாதத்தின் நோன்புகள் முடிந்த வுடன் ஃபித்ரா என்று சொல்லப்படும் தர்மத்தை வழங்கிட வேண்டும்.

**பொதுவான சில பரிந்துரைகள்**

நோன்பிருக்கும் காலங்களில், குறிப்பாக ரமளான் மாதத்தில் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டுமென முஹம்மது (ஸல்) அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள்.

1) நோன்பு ஆரம்பிக்கும் நேரத்தில் அதாவது வைகறைக்கு முன், எளிதான உணவுகளையே உட்கொண்டு நோன்பை ஆரம்பிக்க வேண்டும்.

2) மாலையில் சூரியன் அடைந்த பிறகு. 'இறைவனே! உனக்காகவே நாங்கள் நோன்பிருந்தோம். நீ அருளிய உணவைக் கொண்டே நாங்கள் இப்பொழுது நோன்பைத் துறக்கிறோம்" என்று சொல்லி, மூன்று பேரீச்சம் பழங்களையும் சுத்தமான தண்ணீரையும் கொண்டு நோன்பைத் துறக்க வேண்டும்.

3) உங்களுடைய உணவுகள் முடிந்த வரையில் எளியதாக (இலேசானதாக) இருந்திட வேண்டும். ஏனெனில், அதிக மாக உண்பது கூடாது என்று முஹம்மது (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

4) சுன்னத் தொழுகையான தராவீஹ் தொழுகையைத் தொழ வேண்டும்.

5) உறவினர்களையும், நண்பர்களையும், நல்லவர்களையும் சந்தித்து ஒருவருக் கொருவர் அன்பைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். மனிதாபிமான பணிகளை விரைவுபடுத்திட வேண்டும். விரிவு படுத்திட வேண்டும்.

6) திருக்குர்ஆனை ஓதுவதையும், அதன் பொருளைப் புரிந்து கொள்ளும் முயற்சி களையும் தீவிரப்படுத்த வேண்டும்.

7) பொறுமையும், அடக்கமும் அதிகப்படுத் திட வேண்டும்.

மனத்தை அடக்கிப் புலன்களைக் கட்டுப் படுத்த வேண்டும். குறிப்பாக, நாவை மிக எச்சரிக்கையோடு பயன்படுத்த வேண்டும். அனாவசியமான பேச்சுகளைத் தவிர்த்திட வேண்டும். சந்தேகங்களையும், சபலங்களையும் உள்ளத்திலிருந்து பிடுங்கியெறிந்திட வேண்டும்.

- இஸ்லாம் உங்கள் பார்வைக்கு நூலிலிருந்து

# ரமழானே வருக!

## பெருமானார் (ஸல்) அவர்கள் ரமழான் மாதத்திற்கு முந்தைய ஷாபான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையில்

# ரமழானை வரவேற்று ஆற்றிய உரை!

மக்களே!

**உங்களுக்கு எதிரே அருளை அள்ளி வழங்கிடும் ஒருமாதம் வருகின்றது. அது அருளின் மாதம், கருணையின் மாதம், பாவமன்னிப்பை வழங்கிடும் மாதம். எல்லா மாதங்களின்றும் (அல்லாஹ்விடம்) சிறந்த மாதம். அதன் நாட்கள் ஏனைய எல்லா நாட்களையும் விட சிறந்த நாட்கள். அதன் இரவுகள் இரவுகளிலெல்லாம் சிறந்த இரவுகள். அதன் மணித்துளிகள், மணித் துளிகளிளெல்லாம் சிறந்த மணித்துளிகள்.**

அது அல்லாஹ்வின் விருந்தினராக ஆகிட உங்களைஅழைக்கும் மாதம். அது அல்லாஹ் வுடன் நெருங்கி இருப்பவர்களோடு நீங்களும் இருக்க உங்களை அழைக்கும் மாதம். நீங்கள் விடும் ஒவ்வொரு மூச்சும் அல்லாஹ்வின் புகழைப் பாடுகின்றது.

உங்களுடைய தூக்கம் ஒரு வணக்கம். உங்களுடைய செயல்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

உங்களுடைய வேண்டுதல்களுக்கு துஆக் களுக்குப் பதில் அளிக்கப்படுகின்றது. ஆகவே உங்கள் அல்லாஹ்விடம் ஆரோக்கியமான உடலைத் தந்திடும்படி கேளுங்கள். உங்கள் இதயத்தை விசாலாமாக்கித் தரும்படி கேளுங்கள், இதன் வழி நீங்கள் நோன்பு நோற்கும் தினத்தில் ஆரோக்கியத்தையும் அவனுடைய அருள் மறையை ஓதும் ஆரோக்கியத்தையும் கேளுங்கள், பெறுங்கள். இந்த மாண்புமிகு மாதத்தில் பாவ மன்னிப்பைப் பெற முடியாதவர்களே, சோகத் திற்குக் சொந்தக்காரரர்கள். அந்த நியாயத் தீர்ப்பு நாளின் பசியையும், தாகத்தையும், நோன்பு காலத்தின் பசியோடும், தாகத்தோடும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

ஏழைகளுக்கு வாரி வழங்குங்கள், முதியவர் களை கண்ணியப்படுத்துங்கள், இளையவர் களிடம் இரக்கம் காட்டுங்கள். உங்களுடைய இரத்தப் பந்தங்களிடம் நல்ல உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் நாவைப் பேணுங்கள், பார்த்திட அனுமதிக்காதவற்றிலிருந்து உங்கள் பார்வையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

கேட்கக் கூடாது என விலக்கப்பட்டவற்றி லிருந்து காதுகளைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அநாதைகள் மீது அன்பு காட்டுங்கள், அதனால் உங்களின் மீது அல்லாஹ்வின் அன்பு காட்டப் படும்.

அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேளுங்கள். துஆவிற்காக அல்லாஹ்விடம் உங்கள் கைகளை இந்த நேரங்களில் உயர்த்துங்கள். ஏனெனில் இவை தாம் நேரங்களிலெல்லாம் சிறந்தது. அல்லாஹ் தன் படைப்பினங்களை இந்த மாதத்தில் கருணையோடு பார்க்கின்றான். அவர்கள் கேட்பவற்றிற்குப் பதில் சொல்லுகின் றான். அவர்கள் அவனிடம் கேட்பவற்றை யெல்லாம் கொடுக்கின்றான்.

மக்களே! உங்கள் ஆத்மாக்கள் உங்கள் செயல் களைச் சார்ந்தே இருக்கின்றன. ஆத்மாக்களை பாவமன்னிப்புக் கொண்டு விடுதலை செய்யுங்கள். அவற்றின் அழுத்தங்களை, பாரங்களை நீண்ட நேரம் "சஜ்தா" செய்வதன் மூலம் எளிதாக்குங்கள். இதை உங்கள் நினைவில் நிறுத்துங்கள். அல்லாஹ் தன் ஆளுமையைக் கொண்டு உறுதியளிக்கின்றான்.

"தொழுபவர், நீண்டநேரம் சஜ்தா செய்பவர் இவர்களுக்கு இந்த பிரபஞ்சத்தின் அதிபதியின்



vaigarai velicham official

முன் அவர்கள் நின்றிடும்போது எந்தத் தண்டனையுமில்லை, எந்த பயமுமில்லை.

மக்களே! இந்த மாதத்தில் நோன்பு நோற்கும் ஒரு மனிதனுக்கு, நோன்பு துறக்க விருந்து தரும் ஒருவர்,ஒருவரை விடுதலை செய்தவராவார். அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக் கப்பட்டு விடும். இதைக் கேட்டுக் கொண்டிருந்த சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொன்னார்கள்.

எங்களில் எல்லோருக்கும் நோன்பாளிகளை அழைத்து விருந்து வைக்கும் அளவுக்கு வசதி இல்லையே?

இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள்

"நீங்கள் நோன்பு துறக்க வைக்கும் விருந்து ஒரு மிடறு தண்ணீராக இருந்தாலும் அல்லாஹ் இந்தப் பெருங்கூலியைத் தருகின்றான்."

இந்த மாதத்தில் சிறந்த ஒழுக்கங்களைப் பேணும் ஒருவர் "சிராத்' பாலத்தை எளிதாகக் கடந்து விடுவார்.அடுத்தவர்களின் குறைகளுக்கு ஈடு செய்பவர் பலன் பல அடைவார்.

அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில் அவர்மீது கொள்ளும் கோபத்தையும் குறைத்துக் கொள்வான்.

ஓர் அநாதையைக் கண்ணியப்படுத்துபவரை அல்லாஹ் நியாயத் தீர்ப்பு நாளில், கண்ணியப் படுத்துவான். தனது இரக்கத்தை விசாலப் படுத்துபவர் மீது நியாயத் தீர்ப்பு நாளில் அல்லாஹ் தன் இரக்கத்தை விசாலப்படுத்துவான்.

"தன் உறவினர்களின் உறவைத் துண்டிப்ப வரிடமிருந்து அல்லாஹ் தன் இரக்கத்தை துண் டித்து விடுவான். இந்த மாதத்தில் (ரமழான் மாதத்தில்) சிறப்பான தொழுகையை தொழு பவருக்கு அல்லாஹ் நரகத்தை தூரமாக்குவான். இந்த மாதத்தில் கூடுதலான நஃபிலான, பரிந் துரைக்கப்பட்ட ஒரு தொழுகையை நிறைவேற்று பவருக்கு அல்லாஹ் 70 நஃபீலான பரிந்துரைக் கப்பட்ட தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான்.

இந்த மாதத்தில் கடமையாக்கப்பட்ட தொழுகையை நிறை வேற்றுபவனுக்கு அல்லாஹ் 70 தொழுகைகளின் நன்மையைக் கொடுப்பான். இந்த மாதத்தில், அதிகமான தொழுகைகளை தொழுபவரின் சுமை நியாயத் தீர்ப்பு நாளில் எளிதாக்கப்படும்.

இந்த மாதத்தில் திருக்குர்ஆனின் ஒரு வசனத்தை ஓதுபவருக்கு இதர மாதங்களில் மொத்த திருக்குர் ஆனையும் ஓதிய நன்மை கிடைக்கும்.


மக்களே! இந்த மாதத்தில் சொர்க்கத்தின் வாசல்கள் திறந்திருக்கும். ஆகவே அல்லாஹ் விடம் உங்களுக்கு அதை ஒருபோதும் உங்களுக்கு மூடிவிட வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் நரகத்தின் வாசல்கள் மூடியே இருக்கும். உங்கள் விஷயத்தில் அது எப்போதும் மூடியே இருக்கட்டும் என துஆச் செய்யுங்கள்.

இந்த மாதத்தில் ஷைத்தானை கட்டிப் போட்டிருப்பான் அல்லாஹ். அந்த ஷைத்தான் ஒருபோதும் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்திட அனுமதிக்க வேண்டாம் என துஆச் செய்யுங்கள்.

**ஆதாரம் – ''பைஹக்கி''**





**அமெரிக்காவின் நிறவெறிக் கொடுமைகளுக்கு எதிராக இஸ்லாத்தை முன் வைத்துப் போராடி தன் உயிரைத் தந்த மாவீரனின் வாழ்க்கை வரலாறு.**

**அமெரிக்காவின் நிறவெறி கொள்கைகளுக்கு எதிராகஅவர் வைத்த முழக்கங்கள்**

# நான் ஏன் ஓர் அமெரிக்கன் அல்ல?

**நான் அமெரிக்காவிலிருந்து வருகின்றேன். ஆனால் நானொரு அமெரிக்கன் அல்ல.** நான் அடிமைகளின் வாரிசு. வெள்ளை நிற வெறியர்களால் கொடுமைகளுக்கு ஆளாக்கப் பட்டவன்.

அமெரிக்க சுதந்திர உலகின் முன்னோடி எனக் கூறிக்கொள்கின்து. அங்கே ஒரு கறுப்பன் வீதியிலே உலா வர முடியாது. அவன் சுதந்திர மாக நின்று ஒரு “கப்’ தேனீர் அருந்த முடியாது. இது என்ன சுதந்திரம்? என்பனவற்றை அமெரிக் கர்களிடமிருந்துதான் அறிந்திட வேண்டும் என அவாவுறுவோர் அறிவீனர்களே!

நானும் என்னோடு வாழும் 2.5 கோடி கறுப்பர்களும் அமெரிக்க ஜனநாயகத்தின் பலிகடாக்கள். அமெரிக்க நயவஞ்சகத்தின் அடிமைகள். உலகுக்கே நாங்கள்தாம் வழிகாட்டிகள் எனக்கூறிடும் யோக்கியதை அமெரிக்கர்களுக்கு அறவே கிடையாது.

நாங்கள் அமெரிக்காவுக்கு அடிமை சந்தையின் விற்பனை பொருள்களாக அடிமைச் சரக்கு கப்பலில் வந்தவர்கள். உல்லாசக் கப்பல்களாக “குவின்மேரி” கப்பலிலோ மேபிளோவர் கப்பலிலோ வந்தவர்களல்ல.

நாங்கள் (கறுப்பர்கள்) அமெரிக்க மண்ணில் மிதிக்கும்போது கைகளிலும், கால்களிலும் இரும்புச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டுக் கடத்தி வரப்பட்டவர்கள். இன்னும் அந்தப் பிணைப்புகள் அறுபடவில்லை, நாங்கள் கறுப்பர்கள் அமெரிக்கா வந்திறங்கிய விற்பனை சரக்குகள்.

உலக நாடுகளைதனது அடிமை நாடுகள்என்ற அகந்தையோடு அணுகும் நாடு அமெரிக்கா. 1864களிலே பிரிட்டன், ஜெர்மனி,போர்த்துகீஸ் ஆகிய நாடுகள் உலகில் சிலபகுதிகளை காலணி நாடுகளாக அடிமைநாடுகளாக வைத்திருந்தன.

ஆனால் இன்று உலக நாடுகள் அனைத்தையும் தனது காலணி நாடுகளாக நடத்தி வருகின்றது அமெரிக்கா. நவீன ஏகாதியத்தியம் அமெரிக்கா.

உலகிலேயே அமெரிக்காவில் மட்டும்தான் அடிமைகள். அதாவது உரிமைகள் மறுக்கப் பட்டவர்கள் வாழுகின்றார்கள்.



vaigarai velicham official

வடக்கு ஆப்பிரிக்காவில் ஒரு கோடியே 10 லட்சம் ("11 மில்லியன்") மக்கள் - கறுப்பர்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள். அங்கோலாவில் 50 லட்சம் மக்கள் மட்டுமே - கறுப்பர்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள். ஆனால் அமெரிக்காவில் மட்டும்தான் 2.5 கோடி மக்கள் அடிமைகளாக வாழுகின்றார்கள்.


செவ்விந்தியர்களைக் கொலை செய்துவிட்டு அபகரித்த பூமியில்தான் அமெரிக்கர்கள் வாழுகின்றார்கள். ஆப்பிரிக்காவிலிருந்து கடத்தி வரப்பட்ட கறுப்பர்களின் உழைப்பால் உயர்ந் தவர்கள்.

உலகின் கனிமங்களைக் கொள்ளையடித்து வாழ்பவர்கள் - இவர்கள் நவீன ஆதிக்க வெறியர்கள்.

நான் என்னை விடுவித்துக் கொண்டவன். நான் இந்த விடுதலைக்காக ஏற்றுக்கொண்ட மார்க்கம். என்னை ஆரியனின் கீழ் உலகில் எங்கே வேண்டுமானாலும், நான் என்ன வேண்டு மானாலும் செய்யலாம். யாருக்கும் எந்த நிலையிலும் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டாம் எனப் பிரகடனப்படுத்துகின்றது.

ஆனால் நான் நல்லவனாகவும், நல்லன வற்றையே நாடுபவனாகவும், நல்லவற்றது செய்பவனாகவும் இருக்கவேண்டும் என்கின்றது.


இங்கே "கனா"வில் குழுமி இருக்கும் அனை



வருக்கும் அல்லாஹ் புரட்சிகர சிந்தனை களையும், நல்ல ஆரோக்கியத்தையும் தருவானாக.

அஸ்ஸலாமு அலைக்கும்.

"Why I am not an amerIcan" ஏன் நான் ஒரு அமெரிக்கன் அல்ல என்ற தலைப்பில் "கனா"வில் நடந்த உலக கறுப்பர்கள் விடுதலை நாளில் மால்கம்-X ஆற்றிய உரையிலிருந்து எடுக்கப்பட்டசில முத்தான முழக்கங்களே தரப்பட்டுள்ளன.


அமெரிக்காவின் நிறவெறி கொள்கையை இஸ்லாத்தை முன் வைத்து முறியடித்த மாவீரன் மால்கம் X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத். தான் இஸ்லாத்தை ஏற்றார், அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான கறுப்பு நிறத்தைக் கொண்டவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். நிறவெறிக் கொடுமைகளிலிருந்து நிரந்திரமாக மீட்டார்.

"ஹஜ்" பயணம் என்ற புனித மக்கா மாநகரம் சென்று இஸ்லாம் தொடங்கிய பூமியில் தன் கடமையை முடித்தார். சவூதி அரேபியா அரசின், அரசு விருந்தினர் என்ற கண்ணியத்தோடு.

16 ஆப்ரிக்கா நாடுகளுக்குச் சென்று இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்தார். லட்சக்கணக்கானவர்களை இஸ்லாத்தில் இணைத்தார். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யும் தனது பெரும் பயணத்தின் ஒரு பகுதியாக, "கேசியஸ் கிளே" என்ற உலக மகா குத்துச் சண்டை வீரனை முஹம்மத் அலீ கிளேயையும் இஸ்லாத்தில் இணைத்தார்.

ஆனால், அமெரிக்காவின் வெள்ளை நிறவெறியர்களால், இதைப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவர்கள் அதாவது, குழு கிளக்ஸ் கிளான் என்ற வெள்ளை நிற அமைப்பைச் சார்ந்தவர்கள் அமெரிக்காவின் உளவுத்துறையின் உதவியோடு மால்கம்-X அவர்களை பிப்ரவரி 21-1965 இல் கொலை செய்து விட்டார்கள்.

தொடர்புக்கு: 7401213394/7358278146/8148129887



தொடர்...

# ஃபாலஸ்தீன முஸ்லிம்கள்

## அகதிகளான வரலாறு

### பணமுண்டு நிலம் வேண்டும்?

பணத்தைக் கொண்டு கலீபா அப்துல் ஹமீத் அவர்களிடம் சாதிக்க இயலாததை, பாமர மக்களிடம் சாதிக்க சதி செய்தார்கள் யூதர்கள். இதற்கு உதுமானிய பேரரசில் தங்களுக்கிருந்த சுதந்திரத்தைத் தாராளமாகப் பயன்படுத்தி னார்கள்.

பாலஸ்தீனின் நிலபரப்பில் பெரும் பகுதி கழனி விவசாய நிலம். இங்கே அல்லலுற்றுக் கொண்டிருந்த விவசாயிகளைக்கண்டுபிடித் தார்கள். அந்த விவசாயிகளுக்கு ஆபத்தில் உதவி செய்வதைப் போல், கடன்களை வழங்கினார்கள். நிலங்களைப்பிணையாகப் பெற்றார்கள்.

கடனைத் திருப்பிச் செலுத்திட இயலாத வர்களின் நிலங்களைப் பிடுங்கிக் கொண்டார்கள். இப்படிக் கடன்களைத்தந்த திட்டம்தான் பின்னாளில் நில வங்கிகள் Land Banks எனப்பெயர் பெற்றன.

அன்றைய நாட்களில் பாலஸ்தீனில் இடங்களை வாங்கி வைத்துக் கொள்வது இதரப்பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களின் பழக்கங்களுள் ஒன்றாக இருந்தது. சிரியாவை சார்ந்த முஸ்லிம்கள், லெபனான் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் இவர்களெல்லாம், பாலஸ்தீனில் இடத்தைப் வாங்கி வைத்துக்கொள்வதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார்கள். இந்தியாவில் வாழ்ந்த முஸ்லிம்களும் இடங்கள் வாங்கி வைத்திருந் தார்கள்.

(Source: “The role of Indian Muslims in Palastine Question. A story of British and Palestinan Records”-by Taysir Jbara)

இந்த இடங்களை ஆங்கிலத்தில் Absentee Lands என்பார்கள். அதாவது உரிமையாளர்கள் அங்கே இல்லாத இடங்கள். இந்த இடங் களையும் அபகரிக்க தொடங்கினார்கள்.

பிற்றை நாள்களில் ஆள்களில்லாத நிலங்கள், நிலங்களில்லாத ஆள்களுக்கு என நியாயப்படுத்தி னார்கள். (Land without people are for people without Lands)



vaigarai velicham official

அதேபோல் நிலங்களை விற்றிட தயாராக இருந்தவர்களிடம் அவற்றை தாராளமான விலைகளைத் தந்து வாங்கினார்கள் யூதர்கள்.

இவர்கள் அள்ளிக் கொட்டும் அளவுக்கு மீறிய விலையில் மயங்கிய அப்பாவி முஸ்லிம்கள் தங்கள் இடங்களைத்தாராளமாக விற்றார்கள். அந்த அப்பாவி முஸ்லிம்களுக்கு அதற்குப் பின்னாலிருந்த பெரிய சதி புரியவில்லை.

இப்படிப் பலவகையாலும் இடங்களை கையகப்படுத்தி அவற்றில் யூதர்களை குடியேற்றி னார்கள்.

யூத குடியேற்றங்களில் முஸ்லிம்களை அண்டவிடவில்லை.

இதனூடே சந்தடியில்லாமல் முஸ்லிம்களை கடுமையான வட்டியிலும் கடனிலும் வீழ்த்தி னார்கள்.

கடனை வாங்கியவர்களின் நிலங்கள் மிகக் குறுகிய காலகட்டத்தில் யூதர்களின் கைகளுக்கு மாறின.

முஸ்லிம் விவசாயிகள் கடன்களைத் தீர்க்க நிலங்களைத்தாரைவார்த்துக் தந்துவிட்டு, அந்த நிலங்களிலேயே யூதர்களிடம் வேலைக்கமர்ந் தார்கள்.

நிலங்களை வாங்கிடும் யூதர்கள் ஏன் இப்படி அதிகமான விலையைத் தருகின்றார்கள் என்பதைப் பற்றியோ, ஏன் கடன்கள் இத்துணை தாராளமாகத் தரப்படுகின்றன என்பதைப் பற்றியோ முஸ்லிம்கள் சிந்திக்கவே இல்லை.

நிலங்கள் பெருவாரியாக கைமாறுகின்றன என்பதை அறிந்த ஜெரூசலத்தின் முஃப்தி முஹம்மத் தாகிர் அல் ஹூசைனி (இவர் ஹாஜி அமீன் ஹுஸைன் அவர்களின் தந்தை) அவர்கள் நிலவரத்தை சுல்தான் கலீபா அப்துல் ஹமீத் அவர்களுக்குத் தெரிவித்தார்கள்.

சுல்தான் அப்துல் ஹமீத் அவர்கள் ஆணை ஒன்றைப்பிறப்பித்தார்கள். அந்த ஆணையின் அடிப்படையில் எல்லா இடவிற்பனைகளும் பரிசீலனைக்குட்படுத்தப்பட வேண்டும்.

இந்தப் பரிசீலனையை மேற்கொள்ள ஓர் குழுவையும் அமைத்தார்கள்.

குறிப்பாக ஜெரூசலம் முத்தஸாரீப்பியா என்ற ஜெரூசலம் மாவட்டத்தில் இட பரிவர்த் தனை நடக்கின்றனவா? என்பது தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டது.

இதனால் யூதர்கள் முஸ்லிம்களை ஏமாற்றி நிலங்களை கையகப்படுத்துவது பெருமளவில் தடுக்கப்பட்டது. ஆகவே வேறு வழிகளைத் தேடினார்கள் யூதர்கள் (Source : Palestine Leader Haji Amin Al Hussaini :ByTaysir, Jbara Page 12/13)

இப்போது தியோடர் ஹெசில்இன் யூதப் பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை பெருமளவில் பெருகியது (Membership of the Jewish Congress)

அதேபோல் யூதர்களின் தேசிய நிதியில் (Jewish National Fund) வந்து குவிந்த பணத்திற்கும் அளவில்லை என்றானது.

இப்போது யூதர்களின் இந்த பாசிச இயக்கத்தில் யூத விஞ்ஞானிகளும், நோபல் பரிசுகளைப் பெற்ற யூதர்களும்இணைந்தார்கள். ஆரம்பத்தில் இஃது அடாத செயல்; இந்த இயக்கம் அசிங்கமானது என்றெல்லாம் எண்ணிய யூதர்களும் இதில் தங்களை இணைத்திட தொடங்கினார்கள். ஒரு காலக்கட்டத்தில் நோபல் பரிசு பெற்ற எட்டு யூத விஞ்ஞானிகள் இந்த இயக்கத்தில் தங்களை இணைந்திருந் தார்கள்.

பணபலம், ஆள்பலம், இவற்றை ஒருங்கி ணைத்து 200 ஆண்டுகளுக்குப்பின் யூதர்களுக் கென ஒரு நாட்டை உருவாக்கிடும் திட்டம் வலுப்பெற்றது. வேகமாகச் செயலில் கொண்டு வரப்பட்டது.

பல்வேறு குயுக்திகளாலும் தங்கள் பாதங் களை பாலஸ்தீனில் பதித்தபின் தங்கள் பாரம் பரிய வழிமுறையாம்சூழ்ச்சி, தீவிரவாதம் இவற்றைக் கையிலெடுத்தார்கள் யூதர்கள். உண்மையைச் சொன்னால் ஹெசில் இன் திட்டத்தில் உருவான ஜீயோனிஸ்ட்டுகள்* என்ற யூத பயங்கரவாதிகள், மனச்சாட்சியே இல்லாதவர்கள்.

*ஜீயோன் என்பது ஜெரூசலத்திலுள்ள ஒரு மரத்தின் பெயர். உண்மையைச்சொன்னால் இந்த மரத்தைச் சுற்றியுள்ள நிலங்களே தங்கள் நிலம் என வாதிக்கும் யூதர்களை ஜீயோனிஸிட்கள் என அழைப்பார்கள். தீவிரவாதமே இவர்களின் வழி. சுருக்கமாகச் சொன்னால் யூத தீவிரவாதிகள் என்று இவர்களை அழைக்கலாம். யூத பாசிசம் என்ற சொற்றொடரும்இந்தப் பொருளிலேயே பயன்படுத்தப்படுகின்றது. இன்றைய சொல்லாட்சியில் யூத தீவிரவாதமே, ஜீயோனிசம் என்றழைக்கப்படுகின்றது.அந்தத் தீவிரவாதத்தை செய்பவர்கள் ஜீயோனிஸ்ட்டுகள்.



இப்போது கலீஃபா விழித்துக் கொண்டார்கள் என்பதை யூதர்கள் தெரிந்து கொண்டார்கள். அதனால் அவர்கள் நிலங்களை பத்திரங்கள் வழி எழுதி வாங்கிடுவதை நிறுத்திக்கொண்டார்கள். தங்கள் பெயரில் எழுதி வாங்கிடாமலே இடங் களை வாங்கி யூதர்களை அந்த இடங்களில் குடியமர்த்திக்கொண்டார்கள், விற்றவர்களை - முஸ்லிம்களை உடனேயே அவ்விடம்விட்டு அகற்றினார்கள்.

இப்படி யூதர்கள் தகிடுத்தத்தங்கள் வழி தங்கள் குடியிருப்புகளைப் பெருக்கிக் கொண்டி ருந்த போதுதான்முதலாம் உலகப்போர் தொடங்கியது.

**முதல் உலகப் போர்**

இந்த உலகை உலுக்கிய முதல் உலகப்போர் ஆகஸ்ட்-4,1914ஆம் ஆண்டு தொடங்கியது. நவம்பர் 11,1918 ஆம் நாள் முடிவுற்றது.

இந்தப் போரில் இரண்டு அணிகள் மோதின. ஒரு அணியின் பெயர் செண்டரல் பவர்ஸ் (Central Powers) மத்திய கூட்டு நாடுகள். இந்த அணியில் ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் இடம் பெற்றன.

மற்றொரு அணியின் பெயர் அலைடு பவர்ஸ் (Allied Powers) கூட்டுநாடுகளின் அணி. இதில் இங்கிலாந்து, பிரான்ஸ்,பெல்ஜியம், ஷெர்பியா, ஆகிய நாடுகள் இடம் பெற்றன. ரஷ்யா 1915ஆம் ஆண்டும் இத்தாலி 1917ஆம் ஆண்டும் இந்த அணியில் சேர்ந்தன.

இந்தப் போருக்கு ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்கியதாகக் காரணம் கூறுவார்கள். ஆனால் போரின் உண்மையான காரணம் என்ன என்பது இன்றைய நாள்களின் வரலாற்றில் இப்படிப் பதிவாகி இருக்கின்றது. இதுவே உண்மையான காரணம்.

அது,

உலகின் ஒரு பெரும் நிலபரப்பை கிலாபத் என்ற இலாமிய ஆட்சி முறை சீரிய முறையில் ஆட்சிச் செய்து வந்தது. இந்த ஆட்சியின் பெயர் தான் உதுமானிய பேரரசு என்ற உதுமானிய கிலாபத்.

இந்த இலாமிய ஆட்சியைத் தகர்க்க வேண்டும். அந்த ஆட்சியின் கீழிருந்த அகண்டு விரிந்த நிலப்பரப்பை துண்டு துண்டாக சின்ன பின்னபடுத்திட வேண்டும். அவற்றில் தங்களுக் குச் சாதகமானவர்களை ஆட்சியில் அமர்த்திட வேண்டும் என்பதே நோக்கம்.

இதற்கான சதிகளை நீண்ட நாள்களுக்கு முன்னரே தீட்டி இருந்தார்கள் ஐரோப்பியர்கள். ஆமாம் அதன் அடிப்படையில் உதுமானிய கிலாபத் இன் பல்வேறு பகுதிகளிலும் கொள்கை குழப்பங்களை ஏற்படுத்தி இருந்தார்கள். அதற் கான அமைப்புகளை ஏற்படுத்தி இருந்தார்கள்.


vaigarai velicham official

அரபுமொழிபேசியவர்களிடம்அரபுதேசியம் ஒன்றை ஊட்டி வளர்த்தார்கள். அவர்களிடம் அரபு மொழி பேசு கின்றவர்களெல்லாம் ஒன்றாகிட வேண்டும் என்றார்கள். அவர்கள் அரபுக்கள் அல்லாதவர்களை வெறுக்க வேண்டும். எதிர்க்க வேண்டும் எனப் பாடஞ்சொல்லி தந்தார்கள். அரபுக்கள் அல்லாதவர்கள் அரபுக் களை எதிர்த்தாக வேண்டும்என்ற எண்ணத்தை வளர்த்தார்கள். பாரசீகர்களிடம், பாரசீக தேசியம் என்றொன்றை வளர்த்தார்கள்.

உதுமானிய கிலாபத் மையம்கொண்டிருந்த துருக்கியிலும் கிலாபத்திற்கெதிராக ஓர் அணியை உருவாக்கி இருந்தார்கள். இவர்கள் துருக்கி தேசியம் என்றொன்றை வளர்த்தார்கள். கமால் அத்தா துர்க் அதற்கு துணை நின்றார்.

அரபு மொழியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு துருக்கிமொழிக்கு முன்னுரிமை தர வேண்டும் எனப் பாடம் சொல்லி தந்தார்கள். செயலிலும் கொண்டு வந்தார்கள்.

இத்தனையும் துருக்கி கிலாபத்-ஐ சிதைக் கவும் அதன் நிலபரப்புகளைத் தங்களுக்குள் பங்கு வைத்துக் கொள்ளவும்மேற்கொள்ளப்பட்ட சதிகள். அதுதான் முதல் உலகப்போரின் உண்மையான உள்ளார்ந்த நோக்கம். இதனை வரலாற்று நூல் ஒன்று இப்படிப் பதிவு செய்கின்றது.

**அதன் ஆங்கில தலைப்பு**

Secret Ambitions of Eurupean nations to occupy turkish emprie:

"The Major nations of Europe namely Britian, Germany.Austria, Hengary, Russia, France and Italy, had individual and secret ambitions against one anotherin the attempt to occupy the Balkan penninsula onthe disintegration of the Ottaman Turkish Empire.There were many nationalist movements in Europefor gaining independence among Balkan countries.

Russia, Germany and Italy competed with one another.. . for supermacy".

இதன் பொருள் :

**துருக்கிப் பேரரசுதான் உதுமானிய பேரரசு**

**"ஐரோப்பாவின் முக்கிய நாடுகளான பிரிட்டன், ஜெர்மனி, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ரஷ்யா, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் தனித்தனியாகத் தங்களுக்குள் தங்களுக்குள் இரகசிய ஆசைகளை வளர்த்தன. உதுமானியப் பேரரசை உடைத்து பங்கு போட்டுக் கொள்வதற்கு! உதுமானிய பேரரசை பிளந்திடவும் அவற்றை சிறு சிறு பகுதி களாகப் பிய்த்துக் கொள்ளவும் பல சுதந்திர இயக்கங்கள் ஐரோப்பாவில் இயங்கிக் கொண்டிருந்தன. ரஷ்யா, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகள் உலகத் தலைமையைத் தங்களுடையதாக ஆக்கி தங்கள் உயர்வை நிலைநாட்டிக் கொள்ள போட்டியிட்டன."**

(ஆதாரம் : A class book of History by A.Ganapathy Raman P.36)

இப்படியொரு இரகசிய திட்டத்தை ஐரோப்பிய நாடுகள் உட்பட அனைத்து நாடுகளும் வைத்திருந்தன. அவற்றுள்

ஒன்றுதான் ஸ்கையிஸ் பிக்கோட் திட்டம் (Skies Picot) திட்டம்.




ஸ்கையிஸ் பிக்கோட் ஒப்பந்தம் 1916

**ஸ்கையிஸ் பிக்கோட் ஒப்பந்தம் 1916**

உலகப் போருக்குப் பின்னணியில் ஒரு பெரிய பாதகம் மறைத்து வைக்கப் பட்டிருந்தது என்றால், அந்த பாதகத் திற்குள் இன்னொரு இரகசிய திட்டம். அதுதான் ஸ்கயீஸ் பிக்கோட்திட்டம்.

இந்தத் திட்டம் பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டுக்கும் பிரான்ஸ் நாட்டுக்கும் இடையே நடந்த இரகசிய ஒப்பந்தம்.



இந்தத் திட்டத்தில் முதல் உலகப் போருக்குப் பின் உதுமானிய பேரரசை பிரிட்டனும், பிரான்சும் எப்படிப் பங்கு வைத்திட வேண்டும் என்பது தெளிவாக்கப்பட்டிருந்தது. அத்தோடு பாலஸ்தீனை என்ன செய்திட வேண்டும்? என்பதையும் குறிப்பிட்டிருந்தார்கள். அத்தனையும் எழுத்து வடிவம் பெற்றிருந்தன.

இந்த இரகசிய ஒப்பந்தத்தின்படி, பிரான்ஸ்சுக்கு உதுமானிய பேரரசின் ஒரு பகுதியாகிய லெபனானும் , சிரியாவும் வழங்கப்படவேண்டும். பிரிட்டன்ஈராக், ஜோர்டான் ஆகிய பகுதிகளை எடுத்துக் கொள்ளும்.

பாலஸ்தீனை கைப்பற்றி கையில் வைத்துக் கொள்ள வேண்டும். அதனை யாரிடம் எப்படி ஒப்படைக்க வேண்டும் என்பது பின்னர் முடிவு செய்யப்படும். அல்லது அந்தப் பகுதியில் பிரிட்டனும் பிரான்சும் கூட்டாட்சி நடத்தும். அரபு பெருநிலத்தைப் பொறுத்தவரை அவற்றைக் கூட்டுப் பகுதியாக சவுதி அரேபியா என்றும்,எமன் என்றும் பிரிட்டனும் பிரான்சும் தங்கள்கைகளில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இதில் வேதனையும் வேடிக்கையும் என்னவெனில் உதுமானியப் பேரரசின் அரபு பகுதிகளின் காப்பாளராகக் கருதப்பட்ட மக்காவின் ஷெரீஃப் ஹுஸைன் அவர்களிடம் பிரிட்டன் பிறிதொரு ஒப்பந்தத்தைச் செய்து கொண்டிருந்தது. அந்த ஒப்பந்தத்தில் போரில் (முதல் உலகப் போரில்) பிரிட்டனுக்கு அரபுகள் உதவி செய்திட வேண்டும். அந்த உதவிக்குப் பதிலாக போருக்குப் பின் உதுமானியப் பேரரசின் ஒரு பகுதியாகிய அரபு நிலத்தை ஷெரீஃப் ஹுஸைன் அவர்களிடம் பிரிட்டன் ஒப்படைத்துவிடும். இந்த ஒப்பந்தமும் எழுதப்பட்டு ஆக்கப்பட்டு கையெழுத்துப் போட்டுத் தரப்பட்டிருந்தது. இப்படி அரபுக்களை ஏமாற்றிட ஓர் திட்டம் மறுபுறம்.

### ஸ்கையிஸ்-பிக்கோட் ஒப்பந்தம்?

ஸ்கையிஸ் - பிக்கோட் ஒப்பந்தம் என்ற பெயர்: நயவஞ்சகத்தின் மொத்தப் பிரதிபலிப்பாக, திகழ்ந்த இந்த ஒப்பந்தம் மார்க்ஸ் ஸைக்யிஸ் (16.3.1879 - 16.2.1919) என்ற பிரிட்டன் நாட்டைச் சார்ந்தவராலும், பிரான்கோயிஸ் மாரிய் டெனில் பிக்காட் (21.2.1870 - 20.5.1951) என்ற பிரான்ஸ் நாட்டைச் சார்ந்தவராலும் செய்யப்பட்ட ஒப்பந்தம்.

இவர்கள் இருவரின் வாழ்க்கை வரலாற்றையும் பற்றிக்குறிப்பிடும் அனைத்துக் குறிப்புகளும் “Responsible for annexation of Arab lands into British and French Empire” ‘அரபு நிலங்களை பிரட்டிஷ் சாம்ராஜ்யத்தோடும், பிரஞ்சு சாம்ராஜ்ஜியத்தோடும் இணைத்தவர்கள்’ என்றே குறிப்பிடுகின்றார்கள். (Source : Biography of Mark Skies and Francois Marie Denis Picot A Modern History of Palestine)

### நயவஞ்சகம்

இப்படி ஒரே நாளில் ஒரு பக்கம் அரபுகளிடமும் மறுப்பக்கம் பிரான்சிடமும் ஒப்பந்தம் செய்து கொண்டன ஐரோப்பிய நாடுகள். இவர்களிடம் தாராளமாக ஏமாந்தன அரபு

நாடுகள்.

அரபுக்களை ஏமாற்றித் தங்கள் அணியில் இணைத்துக்கொண்ட இவர்கள், ஜீயோனிஸ்டு களையும் தங்கள் அணியில் வைத்திருந்தார்கள்.

**ஜெர்மனிக்கும் ஆசை**

துருக்கியைத் தன் அணியில் கொண்டிருந்த ஜெர்மனியும் உதுமானிய பேரரசை தன் ஆட்சி யின் கீழ் கொண்டுவந்திட வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தது என்பது வரை யிட்டுக் காட்டப்படவேண்டிய வரலாற்றுச் சதி.

போரின் தொடக்கத்தில் பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளைத் தன் அணியில் கொண்டிருந்த "அலைடு பவர்ஸ்" என்ற கூட்டு நாடுகளின் அணி பயங்கரமான இழப்புகளுக்கு

ஆளாகியது. ஜெர்மானியப் படைகளின் கைகள் மேலோங்கின. ஜெர்மனியின் கடல் வழித் தாக்குதலால் பிரிட்டன் நிலை குலைந்தது. இந்நிலையை யூத சியோனிஸ்ட்டுகள் அதாவது தியோடர் ஹெசில் வகையறாக்கள் தங்களுக்குச் சாதகமாகப்பயன்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

பிரிட்டன் நாட்டை அணுகி - 'போரில் நாங்கள் எங்களால் இயன்ற உதவிகளை யெல்லாம் உங்களுக்குச் செய்கின்றோம். எங்களுக்குத் தனி நாடு கிடைக்க உதவி செய்திட வேண்டும் எனக்கோரின.

அதேபோல் மொத்த ஐரோப்பாவையும் உங்களுக்கு உதவி செய்ய வைத்திட நாங்கள் உழைக்கின்றோம். போருக்காக ஒரு பெரும் நிதியையும் திரட்டித் தருகின்றோம். எதிரிகளின் போர்த்திட்டங்கள், இராணுவ இரகசியங்கள் இவற்றையும் அந்தந்த நாட்டு யூதர்களின் வழி திருடி உங்களுக்குத் தந்து விடுகின்றோம் என்றெல்லாம் ஆசைக்காட்டினார்கள்.

இதற்கு கைமாறாக நீங்கள் உதுமானிய பேரரசிலுள்ள பாலஸ்தீனை கைப்பற்றி எங்களிடம் ஒப்படைத்திட வேண்டும். அதில் நாங்கள் குடியேறிட அனைத்து உதவிகளையும் செய்து தந்திட வேண்டும் எனப்பேரம் பேசினார்கள்.

பிரிட்டன் என்ற ஆங்கில நாடு யூதர்களின் இந்தப் பேரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டது.

இந்நிலையில் பிரிட்டனுக்கு இன்னொரு நெருக்கடி.போர் எந்த நிலையிலும் தனக்குச் சாதகமாக முடியும் வகையில் இல்லை. மாறாக மொத்த ஆங்கில நாடும் கவிழ்ந்துவிடும் நிலை. ஆகவே தனக்கு உதவி செய்திட அமெரிக்கா வர வேண்டும் என எதிர்பார்த்தது பிரிட்டன். உண்மையைச் சொன்னால் அமெரிக்கா தங்கள் அணிக்கு சாதகமாகப் போரில் நேரடியாக இறங் கிட வேண்டும் என எதிர்பார்த்தது பிரிட்டன். தருணம் பார்த்துக் களத்தில் குதித்தார்கள் யூதர்கள். இந்தப் பணியையும் தாங்கள் செய்து தருவதாக ஒத்துக் கொண்டார்கள். ஆனால் கைமாறாக தங்களுக்குப் பாலஸ்தீனைப் பெற்றுத் தந்திட வேண்டும் என நிபந்தனை விதித்தார்கள்.

பிரிட்டன் இதனை ஒத்துக் கொண்டது. இப்படி ஒத்துக்கொண்டதை எழுதித் தந்திட வேண்டும் எனக் கேட்டார்கள். இந்தப் பின்னணியில் தான் பால்ஃபர் பிரகடனம் (Balfour Declaration) பிரிட்டனால் பிரகடனப்படுத் தப்பட்டது.

- தொடரும்...





# உமர் (ரழி)யின் ஒப்பந்தம்

**கலீபா உமர் (ரழி) அவர்கள் ஜெரூசலத்தில் செய்த ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை பல கோணங்களில் முக்கியத்துவம் வாய்ந்தது.**

அதில் மிகவும் முக்கியமானது கிருஸ்தவர்கள் யூதர்களை எந்த நிலையிலும் ஏற்றிட தயாராக இல்லாத நிலையிலும் கலீபா உமர் (ரழி) அவர்கள் யூதர்களுக்கு நிம்மதியாக வாழ்ந்திட வழிகண்டு தந்தார்கள்.

இந்த யூதர்கள் தாம் இன்று கிருஸ்தவ உலகத்தோடு இணைந்து கொண்டு, உண்மையைச் சொன்னால் கிருஸ்தவ உலகைக் கைகளிலேயே போட்டுக்கொண்டு இஸ்லாமிய உலகின் மீது சீறிப்பாய்கின்றனர். குழந்தைகளையும், பெண்களையும் குண்டு போட்டு தாக்கி அழிக்கின்றார்கள்.

யூதர்களை எங்களோடு வாழ்ந்திட அனுமதிக்காதீர்கள் என்று கிருஸ்தவர்கள் கலிபா உமர் (ரழி) அவர்களோடு வாதித்த வேலைகளில் யூதர்களுக்காக பரிந்து பேசிட யூதர்களிடம் எந்தப் பிரதிநிதியுமில்லை. அப்படி இருந்தாலும் அவர்களால் கிருஸ்தவர்களிடம் நின்று பேசிடும் நெஞ்சுரம் இருக்கவில்லை. யூதர்களின் வழக்கை அல்லது யூதர்களின் கோரிக்கையை கிருஸ்தவர்களிடம் சொல்லிடும் பொறுப்பையும் கலீபா உமர் (ரழி) அவர்களே நிறைவேற்றினார்கள்.

வரலாறு முழுவதும் நாதியற்றவர்களுக்காக வாதாட முஸ்லிம்கள் மட்டுமே முன்வந் தார்கள் என்ற உண்மை பாலஸ்தீன வரலாற்றிலும் பதிவானது.

கலீபா உமர் (ரழி) அவர்கள் யூதர்களுக்காக அளித்த அந்த சலுகை வரலாறு முழுவதும் வேறொரு முக்கியத்துவத்தைப் பெற்றது. கலீபா உமர் (ரழி) அவர்கள் ஜெரூசலத்தில் செய்த ஒப்பந்தம் "தி கவனன்ட் ஆஃப் உமர்" (The Covenant of Umar) என்று ஆங்கிலத்திலும், அல் உஹ்தீர் அல் உமரிய்யா" (Alabda al Umariyya) என அரபு மொழியிலும் வழங்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தை வேதவரிகளைப்போல் பிந்தைய நாள்களில் யூதர்கள் பயன்படுத்தினார்கள், தங்களுக்கு துன்பங்களும், துயரங்களும் வரும்போதெல்லாம் இந்த "அல் உஹ்தா அல் உமரிய்யாவை" துணைக்கு அழைத்தார்கள். கலீபா உமர் (ஏழி) அவர்கள் எங்களுக்கு வழங்கிய உரிமை என்று எடுத்துக்காட்டி முஸ்லிம் மன்னர்களிடம் வாதிட்டார்கள்.

இதனால் கலீபா உமர் (ரழி) அவர்களின் ஜெருசல ஒப்பந்தம் (அரபுமொழி எழுத்தாளர்களால் கலீபா உமர் (ரழி) அவர்களின் பைத்துல் முகத்திஸ் ஒப்பந்தம் என அழைக்கப்படும் ஒப்பந்தம்) ஒரு வரலாற்று ஒப்பந்தம் என்று பாதுகாத்து வைக்கப்படுகின்றது.

யூதர்களைப் பொறுத்தவரை அவர்கள் அதை தங்களுக்குக் கிடைத்த வாழும் உரிமைப் பிரகடனம் என்றுதான் பார்க்கின்றார்கள். எந்த அளவுக்கு இந்த ஒப்பந்தம் எதிர் வந்த நாள்களில் யூதர்களுக்கு பயன்பட்டது என்றால் பிந்தைய நாள் இஸ்லாமிய ஆட்சியாளர்கள் (கலீபாக்களான) உமர் பின் அப்துல் அஜீஸ்


vaigarai velicham official

(ரஹ்) (இஸ்லாமிய வரலாற்றில் இரண்டாவது உமர் என அழைக்கப்படுவர்) ஹாரூன் அல்ரஷீத் (ரஹ்) போன்றவர்கள் இந்த ஒப்பந்தம் எங்களைக் கட்டுப் படுத்தாது காரணம் நீங்கள் குழப்பங்களைச் செய்வதில் முன்னணியில் நிற்கின்றீர்கள்.

நாங்கள் இந்த ஒப்பந்தத்தில் காலத்திற்கேற்ப மாற்றங்களைச் செய்திடும் உரிமை உடைய வர்கள் எனச் சொல்லிட வேணடிய கட்டாயத் திற்குள்ளானார்கள். அந்த அளவுக்கு கீழறுப்பு வேலைகளைச் செய்தார்கள்.

இந்த அளவுக்கு இந்த ஒப்பந்தத்தால் யூதர்கள் வாலாறு தெடுகிலும் பயனடைந்தார்கள் பாதுகாப்பைப் பெற்றார்கள்.

இன்னும் பல ஆய்வாளர்கள் யூதர்கள்தாம். இந்த ஒப்பந்தத்தில் தங்களுக்கு எல்லாம். இருக்கின்றது என்கின்றார்கள். ஆனால், ஒப்பந் தத்தின் அரபு வடிவத்தில், அப்படி யொன்று மில்லை என்கின்றார்கள். இப்படி ஆய்வுக்கும் அரசியலுக்கும் உள்ளானது அந்த ஒப்பந்தம்.

இந்த அளவுக்கு யூதர்களுக்கு ஏற்பாடு களைச் செய்த தந்துவிட்டு கலீபா உமர் (ரழி) அவர்கள் மதினா, திரும்பினார்கள். மதினா திரும்பிய கலீபா அவர்களுக்கு ஒரு செய்தி வந்தது. ஷாமில் அல்லது பாலஸ்தீன் உட்பட்ட பகுதிகள் சிலவற்றில் கிளர்ச்சிகள் தொடங்கிவிட்டன என்பதே அது.

இந்தக் கிளர்ச்சியில் முக்கியமானது காஸா பகுதியில் நடந்த கிளர்ச்சிகள்! இந்தக் கிளர்ச்சி யில் நிரம்ப பங்கு யூதர்களுக்குண்டு. ஆனால், இஸ்லாத்தை நிலைநாட்டுவதை தங்கள் வாழ்க்கையாக ஆக்கிக்கொண்ட இஸ்லாமியத் தளபதிகள் காஸா பகுதியை நோக்கி அமர் பின் அல் ஆஸ் (ரழி) அவர்களை ஒன்பதாயிரம் படை வீரர்களோடு அனுப்பி வைத்தார்கள்.

அமர் பின் அல் ஆஸ் (ரழி) அவர்கள் கிளர்ச்சி களைத்தான் சந்திக்க சென்றார்கள் என்றாலும் அங்கே எதிரிகள் அணியில் ஒரு லட்சம் படை வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். அவர்கள் ரோமர்கள். இவர்களில் பெரும் பகுதியினர் எகிப்திலிருந்து தருவிக்கப்பட்ட வர்களே!

அமர் பின் ஆஸ் (ரழி) அவர்கள் அவர்க ளோடு போரிட்டார்கள். வென்றார்கள். முஸ்லிம் படை வீரர்களில் நூறு பேர் ஷஹீதா னார்கள்.

நமது ஊடகங்கள் "காஸா" பகுதி ஒரு நாடு என்பது போலும் அதனை ஹமாஸ் அனைத்து அதிகாரங்களோடும் இராணுவத்தோடும் ஆட்சி செய்து கொண்டிருப்பது போலும் ஒரு பிரம்மமையை உலக மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றன.

இஸ்ரேலைப் போலவே "காஸா"வும் ஒரு முழு நாடு என்பதே பெறப்படும் செய்தி. உண்மையில் தனது ஆட்சிக்கு உட்பட்ட ஓர் அகதிகள் முகாமின் மீது இஸ்ரேல் போர் தொடுத்துக் கொண்டிருக்கின்றது.

**இந்த அகதிகள் யார்?**

அனைவரும் பாலஸ்தீனத்தில் பிறந்த பூர்வீக குடிகள். பல தலைமுறைகளாக அங்கே வாழ்ந்து வருபவர்கள். இவர்களின் மூதாதையர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள்.

யூதர்கள் 1948 முதல் கட்டவிழ்த்திட்ட தீவிரவாதத்தால் தங்கள் சொந்த நாடாம், பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாகிய "காஸா" பகுதியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இவர்களில் பலர் இன்னும் தங்கள் வீடுகளின் திறவுகோல்களை கையில் வைத்திருக் கின்றார்கள்.

எதிர் தரப்பில் பதினைந்தாயிரம் பேர் உயிரிழந் தார்கள்.

ஆனால், எதிர் தரப்பில் தளபதியாக நின்ற அர்த்தாபூன் (Arthaboon) பாலஸ்தீனத்திலிருந்து தப்பி எகிப்துக்கு ஒடிவிட்டான்,

எகிப்தில் சூழ்ச்சியும் குதுமதியும் நிறைந்த யூதர்களுக்கு குறைவில்லை. ஏனெனில் யூதர்கள் ஜெரூசலத்தில் குடியமர்த்திடவே எகிப்தில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களைத்தான் தருவிப்பதாக இருந்தார்கள். ஆகவே, எகிப்தி லிருந்து தவறாமல் ஒரு தாக்குதல் வரும் என அமர் பின் ஆஸ் (ரழி) அவர்கள் எதிர்பார்த் தார்கள்.

அன்றைய இஸ்லாமியத் தளபதிகள் பெருமா னார் (ஸல்) அவர்களால் வார்த் தெடுக்கப்பட்ட மனிதப் புனிதர்கள், தங்கள் இலட்சியத்தில் காட்டிய ஈடுபாட்டைப் போலவே தூரநோக்கும் தொலைநோக்கும் கொண்டவர்களாக இருந் தார்கள். அதனால் அமர் பின் அல் ஆஸ் (ரழி) அவர்கள் தங்களது ஒருங்கிணைந்த தலைமைத்

தளபதி (Commander in Chief) அபூ உபைதா (ரழி) அவர்களுக்கு இப்படியொரு கடிதத்தை எழுதினார்:

"நான் இப்போது பாலஸ்தீனில் நின்று கொண்டிருக்கின்றேன். இங்கே நாம் மிகப் பெரிய ரோம படையொன்றை எதிர்கொண் டோம். அதில் ஒரு லட்சம் படை வீரர்கள் இருந்தார்கள். நாம் ஒன்பதாயிரம் முஜாஹிதீன்கள் மட்டுமே இருந்தோம். அவர்களது போர் வீரர் களில் பதினைந்தாயிரம் பேர் மாண்டார்கள். நம்மில் நூறு பேர் ஷஹீதானார்கள்.

நாம் அவர்களில் (700) ஏழு நூறு பேரை சிறைபிடித்தோம். அவர்கள் விட்டுச் சென்ற பொருள்களும் ஏராளம். முதல் தாக்குதலிலேயே ரோம் நாட்டுத் தளபதி கொலை செய்யப்பட்டு விட்டார். உங்களிடம் வேறு உத்தரவுகள் இருந்தால் அவற்றை நிறைவேற்றுவதில் நான் மகிழ்ச்சியடைவேன்.'

'என்னுடைய கருத்தின்படி நாம் முதன் முதலில் எகிப்தை வெற்றி கொண்டு விடுவது சிறந்தது. இதில் நொடிப்பொழுதும் நாம் தாமதித்திடக் கூடாது. நாம் உடனேயே சென்று அதைச் சுற்றி வளைத்தால் நாம் ஒரு பெரும் ஆபத்தைத் தவிர்த்தவர்களாவோம்.".

(Source: Commanders of the Muslim Army, Among the Companions of the Prophet)

விவகாரம் கலீபா உமர் (ரழி) அவர்களின் பார்வைக்கு வந்தது. முதலில் தயங்கிய உமர் (ரழி) அவர்கள் பின்னர் அனுமதி அளித்தார்கள். எகிப்து வெற்றி கொள்ளப்பட்டது.






மந்தைவெளியில் நடந்த ஈத்கா பள்ளிவாசலில் நடந்த சமூக நல்லிணக்கக் கூட்டத்தின்போது பேராசிரியர் இஸ்யாஸ் ரியாஜி கேள்விகளுக்கு பதில் அளிக்கிறார்...

# 44 ஆம் ஆண்டில் தாஃவா



17-09-2023 அன்று திண்டுக்கல்லில் இஸ்லாமிய அழைப்பு பணி செய்யப்பட்டது

## இறைவனின் தூதர்கள் ஏன்?

*“நபியே! நீர் சொல்வீராக!*

இதுவே என்னுடைய நேரிய வழியாகும். நான் அல்லாஹ்வின் பக்கம் உங்களை அழைக்கிறேன். நானும் என்னைப் பின்பற்றுபவர்களும், தெளிவான ஆதாரங்களின் மீதே இருக்கின்றோம். அல்லாஹ் மிகத் தூய்மையானவன். ஆகவே அவனுக்கு இணை வைப்போரில் நானும் ஒருவனல்லன்”

(அல்குர்ஆன் : யூசுப் 12:108)

*மனிதர்கள் தறிகெட்டும், நெறிகெட்டும் வாழ்ந்து, வாழ்க்கையில் தடுமாறிடும்போதும், அழிவின் விளிம்பில் நிற்கும்போதும் இப்படி நொந்துகொள்கின்றார்கள்.*

*“..........எங்கள் இறைவனே! நீ எங்களுக்குத் தூதர் ஒருவரை அனுப்பி இருக்க வேண்டாமா? அப்போது உன் வசனங்களைப் பின்பற்றி நாங்களும் - இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களாக முஸ்லிம்களாக ஆகி இருப்போம் என்று கூறாதிருக்கும் பொருட்டு நாம் உம்மை தூதராக அனுப்பி வைத்தோம்.” - அல்குர்ஆன் 28:47*

## இன்னும் இறைவன் பிரகடனப்படுத்துகின்றான்

இறைவனின் தூதர்கள் வந்தபின் அல்லாஹ்வுக்கு எதிராக மக்களிடம் ஆதாரம் ஏதும் இல்லாமலாகும் வகையில் தூதர்கள் பலரையும் அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அச்சமூட்டி எச்சரிக்கை செய்வார்கள். அல்குர்ஆன் - 4:165

*மனிதனை நெறிப்படுத்தி வழிகாட்டிட, இறைவன் ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் தன்னிடமிருந்து ஒரு தூதரை அனுப்பினான்.*

*அதில், இறுதியாக வந்த இறைவனின் தூதரே முஹம்மத் (ஸல்) அவர்கள்.*

*23 ஆண்டுகளுக்குள் அவர்கள் தங்கள் கடமையை நிறைவாகவே செய்து முடித்தார்கள். இறைவனின் வழிகாட்டுதல்களுக்கு ஓர் அழகிய முன்மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள்.*

*தனது விடைபெறும் ஹஜ்ஜின்போது லட்சத்திற்குமேல் அங்கு திரண்டிருந்த அந்த மக்களிடம் அதற்கான ஒப்புதலையும், சாட்சியத்தையும் பெற்றார்கள்.*

*இந்த மக்கள் கூட்டத்தில் அரபு பெருநிலத்தின் எல்லாப் பகுதியிலிருந்தும், மக்கள் வந்து திரண்டிருந்தனர். அப்போது ஆற்றிய உரையின் இறுதியில் அங்கு குழுமியிருந்த மக்களிடம்,*

*இறுதித் தீர்ப்பு நாளின்போது உங்களிடம் அல்லாஹ், என்னைப் பற்றி கேட்பான். அப்போது நீங்கள் என்ன சொல்லுவீர்கள்?*

குழுமியிருந்த மக்கள், கூறினார்கள்...

“நீங்கள் (அல்லாஹ்வின்) தூதை எங்களிடம் முழுமையாக ஒப்படைத்தீர்கள். உங்கள் கடமையை நிறைவாக நிறைவேற்றினீர்கள் என்பதற்கு சாட்சியம் கூறுவோம்.”

பின்னர் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், தனது சுட்டுவிரலை வானத்தை நோக்கி உயர்த்தினார்கள்.

«اللَّهُمَّ اشْهَدْ» «اللَّهُمَّ اشْهَدْ» «اللَّهُمَّ اشْهَدْ»

அல்லாஹ்விடம், “அஷ்ஹதன்” “அஷ்ஹதன்” “அஷ்ஹதன்” யா அல்லாஹ்! நீயே சாட்சி!, நீயே சாட்சி!, நீயே சாட்சி! என மூன்று முறை கூறினார்கள். ஆதாரம் - முஸ்லிம் 1/397

## இறைவனின் அறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின்

முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பின் ஒரு நபி இல்லை. அவர்கள் இறுதி நபி.

திருக்குர்ஆனுக்குப் பின் ஒரு வேதமில்லை. அது அறுதிவேதம். இறுதி வழிகாட்டுதல்.

ஆகவே வாழும் தலைமுறையினருக்கு நேர் வழியைக் காட்டிட வேண்டியது, வாழ்ந்து கொண்டிருக்கும் முஸ்லிம்களின் பொறுப்பு.

## இந்தக் கடமையை அல்லாஹ் இப்படி சுமத்துகின்றான்

“நம்பிக்கைக் கொண்ட (முஸ்லிம்களே!) அவ்வாறே உங்களை நடுநிலைகொண்ட சமுதாயத்தினராக ஆக்கினோம். ஆகவே நீங்கள், ஏனைய மனிதர்களுக்கு வழிகாட்டக் கூடிய சாட்சியாக இருங்கள். நம்முடைய தூதர் உங்களுக்கு வழிகாட்டக்கூடிய சாட்சியாக இருப்பார்.” - 2:143

அதாவது எப்படி அறுதி தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு மிகவும் அழகிய முறையில் வழிகாட்டினார்களோ அதேபோல் நாம் நம்மோடு வாழும் மக்களுக்கு வழிகாட்டக்கூடிய சாட்சியாக - நடைமுறை சாட்சியாக வாழ்ந்து காட்டிட வேண்டும்.

இந்தப் பொறுப்பை பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த மக்களிடம் ஒப்படைத்தபோது....

பெருமானார் (ஸல்) அவர்கள், தங்களுடைய விடைபெறும் ஹஜ்ஜின், குர்பானின் நாளில் யவ்முல் நஹ்ர்-இல் இப்படிக் கூறினார்கள்.

“இங்கே வந்திருப்பவர்கள், இங்கே வராதவர்களுக்கு, இந்தச் செய்தியை எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் உங்களைவிட நன்றாக “புரிதல்” உடையவர்களாக இருப்பார்கள்”
ஆதாரம்-புகாரி-1/234 (நபிமொழிதொகுப்பு)



தாருல் இஸ்லாம் சார்பாக நாகை மாவட்டம், கொள்ளிடம் சுற்றியுள்ள பகுதிகளில் இல்லம்தேடி தாஃவா


vaigarai velicham official

இந்தச் சொற்களை செவிமடுத்த மக்களில் பலர் தங்கள் வாகனங்கள் எந்தத் திசையை நோக்கி நின்றனவோ, அந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தார்கள். இஸ்லாத்தை உலகெங்கும் பரப்பினார்கள்.

(Islam The Misunderstood Religion
- By. Muhammed Qutb)

தமிழில் - இஸ்லாம் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட மார்க்கம்.
(வெளியீடு-வேர்கள் பதிப்பகம்)

இப்படி அந்த மக்கள் செய்த பெரும் தியாகம், கடினமான உழைப்பு, இவற்றால்தான் இன்று உலக மக்கள் தொகையில் 200 கோடி மக்கள் (24:9%) நேர்வழியைப் பெற்றவர்களாக முஸ்லிம் களாக வாழ்ந்து வருகின்றார்கள்.

## ஜவஹர்லால் நேரு

முஹம்மது (ஸல்) அவர்களின் உழைப்பில் விளைந்தவைப் பற்றி இந்தியாவின் சிற்பி என்றும், ஆசியாவின் ஜோதி என்றும் அழைக் கப்பட்ட, இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித நேரு அவர்கள் இப்படிக் கூறினார் :-

“எதையும் சாதிக்க முடியாத அந்தப் பாலைவன மக்களுக்கு அவர் நம்பிக்கை, நெஞ்சுரம், ஓர் “இலட்சிய வேட்கை”, அதை அடையும் ஓர் அகண்ட பார்வை, இவற்றைக் கொடுத்தார்கள் முஹம்மத் (ஸல்) அவர்கள். இதனால் This Desert People of no consequence Managed to Conquer half of the Known World. எந்த விளைவுகளையும் ஏற்படுத்திட இயலாத பாலைவன மக்கள் அறியப்பட்ட உலகின் அரைபகுதியை வென்றார்கள்.

(Jawaharlal Nehru Glipses of world History
Page - 142/143, Twelth Impression)

## அழகியச் சொல்லுக்குச் சொந்தக்காரர்கள்

அல்லாஹ் கேட்கிறான் :

எவர் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து, நற்செயல்களைச் செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுகின்றாரோ அவரைவிட சொல்லால் அழகியவர் யார்?

அல்குர்ஆன்-41:33

அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்



01-07-2023 அன்று தேனி மாவட்டம், தேவாரத்தில் தாஃவா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளரான தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்டின் தலைவர் மு.குலாம் முஹம்மது அவர்கள் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் சொற்பொழிவை நிகழ்த்தினார். இதில் நமது வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள் மற்றும் தாஃவா நோட்டீஸ்கள் விநியோகம் செய்யப்பட்டது.







அனைத்து இஸ்லாமிய இயக்கங்கள், அமைப்புகள் மற்றும் இஸ்லாமிய கட்சிகள் இணைந்து நடத்திய “சிந்திக்கும் சமூகம் மாணவர்களுக்கான கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சி” கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் கடந்த 19-11-2023 காலை 11மணியளவில் அப்பா பள்ளிவாசல் சமுதாய கூடத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக வழக்கறிஞர் அ.கமருதீன் “முஸ்லிம்களும் சட்டத்துறையும்“ மற்றும் A.ஜாகீர் உசேன் “வீட்டுக்கு ஒரு மருத்துவர்” என்ற தலைப்புகளின்கீழ் சிறப்பாக உறையாற்றினார்கள்.

*போம். அந்த அழகியச் சொல்லுக்குச் சொந்தக் காரர்களாவோம். அல்லாஹ்விடம் அளப்பறியக் கூலிகளைப் பெறுவோம்.*

## கிப்லாவின் மாற்றமும் முஸ்லிம்களின் உலகத்தலைமையும் கிப்லாவை மட்டும் மாற்றிடவில்லை

*வரலாற்றின் ஒரு காலக்கட்டம் வரை முஸ்லிம்கள் தொழுகையில் நோக்குமிடம் ஜெரூசலத்திலுள்ள அதாவது பைத்துல் முகத்திஸ் - அல்அக்ஸா-ஐ நோக்கித்தான் என்றிருந்தது. அதனை அல்லாஹ், கஆபா என்ற மக்காவிலுள்ள மஸ்ஜித்-துல் ஹரம்-ஐ நோக்கித் திருப்பினான். பின்வரும் திருமறை வசனத்தின் கீழ்*

> “(நபியே!) நாம் உம்முகம், அக்கடி வானத்தை நோக்கக் காண்கிறோம். எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம், உம்மைத் திடமாகத் திருப்பிவிடுகின்றோம். ஆகவே நீர் இப்பொழுது மக்காவின் மஸ்ஜித்-துல் ஹரம் பக்கம் உம் முகத்தை திருப்பிக்கொள்ளும்.
>
> *முஸ்லிம்களே! நீங்கள் எங்கிருந்தாலும், தொழுகையின்போது, உங்கள் முகங்களை அந்தக் கிப்லாவின் பக்கம் திருப்பிக்கொள் ளுங்கள். அல்குர்ஆன் - 2:144*

## கிப்லாவை மாற்றியதன் முக்கியத்துவம்

*1) உலகத்தலைமை பனீஇஸ்ராயீல் என்ற யூதர்களிடமிருந்து எடுக்கப்பட்டு முஸ்லிம் களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.*

*2) இனி முஸ்லிம்களே உலகில் நன்மையை ஏவி, தீமையைத் தடுத்திடும் பேரியக்கத்தின் தலைவர்கள். இந்தப் பொறுப்பை அவர்கள் பொறுப்போடு ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*3) அவர்கள் நீதியின் பக்கம் நிலைத்திருக்க வேண்டும், அநீதியை தடுத்திட வேண்டும். இதன்மூலம் நீதியோடும் நிம்மதியோடும் வாழ்ந்திடச் செய்திட வேண்டும்.*

*4) எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனின் வழிகாட்டுதல்களை மனிதர்களிடம் எடுத்துச் சொல்லிட வேண்டும். நிலைநாட்ட வேண்டும். நடுவுநிலையான சமுதாயமாக ஆக்கியுள்ளோம். அல்குர்ஆன் - 2:143*

*நியாயத் தீர்ப்புநாளின்போது, மனிதர்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படுவார்கள். ஒவ்வொரு இறைத்தூதரும், தன்னுடைய உம்மத் என்ற சமூகத்தாரிடம் அல்லாஹ்வின் வழிகாட்டு தல்களை சரியாக, முறையாகக் கொண்டு சேர்த்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அவர்கள் எந்த தயக்கமுமின்றி தங்களுடைய*



vaigarai velicham official

வாழ்வாலும், வாக்காலும் கொண்டு சேர்த்தார்கள் என்பதற்கான சாட்சியங்களைத் தந்திட வேண்டும்.

பின்னர் அந்த நபிமார்களின் சமூகத்தவர்கள் - நபிமார்கள் தங்களுக்குக் காட்டிய வழிகாட்டுதலை தங்கள் காலத்து மக்களிடம் கொண்டு சேர்த்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

இறைவழிகாட்டுதல்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் அந்த சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்திட வேண்டும். தவறினால் அவர்கள் அல்லாஹ்வால் தண்டிக்கப் படுவார்கள்.

இப்படிக் கடமையில் தவறுபவர்கள், பூமியில் நடக்கும் எல்லா தீமைகளுக்கும், பாவங்களுக்கும் அநியாயங்களுக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

- அபுல்அஃலா மௌதூதி
- In the Meaning of the Quran

ஆம், நமது பொறுப்புகளை உணர்வோம்! அவற்றை நிறைவேற்றுவோம்!!

- இன்ஷா அல்லாஹ்

இந்தப் பொறுப்பைத்தான் சமுதாயத்தின் சார்பில் நாம் நிறைவேற்றி வருகின்றோம்.

## இந்தக் கடமையை நாம் நிறைவேற்றத் தவறினால்

அல்லாஹ்வின் மார்க்கத்தைக் கேள்விப் படாத அவர்கள், அவர்கள் கடவுள்களையும் அவர்களுடைய கலாச்சாரத்தையும் நம்மீது திணிப்பார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகள், சதாசர்வகாலமும் இஸ்லாத்தைத் தீவிரவாத மார்க்கம் என்றும், முஸ்லிம்கள் தீவிரவாதிகள் என்றும் இடைவிடாமல் பிரச்சாரங்களை செய்து கொண்டிருக் கின்றார்கள்.

இந்தப் பொய்களை உண்மையாக்கிட எல்லா இடங்களிலும் குண்டு வெடிப்புகளை நடத்தி, அப்பாவி மக்களைக் கொன்று குவித்து விட்டு, பழியை முஸ்லிம்கள் மீது போடுகின் றார்கள். இன்றைய நாட்களில் அவர்கள் இதைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்கின்றார்கள்.




**இன்ஷா அல்லாஹ் சந்திக்க இருக்கின்ற ரமழான் மாதத் திற்காக, இஸ்லாத்தை ஏற்ற மக்கள் ரமழான் மாதத்தில் நோன்பு வைப்பதற்காக அரிசி, கோதுமை, ரவா, மசாலா பொருட்கள், பேரிச்சம்பழம், ஜூஸ் பவுடர் போன்ற 1 மாதத்திற்கான பொருட்கள் கொடுக்கப்பட தயார் செய்யப்பட்டபோது**

முஸ்லிம்களிடமிருந்து எந்த மறுப்பும் எதிர்ப்பும் மக்களிடம் சென்று சேராததால் இந்தப் பொய்களை மக்கள் நம்பி விடுகின்றார்கள்.

தாஃவா களத்தில் அதாவது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களத்திலும் அதுபோல்நாம்அவர்களுக்காகஏற்பாடுசெய்யும் நிகழ்ச்சிகளிலும் அவர்களைத் தெளிவுபடுத்த முடிகின்றது.

நாம் ஏற்பாடு செய்யும் கேள்வி பதில் நிகழ்ச்சி களில் பலர் தங்களுக்கிருக்கும் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறுகின்றார்கள்.

ஐயங்கள் தெளிந்த நிலையில் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்படுகின்றார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்றிடவும் செய்கின்றார்கள்.

நாம் இதனைச் செய்யத் தவறினால், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிர்ப்ப வர்கள், தங்கள் தளங்களை வலிமைப்படுத்து வார்கள். தேவையான பலத்தை ஏற்படுத்திக் கொண்டு அவர்கள் தங்கள் கடவுள்களையும், வாழ்க்கை வழிமுறைகளையும் உங்கள்மீது திணிப்பார்கள். நீங்களும் அல்லாஹ்வை நிராக ரிப்பவர்களாக ஆகிவிட வேண்டும் என்பார்கள். இதில் கிஞ்சிற்றும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள். இதனை அல்லாஹ் இப்படி எச்சரிகின்றான்...



கடந்த 06-05-2023 அன்று கொடைக்கானல் லேக் என்ற இடத்தில் சகோதர சமுதாயத்தை சேர்ந்த சகோதரிக்கு அல்குர்ஆன் அன்பளிப்பு செய்யப்பட்டது.

*இதுபோன்ற எச்சரிக்கைகள் பல இடங்களிலும் இடம்பெறுகின்றது. அவர்களுக்கு உங்கள் மீது வாய்ப்புக் கிடைத்தால் அவர்கள் உங்களுக்கு விரோதிகளாகி, தம் கைகளையும், தம் நாவுகளையும் உங்களுக்குத் தீங்கிழைப்பதற்காக உங்கள்பால் நீட்டுவார்கள். தவிர நீங்களும் நிராகரிப்பவர்களாக வேண்டும் என்று பிரியப் படுவார்கள். அல்குர்ஆன் - 60:2*

*இதுதான் இன்றைய இந்தியாவில் நடந்து கொண்டிருக்கின்றது.*

*அல்லாஹ் நியாயத் தீர்ப்புநாளில் நம்மைக் குற்றம் பிடிப்பான். அல்லாஹ் கேட்கின்றான்..*

> "அல்லாஹ்விடமிருந்து தன்பால் வந்திருக்கும் சாட்சியங்களை மறைப்பவனைவிட அநியாயக்காரன் யார்?"
> அல்குர்ஆன்-2:140

*இந்தியா கிராமங்களில் தான் வாழுகின்றது. இந்தக் கிராமங்களில் தலைவிரித்தாடும் மிகப்பெரிய தீமை, அநியாயம், தீண்டாமைக் கொடுமை, ஜாதியின் பெயரால் தினம், தினம் நடக்கும் கொடுமைகள், நவீன சொல்லாட்சியில் மனித உரிமை மீறல்கள்.*

*இந்தத் தீண்டாமை கொடுமைகளுக்கு நித்தம், நித்தம் ஆளாகிக் கொண்டிருக்கும் அந்த மக்களுக்கு மனிதர்கள் யாவரும் சமமான வர்களே! பலரை தீண்டத்தகாதவர்களாக நடத்துவதும், சிலரை உயர்ந்தவர்களாக நடத் திடுவதும் கூடாது எனக்கூறும் மார்க்கம் ஒன்று 1400 ஆண்டுகளுக்கு முன்னே நடப்பில் வந்துவிட்டது. அது உலகெங்கும் நடந்த இதுபோன்ற அநியாயங்களை வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்த்திருக்கின்றது என்பதை அறியவே மாட்டார்கள்.*

*இறைவன் கூறினான்*

> மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு பயந்துகொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான். பின்னர் அவ்விருவரிலிருந்து அனேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி) உலகில் பரவச் செய்தான். ஆகவே அல்லாஹ்வுக்கே பயந்துகொள்ளுங்கள். அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக் கொருவர் தமக்குரிய உரிமைகளைக் கேட்டுக் கொள்கிறீர்கள். அல்குர்ஆன்-4:1

## அல்குர்ஆனின் இந்தப் பிரகடனத்தின் வெற்றிகள்

*இந்த மனிதர்கள் சமம் எனப் பிரகடனப்படுத்து வதால், மனிதர்களை கறுப்பர்கள், வெள்ளை யர்கள், எனப் பிரித்துப் பிளந்து போட்டவர் களின் ஆதிக்கங்கள் ஓர் முடிவுக்கு வந்தன. பலநூறு சமுதாயங்கள் இஸ்லாத்தை ஏற்று விடுதலை அடைந்தனர்.*

*சாதிய கட்டமைப்பைக் கட்டியெழுப்ப ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் அநியா யங்களைக் கட்டவிழ்த்து விட்டு உல்லாச சல்லாபங்களில் திழைத்தவர்களின் கொட்டங்கள் அடங்கின. பல லட்சம் மக்கள் இஸ்லாத்தின் இணைந்து நிரந்தரமாக விடுதலையடைந்தனர்.*

*இந்தப் பிரகடனத்தை ஏற்றுக்கொண்ட வர்கள், சமத்துவத்தையும் சகோதரத்துவத் தையும் பெற்றிட இரத்தம் சிந்தவில்லை, சிறை செல்லவில்லை, சித்திரவதைகளை அனுபவிக்க வில்லை.*


vaigarai velicham official



இஸ்லாத்தை வாழ்வியலாக ஏற்ற சகோதரியை நமது அன்பகம் மதரஸாவில் சேர்க்க வந்த சகோதரர் அவர்களுடன் இஸ்லாத்தை பற்றிய கலந்துரையாடல் செய்யப்பட்டு ஜாதி ஒழிந்தது, முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி, ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் என்ற நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.



13.11.2023 அன்று அன்பகத்தில் படித்த மாணவி அஃப்ரா என்ற மாணவிக்கு திருமணம் நடைபெற்றது.

உலகெங்கும், ஆதிக்கச் சக்திகளுக்கு எதிராக விடுதலைப் போரை நடத்தியவர்கள், அந்தப் போரில், ஆதிக்க சக்திகளை வீழ்த்தியபோது, முன் வைத்த முழக்கம் சமத்தும், சகோதரத்துவம், சுதந்திரம் என்பவைதான். Equality, Fraternity, Liberty. இவையெல்லாம் இந்த ஒற்றை வசனத்தில் அன்றே கிடைத்துவிட்டது.

டார்வினின் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்ற கொள்கை கொஞ்சம், சொஞ்சமாக புழக்கத்தி லிருந்து விடைபெற்றது.

அன்றைய நாட்களில் அரபுக்களிடம் ஓர் அசம்பாவம், அரபுக்கள் உயர்ந்தவர்கள், அல்லாதவர்கள், அஜமிக்கள். அதாவது முட்டாள்கள்.

இந்த அசம்பாவத்தை இந்த இறைவசனம் ஒரேயடியாக வீழ்த்திக்காட்டியது.

இது ஒரு வசனம், மனித வரலாற்றை உலகெங்கும் தலைகீழாக புரட்டிப்போட்ட வசனம் இந்த வசனம் இந்தியாவிற்கு இப்போது தேவைப்பட்டதைப்போல், எப்போதும் தேவைப்படவில்லை.

ஆகவே எல்லா வாய்ப்புகளையும், ஊடக யுத்தங்களையும் மேற்கொண்டு மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கும் இலட்சியப் பணியை விரைந்து நிறைவேற்றுவோம்.

பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள் :

> **என்னிடமிருந்து பெற்ற இந்த வழிகாட்டுதலைப் பரப்புங்கள். அது ஒரே ஒரு வாக்கியமாக இருந்தாலும் சரியே! (நபிமொழி) புகாரி-3461**

உங்களின் சார்பில் இந்தப் பணியை நாங்கள் செய்து கொண்டிருக்கின்றோம் எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! உங்களால் இயன்றதை செய்யுங்கள்.

## இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பது எப்படி?

அல்லாஹ்தான் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் இப்படி அறிவுறுத்துகின்றான்.

> “நபியே! உம் இறைவனின் பாதையில், மக்களை விவேகத்துடனும், அழகிய உபதேசத்தைக் கொண்டும், நீர் அழைப்பீராக, இன்னும் அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக!
>
> நிச்சயமாக இறைவன் அவன் வழியை விட்டுத் தவறியவர்களையும், நேர்வழிப் பெற்றவர்களையும் நன்கறிவான்.” அல்குர்ஆன்-16:125

✿ இந்தத் திருமறை வசனம் - இஸ்லாத்தை எடுத்துச் சொல்பவர்கள் பின்வரும் பண்புகள் உடையவர்களாக இருக்க வேண்டும் என்கின்றது.

✿ சொல்வதை நேரடியாக தெளிவாகச் சொல்லிட வேண்டும்.

✿ எல்லோரையும் அல்லாஹ்வின் பக்கம் அழைக்க வேண்டும். அறிவார்ந்த வகையில் கேட்பவர்களைச் சிந்திக்க வைத்திடும் அளவில் அமைந்திட வேண்டும்.

✿ பிரயோகப்படுத்தும் சொற்கள் மிகைத்து நிற்க வேண்டும். கண்ணியம் மிகைத்து நிற்க வேண்டும்.

✿ எல்லாவிதமான இங்கிதங்களையும் முழுமை யாகப் பேணிட வேண்டும்.

✿ கேட்பவர்கள் எளிதில் புரிந்திடும் வகையில் இருந்திட வேண்டும்.

✿ கேட்பவர்களை நரக நெருப்பிலிருந்து மீட்பதே அவர்களை அல்லாஹ்வின் பக்கம் அதாவது இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதின் நோக்கம் என்ற அக்கறையை அழைக்கப்படுபவர் உணர்ந்திட வேண்டும்.

✿ விவாதங்கள் வந்துவிட்டால் அதில் கேட்பவரின் இதயத்தை வருடிடும் வாதங்கள் வார்த்தைகள் இடம்பெற வேண்டும். அல்லாமல் நானே உயர்ந்தவன் என்ற அகம்பாவம் அணுவளவும் இருந்திடக் கூடாது.

✿ நாம் உயர்ந்தவர், அழைக்கப்படுபவர் தாழ்ந்தவர் என்ற மமதை மூக்கின் முனை அளவுகூட தென்பட்டிடக்கூடாது.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்

> **“பழக்க வழக்கங்களில் கண்ணிய மில்லாத ஒருவன், எல்லாவிதமான நன்மையையும் இழந்தவன்,”**
>
> (புகாரி) 6270

## டாக்டர் இராதாகிருஷ்ணன்

மக்கா மாநகரில் எதிர்ப்பட்ட எதிர்ப்புகள், வெறுப்புகள், கொலை வெறித் தாக்குதல்கள் இவற்றின் நடுவில் அந்த மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைத்த பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி, டாக்டர் இராதாகிருஷ்ணன் சொன்னார்கள் :

இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர், தத்துவமேதை டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சொன்னார்கள் :

It must be admitted that hitherto Muhammad had propagated his religion by gentlemeans. The success before his flight to Madina was due to persuation. He was affirmed at several places in the Quran that his business was only to preach and that he had no authority to compel any person to embrace his religion.

- இதுவரை முஹம்மத் (ஸல்) அவர்கள் கண்ணியமிகுந்த வழிகளின் வழியே தன்




ஜூன் 25,2023 தஞ்சாவூரில் நூல் வெளியீடு


vaigarai velicham official









கடந்த 23.07.2023 அன்று மதுரை மாவட்டம், அங்காடிமங்களம் என்கிற ஊரில் "பெருநாள் விருந்து" என்கிற தலைப்பில் இஸ்லாமிய விருந்தோம்பல் குறித்தும், இஸ்லாம் குறித்தும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.இஸ்லாமிய புத்தகங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இறுதியாக விருந்து உபசரிப்பு செய்யப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெற்றது. இதில் சுமார் 130க்கும் மேற்பட்ட சகோதர, சகோதரிகள் கலந்துக் கொண்டார்கள்.

*மதத்தைப் பரப்பினார்கள். மதீனாவுக்கு அவர்கள் செல்வதற்கு முன்னால் அவர்கள் பெற்ற வெற்றிகள், மனிதர்களை சிந்திக்கச் சொல்லி தூண்டியதே!*

*யாரையும் கட்டாயப்படுத்தி இஸ்லாத்தை ஏற்றிடச் செய்யும் அதிகாரமில்லை. இதைத் திருக்குர்ஆன் பல இடங்களில் அறிவுறுத்து கின்றது.*

*ஆதாரம்* Glimpses of World Religions
by Dr. Radhakrishnan. Page-199

## ஜிஹாத் VS தாஃவா

**கைபர் போருக்கு படையை அனுப்பிய பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்கு முன் தாஃவாவைச் செய்யச் சொன்னார்கள்**

*நபிமொழி 4210, புகாரி-யில் இப்படி இடம் பெறுகின்றது.*

*ஸஹ்ல் இப்னு ஸஅத் (ரழி) அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக) பின்வரும் நிகழ்வை கூறுகின்றார்கள்.*

*கைபரின் நாளில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்கள் சொன்னார்கள். நாளை நான் இந்தக் கொடியை ஒருவரிடம் கொடுப்பேன். அவருடைய கைகளின் வழி அல்லாஹ், நமக்கு வெற்றியைக் கொடுப்பான். அவர் அல்லாஹ் வையும் ரசூல்(ஸல்) அவர்களையும் நேசிப்பவர். அவரை அல்லாஹ்வும் ரசூலும் நேசிக்கிறார்கள் என்றார்கள்.*

*அங்குள்ள மக்கள் யாருடைய கைகளில் அந்தக்கொடி கொடுக்கப்படும் என வியந்த வண்ணம் இரவைக் கழித்தார்கள்.*

*காலையில் மக்கள் இறைவனின் தூதர் அவர்களிடம் விரைந்தார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் அந்தக் கொடியை பெற்றிட லாம் என்ற நம்பிக்கையில் நின்றார்கள்.*

*இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலீ இப்னு அபூதாஃலிப் எங்கே? எனக் கேட்டார்கள். இதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே,*

அவர்கள் கண் நோயில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்." எனப் பதில் தந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அவரை அழைத்து வர ஆள் அனுப்புங்கள் எனச் சொன்னார்கள்." அலீ (ரழி) அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருடைய கண்ணில் உமிழ்ந்தார்கள். அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். அதனால் அலீ (ரழி) அவர்கள் குணமடைந்தார்கள். அவர் கண் நோயால் அவதிப்பட்டார்கள் என்பதே காணாமற் போய்விட்டது.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கொடியை அலீ (ரழி) அவர்களிடம் கொடுத்தார்கள். அலீ (ரழி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களும் நம்மைப் போல் ஆகும் வரை நான் அவர்களுடன் போரிடுவேன்" என்றார்கள்.

அதற்கு இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் "செல்லுங்கள் அவசரப்படாதீர்கள் அவர்களின் பூமியில் நுழைந்தவுடன் அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளச்சொல்லி அழையுங்கள். அவர்களிடம் அவர்கள் அவசியம் கடைபிடிக்க வேண்டிய அல்லாஹ்வின் உரிமைகளைப் பற்றிச் சொல்லுங்கள். காரணம் உங்கள் வழி ஒரு தனி மனிதனுக்கேனும், அல்லாஹ் நேர்வழியை வழங்கினால், அது உங்களுக்குக் கிடைக்கும் சிவந்த ஒட்டகங்களை விட சிறந்ததாகும்." என்றார்கள்.

## ஆக எதிலும் முதலில் தாஃவா

இந்தத் தாஃவாவை சமுதாயத்தின் சார்பில் 44 ஆண்டுகளாக இடைவிடாமல் செய்து கொண்டிருக்கும் தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-க்கு தாராளமாக நிதி உதவி செய்யுங்கள், அல்லாஹ்விடம் அளப்பறிய நற்கூலிகளைப் பெறுங்கள்..

## விவாதங்களைப் பொறுத்தவரை பெருமானார் (ஸல்) அவர்கள் இப்படிச் சொன்னார்கள்

முஹம்மத் (ஸல்) விவாதத்தில் வெல்லுகின்றாரோ இல்லையோ வாதிப்பவரை இஸ்லாத்திற்கு கொண்டு வந்துவிடுவார்.



ஜூன் 26,2023 அன்று அய்யம்பேட்டை நூல் அன்பளிப்பு

ஆக சான்றோர்களும் ஆன்றோர்களும், தாஃவாவில் இங்கிதங்களையே பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறை என்றார்கள். அதை பின்பற்றியே நாம் இஸ்லாத்தை, இதயங்களைத் தேடி சமர்ப்பிக்கின்றோம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் கற்றுத் தந்த இங்கிதங்கள் சற்றும் குறைந்திடாமல், நமது தாஃவா செயற்களத்தில் நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

> **மனிதர்களே! உங்கள் இறைவனுக்கு பயந்துகொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்.**

திருக்குர்ஆனின் இந்த ஒரு வசனமே இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்குமே மனிதர்களிடம் காணப்படும். அனைத்து ஏற்றத் தாழ்வுகளையும் மண்மூடிப் போகச் செய்தது.

இந்த வசனத்தை நம்மோடு வாழும் மக்களிடம் பரவலாக்கிடுவதே நமக்கிருக்கின்ற மிகப்பெரிய தீர்வு. இது இந்தியாவில் அடிமைத் தளைகளில் சிக்குண்டு நாளும் அடிமைத் தளைகளுக்கு ஆளாகி நிற்கும் மக்களை விடுதலை அடைந்திட செய்யும்.

உங்கள் சார்பில் இடைவிடாமல் செய்து கொண்டிருக்கின்றோம்.


vaigarai velicham official

# பாலஸ்தீனத்தில் ஒரு தாய்!



**12 வயதான தன் மகனை கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறாள். அவன் எங்கோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறான்.**

தடுத்தாள் தாய்!

தன் அன்பு மகன் மீது, பரிவு நிறைந்த பார்வையைப் பாச்சினால், பின்னர் கேட்டாள், மகனே நீ எங்கே புறப்படுகின்றாய்?

அம்மா! இஸ்ரேலிய டாங்கிகள் வருகின்றனவாம். அவற்றை எதிர்த்துப் போர் புரியப் போகின்றேன். டாங்கிகளுக்கு எதிராக நீ என்ன செய்வாய்? மகனே. போய்த்தான் ஆக வேண்டுமா? சிந்தித்துப் பார்த்துக்கொள். 12 வயது பாலனிடம் சிந்திக்க சொல்ல, சற்று சங்கடமாகத்தான் இருந்தது அந்தத் தாய்க்கு. ஆனால், அவனை தடுக்கவும் முடியாதுபோல் தெரிந்தது அவளுக்கு.

"முடிவெடுத்துவிட்டேன் அம்மா"

"நான் யூத டாங்கிகளைக் கற்களைக் கொண்டு தாக்கப் போகிறேன்."

இதைக் கேட்ட தாய், கண் நிறைய தன் மகனைப் பார்த்துக்கொண்டே இருந்தாள்.

மகனின் போர்க்குணத்தையோ அவன் போருக்குப் போகும் வேகத்தையோ அந்தத் தாய் தடுத்திட விரும்பவில்லை.

அவனோ சிந்தனையில் ஆழ்ந்தான்.

அடுத்துத் தாய் கேட்டாள், மகனே நீ எதைக் கொண்டு யூத டாங்கர்களை எதிர்ப்பாய். மகன் சொன்னான், கற்களைக் கொண்டு எதிர்ப்பேன்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய், தாய் சொன்னால், மகனே அந்தப் போருக்கு நானும் உடன் வருகின்றேன் என்றால் தாய்.

நீ வந்து என்ன செய்வாய் அம்மா? எனக் கண் கலங்கக் கேட்டான் மகன். தாய் கலங்காமல் பதில் சொன்னால், மகனே உனக்குக் கற்களைப் பொறுக்கித் தருகின்றேன்.

"யூதர்கள் இந்த உலகில் வாழ்வதை எந்த அளவுக்கு நேசிக்கின்றார்களோ! அதைவிட அதிகமாக எங்கள் சகோதரர்கள் மரணத்தை நேசிக்கிறார்கள். அதனால் எங்களை வெல்ல முடியாது" அல்லாஹ் எங்களுக்கு உதவி செய்வான்.

ஜூலை 21-2014 அன்று காசாப் பகுதியில் வீர மரணத்தை முன்னிறுத்தி யூதர்களை எதிர்க்கும் "ஹமாஸ்" மழலையர்களைப் பற்றி எகிப்தின் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தவர்கள் வெளியிட்ட அறிக்கை.

– நன்றி ரேடியன்ஸ்

முன்மாதிரித் தாய்...

# தன் மகனை அல்லாஹ்வின் பாதையில் தந்த தாய்!

**பாலஸ்தீனப் போராளி, ஹமாஸின் தலைவர். இவருடைய பெயரைக் கேட்டாலே இஸ்ரேலியப் படைகள் நடுநடுங்கும். ஏனெனில் அவரொரு முஹாஜித். அவர்தான் இப்போது ஹமாஸ், அல்காஸம் பிரிக்கேட்ஸ் என்ற அல்காஸம் படைப் பிரிவிற்குத் தலைமை தாங்கி போரை முன்னின்று நடத்தி வருபவர்.**




இப்போது இஸ்ரேலை வீழ்த்திக் கொண்டிருக்கும் தளபதி! இவருடைய உயிரைக் குடிக்கத்தான் இஸ்ரேலின் பிரதமர் நெத்யான்ஹூ நீண்ட நெடுங்காலமாக துடித்துக்கொண்டிருக்கின்றான்.

பல இரகசியத் தற்கொலைப் படைகளை அனுப்பி, அவரைக் கொலை செய்திட இவன் மட்டும் முயற்சி செய்து வருகின்றான்.

ஆனாலும் முடியவில்லை. அல்லாஹ் அவரைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றான்.

இத்தனைக்கும் அவர் 2011 வரை இஸ்ரேல் இராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டு சித்தரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டவர். பின்னர் இப்போது நடப்பதுபோன்ற ஒரு பேரத்தின் வழி வெளியே வந்தவர்.

இப்போது அக்டோபர்-7, 2023 முதல் நடக்கும் போரால் கான்யூனுஸ் என்ற பகுதி பயங்கர போர்க்களமாகப் பரிணமித்து வருகின்றது இன்றளவும்.

“காலமெல்லாம் கான்யூனுஸ்-ஐ தாக்குகின்றீர்களே, அப்படியெனில் அங்கே என்ன இருக்கின்றது? என இஸ்ரேலைக் கேட்டால், அங்கேதான் யஹ்யா சின்வர் இருக்கின்றார். அவரைக் கொலை செய்துவிட்டால் அனைத்தும் கிடைத்துவிடும் என்றனர்.

ஒரு தாக்குதலில் யஹ்யா சின்வர் கொலை செய்யப்பட்டு விட்டதாகவே அறிவித்தார்கள் தங்கள் அரிப்பைத்தை தீர்த்துக்கொள்ள!

ஆனால், அன்று வீரமகன் யஹ்யா சின்வர் அவர்கள் அக்.7இல், போராளிகள் குழுக்கள் அழைத்துச் செல்லப்பட்டவர்களோடு (Hostages) பேசிக் கொண்டிருந்தார். இந்தச் செய்தி அறிந்து, அவரை எப்படியும் கொலை செய்துவிடுவோம் என அங்காலாய்த்தார்கள்.

பத்திரிகையாளர்கள் யஹ்யா சின்வரின் தாயாரிடம், உங்கள் மகன் கொலை செய்யப்பட்டு விட்டதாக கூறுகின்றார்களே எனக்கேட்ட போது, நான் அவனைப் பார்த்து 20 வருடங்கள் ஆகிவிட்டன என்றார்கள்.

ஆமாம்! அவர் தன் மகனை அல்லாஹ்வின் பாதையில் ஒப்படைத்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவனை இனி அல்லாஹ்வை சந்திக்கும் போதே சந்திப்பார்கள். இதுதான் பாலஸ்தீன தாய்மார்கள் பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனச் சொன்னோம்.

**- MGM**

### யாரும் அநாதை இல்லை..!

**இன்று காஸாவில் செருமுகத்தில், ஷஹாதத்தை – வீரமரணத்தை எதிர்நோக்கி நிற்கும் பல இளைஞர்கள், இதற்கு முன்னால் நடந்த 6 காஸா போர்களின்போது, இஸ்ரேலால் கொலை செய்யப்பட்ட தாய், தந்தைகளின் இளவல்கள். அல்லாஹ்வே அவர்களுக்கு எல்லாம். அல்லாஹ்வை சந்திக்கும் போதே, அவர்கள் தங்கள் பெற்றோரைச் சந்திப்பார்கள்.**



vaigarai velicham official



● மகளிர் மன்றம்

# பெண்களுக்கு ஏற்படும் புற்றுநோய்கள்

டாக்டர் **கற்பகாம்பாள் சாய்ராம்**

*மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் & கருவுறுதல் நிபுணர்*

**நடுத்தர வயதில் வரவேண்டிய எல்லாப் புற்றுநோய்களும் பெண்களுக்கு வரும். அதில் அதிகமாகக் காணப்படுவது. மார்பகப் புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயாகும்.**

### மார்பகப் புற்றுநோய்

இந்தியப் பெண்களை அதிகம் தாக்கும் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய். ஒவ்வோர் ஆண்டும் 87 ஆயிரம் பெண்கள் இந்த நோயால் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள். பெண்களில் 28 பேரில் ஒருவருக்கு வாழ்நாளில் இந்தப் புற்றுநோய் தாக்கும் அபாயம் உள்ளது. இளம் வயதினர் முதல் வயதானவர்கள் வரை பெண்களில் யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். எனினும் 45 முதல் 64 வயதுக்குள் இருப்போருக்கு இது அதிகம் வருகிறது.

ஒருவருடைய குடும்பத்தில் யாருக்காவது இந்நோய் வந்திருந்தால், குடும்பத்தினருக்கும் இந்நோய் வருவதற்கு 5 முதல் 10 சதவிகித அபாயம் உண்டு. 'எங்கள் பரம்பரையில் யாருக்கும் இல்லை. அதனால் எனக்கு வராது' என்று பலர் நினைப்பதுண்டு. ஆனால், பரம் பரைக் காரணம் அல்லாமலும் வரலாம்.

பெண்களுக்குக் கர்ப்பப்பை வாய்ப் புற்று நோய்க்கு அடுத்ததாக மார்பகப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம். ஐம்பது வயதைக் கடந்த பெண்களுக்கு மார்புப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம். ஆண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் வரக்கூடும். ஆனால் இது சற்று அரிது. ஒரு மார்பகத்தில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால், அடுத்த மார்பகத்திலும் புற்றுநோய் வர வாய்ப்புண்டு.ரத்த உறவினர்களுக்கு இப்புற்று நோய் இருப்பின், அக்குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் மார்பகப் புற்றுநோய் வர 2 - 3 மடங்கு வாய்ப்பு அதிகமாகும்.

### அறிகுறிகள்

மார்பகத்தில்கட்டிவந்தால் ஆரம்பக்கட்டத்தில் இதில் வலி இருக்காது. பிறகு அரிப்பு, வலி ஏற்படும். மார்பகங்களில் வீக்கம், சிவப்பாக இருத்தல், மார்பகத்தில் குழி, தசை தடிமனாதல், காம்பைச் சுற்றி தோல் உரிதல், காம்பில் பாலைத் தவிர பச்சை நிறத்திலோ அல்லது மஞ்சள் நிறத்திலோ நீர் வடிதல் ஆகியவை ஏற்படும்.

### மார்பகப் புற்றுநோய் வர வாய்ப்பு அதிகம் உள்ளவர்கள்

- நெருங்கிய உறவினர்களுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது,
- இளம் வயதிலேயே பூப்பு அடைந்தவர்கள்.
- காலம் தாழ்த்தி இறுதி மாதவிடாய் அடைந் தவர்கள்.
- குழந்தைப் பேறு இல்லாதவர்கள்.

● முதல் குழந்தையை 40 வயதிற்கு மேல் பெற்றவர்கள்.

● இறுதி மாதவிடாய் அடைந்த பின்பு ஈஸ்ட் ரோஜன் ஹார்மோன் எடுத்துக் கொள்பவர்கள்.

● அதிக எடை உள்ளவர்களுக்கும், மது அதிகம் அருந்துபவர்களுக்கும் மார்பகப் புற்றுநோய் வருவதற்கு ஓரளவிற்கு வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

**பரிசோதனைகள்**

முதலில் மேமோகிராம் பரிசோதனை செய்வார்கள். எக்ஸ்ரே மாதிரியான ஒரு பரிசோதனைஇது. எக்ஸ்கதிர்களின்றி எம்.ஆர்.ஐ. மேமோகிராம் கூடச் செய்துகொள்ளலாம். பின்பு பயாப்சி பரிசோதனையில் உறுதி செய்வார்கள்.

45 வயதிற்கு மேல் உள்ளவர்களுக்கு அதிகமாக மார்பகப் புற்றுநோய் பாதிக்கிறது. அதனால் மேமோகிராம் பரிசோதனையை இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது செய்து கொள்வது நல்லது. குடும்பத்தில் யாருக்காவது இந்த நோய் வந்திருந்தால், வருடத்திற்கு ஒருமுறை மேமோகிராம் பரிசோதனையைச் செய்துகொள்ள வேண்டும்.

இப்புற்றுநோயை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், குணப்படுத்துவது சுலபம்.

ஆறுமாதங்களுக்கு ஒருமுறை பரிசோதனை செய்துகொண்டால், அடுத்த மார்பகத்திற்குப் பரவாமல் தடுக்க முடியும்.

மார்பகப் புற்றுநோயை அறிய, செலவில் லாத சுலபமான வழி, சுயப்பரிசோதனை. கண்ணாடி முன்பு நின்று மார்பகங்களை அழுத்திப் பார்த்தால் ஏதாவது வித்தியாசம் இருப்பதை உணர முடியும், சந்தேகமாக இருப்பின் மேமோகிராம் செய்துகொள்ளலாம். மாதவிலக்கான 7-வது நாளுக்குப் பிறகு மாதம் ஒருமுறை இதைச் செய்ய வேண்டும்.

35 வயதைத் தாண்டிய பெண்கள் அவசியம் செய்துகொள்ள வேண்டிய பயிற்சி இது.

எல்லாக் கட்டியும் புற்றுநோயாக இருப்ப தில்லை. சாதாரணக் கட்டிகள் கூட வரலாம். அவற்றை ஃபைப்ரோ அடினோமோ (Fibroa denoma) என்பார்கள்.

**காரணங்கள்**

மரபணு (Genes-BRCA-1&BRCA-2) காரணமாக அம்மாவிடமிருந்து மகளுக்கு மற்றும் மகளிடமிருந்து பேத்திக்கும் வரலாம்.

வாழ்க்கைமுறை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு, மன அழுத்தம் ஒரு காரணமாக இருக்கலாம்.

மிக இளம் வயதில் பூப்பெய்துவது, மிகத் தாமதமான மெனோபாஸ் ஆகிய இரண்டுமே மார்பகப் புற்றுநோய்க்கான பிரதான காரணங்கள்.

தாமதமாகக் குழந்தை பெற்றுக் கொள்ப வர்கள், குழந்தைப்பேறு இல்லாதவர்கள் ஆகியோருக்கும் அபாயம் அதிகம்.

உடல் எடை கூடினால் அபாயம். அதிகப் படியான கொழுப்பு. ஈஸ்ட்ரோஜனாகவே மாறும். அது ஆபத்தின் அறிகுறி.

மெனோபாஸுக்குப் பிறகு பெண்மையைத் தக்கவைத்துக்கொள்ள எடுத்துக்கொள்ளும் ஹார்மோன் ரீப்ளேஸ்மென்ட் தெரபியும்கூட மார்பகப் புற்றுநோய் வருவதற்குக் காரணமா கலாம்.

வைட்டமின் டி குறைவாக இருப்பவர்களுக்கு, இந்த ஆபத்து அதிகம்.

உணவு, தண்ணீரில் ரசாயனம் கலந்திருப் பதும், ரசாயனங்கள் கலந்த அழகு சாதனப் பொருட்கள் உபயோகிப்பதும் காரணமாகலாம்.

குழந்தைக்கு ஒரு வருடத்திற்காவது தாய்ப் பால் புகட்டுபவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் வருவதற்கு வாய்ப்புக் குறைவு.

**சிகிச்சை முறை**

சுய மார்புப் பரிசோதனை செய்துகொள்வது (முக்கியமாகக் குடும்பத்தில் யாருக்காவது மார்புப் புற்றுநோய் இருப்பின்), மெமோகிராம், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், திசுக்களை எடுத்துப் பரிசோதனை செய்வதன் மூலம் இந்நோயை அறியலாம். மேமோகிராம் செய்வதற்கு வயது வரம்பு ஏதுமில்லை.

சிகிச்சை முறை, புற்றுநோயின் தன்மை மற்றும் மொத்தமான உடல்நிலையைப் பொறுத்ததே. அறுவை சிகிச்சைக்குப்பின்பு கதிர்வீச்சு சிகிச்சை தேவைப்படும். புற்றுநோய் மார்பகத்தைத் தாண்டி உடலின் மற்ற பாகங்களுக்கும் பரவி

யிருந்தால் மருத்துவச் சிகிச்சை தேவைப்படும். இச்சிகிச்சையில் சில பக்கவிளைவுகளும் உண்டு. வாந்தி, பசிக் குறைவு, உடல் களைப்பு, முடி கொட்டுதல் போன்றவை.

பொதுவாகமார்பகப்புற்றுநோய்க்கு மூன்றுவிதச் சிகிச்சை முறைகள் உண்டு. கீமோ தெரபியில் நரம்புகள் வழியாக மருந்துகளைச் செலுத்திப் புற்றுநோய் செல்களை அழிக்கலாம். புற்றுநோய் உள்ள மார்பகத்தில் கதிர்வீச்சு செலுத்தி, புற்றுநோய் செல்களை அழிக்கும் கதிர் இயக்கச் சிகிச்சை தரலாம். இதுதவிர, அறுவை சிகிச்சை மூலம் புற்றுநோய் பாதித்துள்ள மார்பகத்தையும் நெறிக்கட்டிகளையும் அகற்றலாம். ஹார்மோன் மாற்றுச் சிகிச்சை, இம்யூனோ தெரபி போன்ற சிகிச்சைகளும் உள்ளன.

புற்றுநோய் தாக்கிய செல்களின் விகிதத்தைப் பொறுத்து இந்த நோயை நான்கு நிலைகளாகப் பிரிக்கிறார்கள். ஒவ்வொரு நிலைக்கும் ஏற்றபடிச் சிகிச்சைகள் வேறுபடும். ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், மார்பகங்களை அகற்ற வேண்டிய தேவை இருக்காது. பூரணகுணம் பெறவும் முடியும்.

இதில் தொடர் சிகிச்சையும் கண்காணிப்புமே முக்கியமானது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். புற்றுநோய் பாதிக்காத மார்பகத்தையும், பிற உறுப்புகளையும் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் பரிசோ தனையின் முக்கியத்துவத்தைச் அதிகமாக இருந்த போது, பாப்ஸ்மியர் சொல்லி விழிப்புணர்வு ஊட்டியதால் இப்போது அதன் தீவிரம் குறைந் துள்ளது. அதுபோல் மார்பகப் புற்றுநோய்க்கான மேமோகிராம் பரிசோதனையை, 45 வயதுக்கு மேலுள்ள ஒருமுறை செய்துகொள்ள வேண்டும். இதைச் பெண்கள் அனைவரும் இரண்டு வருடங் களுக்கு செய்தால், ஆரம்பநிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை பெற்று நலமாக வாழலாம்.

**கவலை தரும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்**

கர்ப்பப்பையின் கழுத்துப் பகுதிதான் கர்ப் பப்பை வாய் (Cervix) என்று அழைக்கப்படுகிறது. இங்கு ஹெச்.பி.வி. எனப்படும் ஹ்யூமன் பாபிலோமா வைரஸ் தொற்றுவதால் புற்றுநோய்



ஏற்படுகிறது.


முறையான பரிசோதனைகள் செய்துகொள்வது. தடுப்பூசி போன்றவற்றின் மூலம் இந்த வைரஸ் தொற்றைத் தடுத்துவிடலாம். என்றாலும் இதுகுறித்துப் பெண்களுக்கு விழிப்புணர்வு இல்லாததால், இந்த நோயின் தாக்குதல் இன்னும் அதிகமாகவே உள்ளது. இந்தியாவில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயால் அவதிப்படும் பெண்களில் மூன்றில் ஒருவர் பரிதாபமாக உயிரிழக்கிறார்கள். 45 முதல் 60 வயதினரிடையே இது அதிகமாகக் காணப்படுகிறது.

பிறப்புறுப்பில் தோன்றும் மரு. மிகச் சிறுவயதிலேயே திருமணம் செய்துகொள்வது, அதிக குழந்தைகள் பெறுவது, பிறப்புறுப்புப் பகுதியைச் சுத்தமாக வைத்துக்கொள்ளாதது ஆகியவையே இதற்குக் காரணம்.

இதன் முக்கிய அறிகுறிகள்... பிறப்புறுப்பில் ஏற்படும் ரத்தக்கசிவு, நீர்க்கசிவு, அடிவயிற்றில் வலி மற்றும் அடி முதுகில் வலி போன்றவை. கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயை ஆரம்ப நிலையில் கண்டறிய பாப்ஸ்மியர் பரிசோதனை உதவுகிறது. 30 வயதைத் தாண்டிய பெண்கள் அனைவரும் இப்பரிசோதனையை ஆண்டிற்கு ஒருமுறை செய்வது அவசியம். இதன் மூலம் கர்ப்பப்பை வாயில் கிருமித்தொற்று, புற்றுநோய் அல்லது புற்றுநோயாக மாறக்கூடிய நோய்கள் போன்றவற்றைக் கண்டறிய முடியும்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

# பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்




# ஆயுத குவியல்கள் வெடி பொருட்களை பற்றிய விசாரணை-2006

## (அவுரங்காபாத்)

ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத குழப்பத்தை ஏற்படுத்தக் கூடிய பல நிகழ்வுகளையும், அறிவுக்கு எட்டாத கற்பனை நிகழ்வுகளையும் உள்ளடக்கிய ஒரு கதையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது விசாரணை தரப்பு.

என்ன நடந்தது? யார் இவற்றை செய்தது? என்பதை யாருமே புரிந்து கொள்ளக்கூடாது என்ற நோக்கில் வேண்டுமென்றே குழப்பி இருக்கின்றனர். வழக்கை மேலும் குழப்புவதற்கு பொதுவாக முஸ்லிம்கள் பயன்படுத்தும் பெயர்களை பயன்படுத்தியுள்ளனர். விசாரணை அறிக்கையின் உள்ளே சென்று படிப்பவர்கள் ஒன்று குழம்ப வேண்டும் அல்லது தவறான முடிவுடன் வெளியே வரவேண்டும் என்ற அடிப்படையில் வேண்டுமென்றே வலையை பின்னி உள்ளதாக தெரிகிறது. இந்த வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருப்பதற்கு நாம் விசாரணை தரப்பின் அறிக்கைகளை சிறு சிறு பகுதிகளாக பிரித்து ஆராய வேண்டும்.

**1) விசாரணை அறிக்கையின் முக்கியமான பகுதிகள்**

1) வெருல் அவுரங்காபாத் சாலையில் குருநேஷ்வர் கோவில் அருகே டாட்டா சுமோ வண்டியை பின் தொடர்ந்து சென்று வழி மறித்தது மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படை. இந்த வண்டியினுள் ஆயுதங்கள் தோட்டாக்கள் வெடிபொருட்கள் உள்ளடக்கிய 10 அட்டைப் பெட்டிகள் இருந்தன.

2) டாட்டா சுமோ (MH-14-X-4380) வண்டியை ஜபியுத்தின் என்கிற ஜபியும் அப்துல் அசிமும் வாடகைக்கு எடுத்திருந்தனர் .

3) குற்றவாளி முஜாபர் டாட்டா இன்டிகா வண்டியை வாடகைக்கு எடுத்து அதை மாலேகானில் விட்டுசென்று விட்டான்.

4) நம்பர் பிளேட் இல்லாத சில்வர் கலர் இண்டிகா வண்டி மாலேகான் சயான் சாலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

5) குற்றவாளிகள் அப்சல்கான், நபி கான் ஆகியோர் அளித்த தகவலின் பேரில் மாலே கானில் உள்ள அப்துல்லா கனி என்பவரின் கடையிலிருந்து 5 அட்டைப்பெட்டிகள் கைப்பற்றப்பட்டன. இதில் ஆயுதங்கள், தோட்டாக்கள், வெடி பொருட்கள் இருந்தன.

6) மாலேகான் மன்மத் சாலையில் அமைந்திருக்கும் அன்கை கிராமத்தின் பாலத்தின் கீழே இருந்து இரண்டு பெட்டிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றில் ஆயுதங்கள் தோட்டாக்கள் வெடிபொருட்கள் வெடி மருந்துகள் இருந்தன.

7) விசாரணையின்போது காஷ்மீரைச் சேர்ந்த அஸ்லம் காஷ்மீரி தீட்டிய சதித் திட்டம் தெரியவந்தது. இவனுக்கு பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவனும் லஷ்கர் இ தொய்பா அமைப்பின் உறுப்பினரான ஜூனைத் உடன் தொடர்பு இருந்துள்ளது.

8) இந்தியாவில் அவனைப் போன்ற சிந்தனை உடைய வர்களை தொடர்பு கொண்டுள்ளான் அஸ்லம் காஷ்மீரி. பாலஸ்தீன், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் முஸ்லிம்களுக்கு எதிராக

நடக்கும் அநியாயங்கள், குஜராத்தில் நடந்த படுகொலைகள், இன்னும் இந்தியாவின் மற்ற பிற பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களை கூறி அவர்களை தூண்டி யுள்ளான். அவர்களிடம் குண்டுகளை தயாரிக்க சொல்லி, பழி தீர்ப்பதற்காக ஜிகாத் நடத்த வேண்டும் என்று கூறியுள்ளான்.

9) அஸ்லம் காஷ்மீரியின் பேச்சைக் கேட்டு அவன் கட்டுப்பாட்டிற்குள் அவுரங்காபாத்தை சேர்ந்த முகமது அமீர் வந்துள்ளான்.

10) ஜபியுத்தின் என்கிற ஜபி, பீட் (மகாராஷ்டிரா) பகுதியை சேர்ந்த பயாஸ், அவுரங்காபாத்தை சேர்ந்த ஆக்கிப் இவர்களுடன் முகமது அமீர் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டுள்ளான். அவர்களை போன்ற சிந்தனை உடையவர்களை ஒருங்கிணைத்து அவுரங்காபாத், பீட், மஜல்கான் ஆகிய பகுதிகளில் ஒரு அமைப்பை ஏற்படுத்தி யுள்ளனர். இந்தியாவிலும் இதர பகுதிகளிலும் முஸ்லிம்களுக்கு எதிராக நடக்கும் அநியாயங்களை விவாதித்துள்ளனர். அஸ்லம் காஷ்மீரின் விருப்பப்படி இந்துக்களுக்கு எதிராகவும் இந்தியாவிற்கு எதிராகவும் ஜிஹாதை நடத்த வேண்டும் என்று முடிவு செய்துள்ளனர்.

11) அப்போதைய குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி, VHP தலைவர் பிரவீன் தொகாடியா போன்ற இந்து தலைவர்களை கொல்ல இக்குழு திட்டமிட்டது.

12) 2005 ஏப்ரல், மே மாதத்தில் அவுரங் கா பாத்திற்கு அஸ்லம் காஷ்மீரி வந்துள்ளான். அவனுடைய பேச்சினால் தூண்டப்பட்டு ஆசாத் (பீட்), நிசாத் (மஜல்கான்), பஹத் (அவுரங்காபாத்) ஆகியோர் ஜிஹாத் செய்ய அவனுடன் காஷ்மீர் சென்றுள்ளனர்.

13) இரண்டு மாதத்திற்கு பின் மீண்டும் அஸ்லம் காஷ்மீரி அவுரங்காபாத்திற்கு வந்து முகமது அமீரையும் அவனுடைய நண்பர் பிலாலையும் சூரத் வழியாக ஜம்முவிற்கு அழைத்துச் சென்றுள்ளான்.

14) ஜம்முவில் உள்ள ஹோட்டல் ஹிந்துஸ்தான் பேலஸில் அவர்கள் தங்கியிருந்து பின்னர் சுரன் கோட் வழியாக ஹில்லாக் வந்தடைந்து இரண்டு போராளிகளை சந்தித்துள்ளனர். அமீரும் பிலாலும் ஜிஹாதிற்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் ஏற்கனவே வந்திருந்த மூவரில் பகத் இராணுவ நடவடிக்கையில் இறந்து விட்டான் எனவும் அப்போராளிகள் தெரிவித்துள்ளனர்.

15) ரூபாய் 35 ஆயிரத்தை முகமது அமீருக்கு வழங்கியுள்ளான் அஸ்லம் காஷ்மீரி. அமீரும் பிலாலும் அவுரங்கபாத்திற்கி திரும்பி யுள்ளனர்.

16) ஜபி, பயாஸ் இருவரிடமும் பகத் கொல்லப்பட்டதை தெரிவிக்கின்றான் முகமது அமீர்.

17) சில மாதங்களுக்கு பின் மீண்டும் அவுரங்காபாத்திற்கு வருகிறான் அஸ்லம் காஷ்மீரி. பீட் பகுதிக்கு வருமாறு அவனை அழைக்கிறான் பயாஸ். ஜபி, பயாஸ், ஆக்கிப் ஆகிய மூவரும் பஹதிற்கு என்ன நேர்ந்தது என்று அவனிடம் கேட்கின்றனர். இதுபற்றி ஜுனைத்திற்கு தெரியும் என்று அவன் கூறுகிறான். ஜுனைத் யார் என்று கேட்கும்போது ஜுனைத் பாகிஸ்தானை சேர்ந்தவன் என்றும் லஷ்கரே தொய்பாவிற்கு வேலை செய்பவன் என்றும் காஷ்மீரி கூறுகிறான்.


18) அவன் லஷ்கரே தொய்பாவிற்கு வேலை செய்தவனா என்று காஷ்மீரியிடம் அவர்கள்



மூவரும் கேட்கின்றனர். காஷ்மீர் அல்லது பங்களா தேஷிற்கு வந்து நீங்களே தெரிந்துகொள்ளுங்கள் என்று கஷ்மீரி அவர்களிடம் கூறுகிறான். அவர்கள் மறுத்துவிடவே, காத்மண்டுவிற்கு அவர்களை அழைக்கின்றான்.

19) மூவரும் காத்மண்டுவிற்கு வந்து ஜூனைதை சந்திக்கின்றனர்.

20) மூவரும் திரும்பி வந்தபின், ஜூனைத் ஒரு லஷ்கர்-இ-தொய்பா நபர் என்றும் அவனை தொடர்பு கொள்ள இன்டர்நெட் முகவரியைக் தனக்கு தந்ததாகவும் முகமது அமீரிடம் கூறுகிறான் பயாஸ். இன்டர்நெட் வழியை மட்டும் பயன்படுத்தி ஜூனைதை தொடர்பு கொள் என அமீரிடம் கூறுகிறான் பயாஸ்.



21) பிப்ரவரி 2006இல் அமீர், ஆக்கிப், பயாஸ் ஆகியோர்களின் முன்னிலையில் பீட் பகுதியில் வைத்து வெடிகுண்டை தயாரித் தான் ஜபி.

22) இந்த வெடிகுண்டை அகமதாபாத் ரயில் நிலையத்தில் வைத்தான் பயாஸ்.

23) இந்த வெடிகுண்டு வெடித்ததனால் 67 பேர் உயிரிழந்தனர்.

24) மார்ச்-ஏப்ரல் 2006இல் ஜூனைதை சந்திப்பதற்காக பங்களாதேஷ் செல்லுமாறு அமீரிடம் கூறுகின்றான் ஜபி. தனக்கு வேலை இருப்பதால் அமீர் செல்ல மறுக்கிறான். ஆனால் அப்ரோஸ் (மஜல் கான்), முஸ்தபா (அகமது நகர்) ஆகியோரை பங்களாதேஷிற்கு செல்ல சம்மதிக்க வைக்கின்றான்.

25) அஷ்ரப், முஸ்தபா இருவரிடமும் பணத்தையும், ஒரு போன் நம்பரையும் கொடுத்து கல்கத்தாவிற்கு அனுப்பி வைக்கின்றான் ஜபி.

26) நரேந்திர மோடியையும், பிரவீன் தொகாடியாவையும் கொல்வதற்கு பாகிஸ்தானி லிருந்து ஆயுதங்களையும் வெடி பொருட் களையும் ஜூனைத் அனுப்பிக் கொண்டிருந்தான் என்று அமீரிடம் தெரிவிக்கின்றான் ஜபி.

27) பயிற்சி எடுப்பதற்காக ஈரான் வழியாக பாகிஸ்தான் சென்று கொண்டு இருக் கின்றேன் என்று அமீரிடம் தெரிவிக்கின்றான் பயாஸ். ஜூனைத் கூறிய படி, ஆயுதங்களையும் வெடி பொருட்களையும் பெறுவதற்கு 9 மே 2006 அன்று மும்பை வழியாக ஈரான் செல்ல வேண்டும் என்றும் கூறுகிறான்.

28) மே 8 அன்று, முஜாபர் உடைய மொபைல் போனிலிருந்து (9890986742) அமீரிடம் பேசுகின்றான் ஜபி. பயாசின் ஈரான் பயணம் குறித்து விசாரிக்கின்றான். ஒரு சிம் கார்டை வாங்கிக்கொண்டு ஆக்கிஃப் உடன் பீட் பகுதிக்கு வருமாறு அமீரிடம் கூறுகின்றான்.

29) தன்னுடைய உறவினரான முஜாபரிடம் ஒரு சிம் கார்டை வாங்கி கேட்கின்றான் அமீர். 9823775295 என்ற நம்பருடைய சிம்கார்டை அமீரிடம் கொடுக்கின்றான் முஜாபர்.

30) மே 8 அன்று அமீர், ஆக்கிப் இருவரும் மாலை நேரத்தில் பீட் பகுதிக்கு வந்தடை கின்றனர். ஆயுதங்கள் வெடி பொருட்கள் விரைவில் நம்மை வந்தடையும் என்று ஜூனைத் மெசேஜ் அனுப்பி இருக்கின்றான் என்று மொபைல் போன் வழியாக அமீரிடம் தெரிவிக் கின்றான் ஜபி.

31) 9 மே 2006 அன்று மும்பை வழியாக ஈரான் புறப்படுகிறான் பயாஸ்.

32) மும்பை நாசிக் ரோட்டில் உள்ள பிம்பல்கான் பகுதிக்கு அருகே உள்ள இடத்தில் ஐசர் (EICHER CANTER) டெம்போவின் மூலமாக ஆயுதங்களும் வெடிப் பொருட்களும் வந்து சேரு கின்றன.

மேலே கூறப்பட்ட விவரங்கள் நம்மை குழப்பமடைய செய்யும். எனவே இதனை கவனமாக ஆராய்வோம்.

விசாரணை தரப்பு கூறிய மொத்த கதையையும் இரண்டு பகுதிகளாக பிரிக்கலாம்.


vaigarai velicham official

**a) காவல்துறையின் நடவடிக்கை :**

டாட்டா சுமோ வண்டியை வழிமறித்த தீவிரவாத எதிர்ப்பு படையின் நடவடிக்கையை சில காவல்துறை அதிகாரிகளின் வாய்மொழி வாக்குமூலங்கள், சில சாட்சியங்கள் அதாவது டாட்டா சுமோ வண்டியின் உரிமையாளர் மற்றுமொரு நபர், மேலும் இந்நிகழ்வோடு தொடர்புடைய சம்பவங்கள், கைப்பற்றப்பட்ட பொருட்கள் இவற்றைக்கொண்டு நிரூபணம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**b) குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலங்கள்.**

மேற்கூறிய இரண்டு பகுதிகளிலும் காவல் துறையின் நடவடிக்கையான வண்டியை வழி மறித்து மடக்கியது தான் முக்கியமான பகுதி யாகும். மொத்த வழக்கும் இதனை அடிப் படையாக வைத்தே அமைந்துள்ளது. வரிசை எண் 1 இலிருந்து 6 வரை கூறப்பட்ட விவரங்கள் இப்பகுதியோடு தொடர்புடையவை. இதில் எவ்வளவு உண்மை இருக்கின்றது என்பதை நாம் பார்க்கலாம்.

**2) காவல்துறையின் நடவடிக்கை**

தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகளால் விரட்டி பிடித்து வழி மறிக்கப்பட்ட டாட்டா சுமோ வாகனம் ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடி பொருட்கள் ஆகியவை பெருமளவில் கடத்தப்படுவதாக 8 மே 2006 அன்று மும்பை தீவிரவாத எதிர்ப்புப் படையின் DCP ஜெய்ஜீத் சிங்கிற்கு ஒரு ரகசிய தகவல் கிடைக்கிறது. இத்தகவலில் குறிப்பான விபரங்கள் எதுவும் இல்லை. அதாவது தேதி, நேரம், சாலையின் பெயர், மாவட்டத்தின் பெயர், வண்டியின் பெயர் என்ற எந்த விபரமும் இல்லை. எனினும் அவர் இத்தகவலை தீவிரவாத எதிர்ப்பு படையின் ACP செங்காலிடம் பகிர்ந்து இதுபற்றி கண்டறிய கேட்டுக்கொண்டுள்ளார்.

8 மே 2006 அன்று மாலையிலேயே இரண்டு அணிகளை உருவாக்கினார் ACP செங்கால். ஒரு அணிக்கு அவரே தலைமை தாங்கினார். மற்றொரு அணிக்கு இன்ஸ்பெக்டர் தஜ்நே தலைமை தாங்கி னார். செங்காலிற்கு உதவியாக இன்ஸ்பெக்டர் தேஷ்முக் சேர்த்துக் கொள்ளப்பட்டார். செங்கால் அணி இயோல (மகாராஷ்டிரா) சந்திப்புக்கு சென்றது. மன்மத்-அவுரங்கா பாத் சாலையில் வாகனங்களை சோதனையிட ஆரம்பித்தது.

தஜ்நே அணி நிபாத் சந்திப்புக்கு சென்று வாகனங்களை சோதனை இட்டது. 9 மே 2006 மாலை 4 மணி அளவில் MH-14-X-4380 என்ற நம்பர் உடைய டாட்டா சுமோ வாகனம் மன்மத் பகுதியில் இருந்து வருவதை கண்டது செங்கால் அணி. நிறுத்துவதற்கு சைகை காட்டியும் நிறுத்தாமல் அந்த வாகனம் சென்றது.

எனவே அவ்வாகனத்தை செங்கால் அணி தங்களுடைய பொலிரோ வாகனத்தில் பின் தொடர்ந்து சென்றது. 70-80 கிலோ மீட்டர் பின்தொடர்ந்து சென்றபிறகு 5.35 மணிக்கு டாட்டா சுமோ வாகனத்தை முந்தி சென்று வெருல்-அவுரங்காபாத் சாலையில் உள்ள குரு நேஸ்வர் கோவிலின் அருகே மடக்கிப் பிடித்தது செங்கால் அணி. காரில் இருந்த முகமது அமீர் பிடிபட்டான். டிரைவர் உட்பட மற்ற இருவர் தப்பியோடினர். இவர்களின் பெயர்கள் செய்யது ஜுபைர், அப்துல் அசிம் என தெரியவந்தது.

பிரவுன் கலர் பத்து அட்டைப் பெட்டிகள் அந்த வாகனத்தில் இருந்தன. அதில் 10 AK 47 துப்பாக்கிகள், 40 இதழ்கள், 200 தோட்டாக்கள், கருப்பு நிற 3 கிலோ எடையுடைய வெடி பொருட்களும் இருந்தன. வாகனத்தையும் கடத்தல் பொருட்களையும் குல்தாபாத் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்ற தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகள் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தனர். மொத்த அத்தி யாயத்திலும் இதுதான் முக்கியமான பகுதி. ஆனால் இதில் எவ்வளவு ஓட்டைகள் உள்ளன என்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

1) தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரி களுக்கு கிடைத்த தகவல்கள் முற்றிலும் தெளி வில்லாதவை. இத்தகவலை வைத்து தேடுவது என்பது வைக்கோல் போரில் குண்டூசியை தேடுவதற்கு சமம். மகாராஷ்டிராவின் மற்ற பகுதிகளை தீவிரவாதிகளுக்கு திறந்து விட்டு விட்டு பின் எப்படி நாசிக் ஐ நோக்கி தீவிரவாத எதிர்ப்பு படையின் இரு அணிகளும் சென்றன. எந்த அடிப் படையில் மன்மத்-அவுரங்காபாத் சாலை, நிபாத் சந்திப்பில் சோதனை மேற் கொண்டனர்.

2) விசாரணையின்போது தெரிய வந்த உண்மை என்னவென்றால் பொலிரோ வாக



னத்தில் சென்ற எந்த ஒரு தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகளும் கான்ஸ்டபிளும் சீருடையில் இல்லை. மேலும் காவல்துறையின் லோகோவோ (logo) ஏன் "காவல்" என்ற எழுத்தோ வாகனத்தில் இல்லை. தீவிரவாத எதிர்ப்புப் படை அதிகாரிகள் சாதாரண உடையில் நின்று கொண்டு வாகனத்தை நிறுத்தினால் எப்படி நெடுஞ்சாலையில் செல்லும் தனியார் வாகனங்கள் நிற்கும்?

*3)* டாட்டா சுமோ வாகனத்தைப் போன்று பல வாகனங்கள் நிற்காமல் வேகமாக கடந்து சென்றுள்ளன. ஏன் அந்த வாகனங்களை பின் தொடரவில்லை. டாட்டா சுமோ மட்டும் ஏன் பின் தொடரப்பட்டது?.

மேலும், இந்த வழக்கோடு தொடர்புடைய தீவிரவாத எதிர்ப்புப் படையின் ஒரு முக்கிய அதிகாரி, சம்பவத்தை நேரில் பார்த்த ஒரே ஒரு நேரடி சாட்சியம் (இவரின் அடையாளம் வெளிப்படுத்தப்பட வில்லை) இவர்களின் நம்பகத்தன்மையில் சந்தேகம் இருந்தும் கூட விசாரணை தரப்பு அவற்றை கண்டுகொள்ள வில்லை. காவல் துறையின் கூற்றில் உள்ள முரண்பாடுகளை கீழே விவாதிக்கலாம். அதன் மூலம் அதில் உள்ள பொய்களை அம்பலப் படுத்தலாம்.

*1)* 2006 மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் 9 முஸ்லிம் இளைஞர்களை கைது செய்து குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது செங்கால் அணி. பின்னர் இவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டு இந்து தீவிரவாத குழுமத்தை சேர்ந்த இளைஞர்களின் மீது குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்தது தேசிய புலனாய்வு முகமை. இதை மேற்கோள் காட்டி ACP செங்கால் அணியின் மதச்சார்பற்ற தன்மையின் மீது பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. 2006 மும்பை ரயில்நிலைய குண்டு வெடிப்பு வழக்கு (7/11 வழக்கு) விசாரணையிலும் இவர் ஈடுபட்டிருந் தார். எப்படி இந்த மொத்த வழக்கும் பொய் யானது, ஜோடிக்கப்பட்டது என்பதை அத்தி யாயம் 5 இல் விவாதித்து உள்ளோம்.

*2)* குறுக்கு விசாரணையின் போது ACP செங்காலால் வாகனம் இடை மறிக்கப்பட்ட இடமான குருநேசுவர் கோயிலின் இருப்பிடத்தை கூற இயலவில்லை. நெடுஞ்சாலையில் அவர்கள் வலது பக்கம் திரும்பினார்களா அல்லது இடது பக்கம் திரும்பினார்களா என்ற எளிமையான கேள்விக்கு கூட இவரும் போலீஸ் இன்ஸ்பெக்டர் தேஷ்முக்கும் மாறுபட்ட பதில்களை தந்தனர்.

*3)* சுமோ வாகனத்தை பின் தொடர்ந்து கொண்டிருக்கும்போது அதைக்குறித்து தன்னுடைய உயரதிகாரிகளிடம் தெரிவித்தேன் என்று ACP செங்கால் கூறினார். ஆனால் யாரிடம் இத்தகவலை தெரிவித்தேன், அவர்களை எப்படி தொடர்பு கொண்டேன் என்பதை அவர் விளக்கவில்லை.

*4)* வாகனம் இடை மறிக்கப்பட்ட குரு நேசுவர் கோவிலின் வண்டிகளை நிறுத்து மிடத்தில் 10-12 கடைகள் இருந்தன. ஆனாலும் கடை வைத்திருந்தவர்களில் ஒருவர்கூட சாட்சிய மாக விசாரணை செய்யப்படவில்லை.

*5)* ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்ட குற்றப் பத்திரிகையில் தனிப்பட்ட சாட்சியமாக இருந்த ஒரே ஒரு நபரின் வாக்குமூலத்தை சேர்க்க வில்லை. அவருடைய வாக்குமூலத்தை சேர்க்க வேண்டும் என்று பின்னரே முடிவு செய்யப்பட்டு இணைக்கப்பட்டதாக தெரிகிறது. சம்பவம் நடந்த இரண்டரை மாதங்களுக்குப் பின் அவருடைய துணை வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டு குற்றப் பத்திரிகையில் 15 டிசம்பர் 2006இல் இணைக்கப்பட்டது.

*6)* இந்த தனிப்பட்ட சாட்சியம் அளித்த வாக்குமூலமும் காவல் துறை அதிகாரிகள் அளித்த வாக்கு மூலமும் பின்வரும் முக்கியமான தகவல்களில் ஒன்றுக்கொன்று முரண்பட்டன. உதாரணமாக, சம்பவ இடத்தில் கைது செய்யப் பட்ட குற்றவாளி அணிந்திருந்த உடையின் நிறம், சுமோ வாகனத்தில் பெட்டிகள் வைக்கப்பட் டிருந்த இடம், வெருல் (Verul) மலைப் பகுதியில்


vaigarai velicham official

குற்றவாளியை தேடி காவல்துறையுடன் இவர் சேர்ந்து சென்றாரா இல்லையா, பொலிரோ வாகனத்தில் இருந்தவர் இவரிடம் சுமோ வாகனத்தில் இருந்தவர்கள் தீவிரவாதிகள் என்று கூறினாரா இல்லையா?. ஆனால் நீதிமன்றம் இவற்றையெல்லாம் கண்டு கொள்ளவில்லை. மாறாக காவல்துறை வாக்குமூலத்தை தவறாக பதிவு செய்துவிட்டது என்று கூறியது.

7) நடந்த சம்பவம் நினைவில் இல்லை என்று கூறி குறுக்கு விசாரணையின்போது கேட்கப்பட்ட அநேக கேள்விகளுக்கு பதில் தர மறுத்துவிட்டார் இந்த நட்சத்திர சாட்சியம். எனினும் அவர் அளித்த சாட்சியத்தை இவ்வாறு கூறி நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது "மிக நீண்ட இடைவேளைக்கு பின் ஞாபக மறதி ஏற்படுவதை காரணம் காட்டி அவர் அளித்த சாட்சியத்தை பொய்யென்று கூற முடியாது".

8) ACP செங்காலும் அவரது அணியும் மாலை 4 மணிக்கு டாட்டா சுமோ வாகனத்தை பின்தொடர ஆரம்பித்தனர் என்றும் மாலை 5.45 மணிக்கு அதனை வழிமறித்தனர் என்றும் வழக்கு விசாரணையில் கூறப்பட்டிருந்தது. ஆனால் குல்தாபாத் காவல் நிலையத்தில் உள்ள டைரியில் மாலை 5.35 மணிக்கு இதைப் பற்றிய தகவல்கள் பதியப்பட்டுள்ளது.

மேற்கூறிய விவரங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து பார்த்தால் டாட்டா சுமோ வாகனத்தை இடைமறித்த செயல் ஒரு அரங் கேற்றப்பட்ட நாடகம் என்பது புரியும்.

### அப்துல் அசீம் (A4), ஜபியுதீன் என்கிற ஜபி (A22) என்பவர்களால் வாடகைக்கு எடுக்கப்பட்ட டாட்டா சுமோ வாகனம் :

குற்றப் பத்திரிகையில் உள்ளபடி, ஆயுதங்கள், வெடி பொருட்கள், வெடிமருந்துகள் இவற்றை கடத்த பயன்படுத்தப்பட்ட, காவல்துறையால் வழி மறிக்கப்பட்ட டாட்டா சுமோ வாகனத்தின் எண் MH-14-X-4380. இதன் உரிமையாளர் ரபிக் சேக் (PW 1). பீட் பகுதியை சேர்ந்தவர். இவரிடமிருந்து வாகனத்தை வாடகைக்கு எடுத்தவர்கள் அப்துல் அசீம் (A4), ஜபியுதீன் என்கிற ஜபி (A22).

பொய் சாட்சியமும் போலியான ஆவணங் களும் மேற்கூறிய விஷயத்தில் ரபிக் ஷேக் (PW1) உடைய வாக்கு மூலம் முக்கியமான சான்று. இதை வைத்தே இவரே டாட்டா சுமோ வாகனத்தின் உரிமையாளர் என்றும் முக்கிய குற்றவாளிகளான அப்துல் அசிம் (A4), ஜபியுதீன் என்கிற ஜபி (A22)இருவரையும் இவ்வழக்கோடு இணைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இவ்வழக்கின் உடைய தீர்ப்பையும் மற்ற ஆவணங்களையும் கவனமாக ஆராய்ந்து அதை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் (RTO)தந்த தகவல்களோடு இணைத்துப் பார்த்தால் மொத்த கதையும் பொய்யென்று புலப்படும்.

### ரபிக் ஷேக் உடைய வாக்குமூலம் பின்வரும் உண்மைகளை வெளிப்படுத்துகின்றது:

1) ஷிண்டே என்பவரிடமிருந்து டாட்டா சுமோ வாகனத்தை இவர் விலைக்கு வாங்கி யுள்ளார்.

2) 2006இல் வாகனத்தை வாங்கியுள்ளார். மேலும் பீட் துணை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இது பதிவு செய்யப்பட் டுள்ளது. (குற்றப்பத்திரிக்கையின் படி, 28 ஏப்ரல் 2006-இல் பதிவு நடந்துள்ளது. அதாவது வாகனம் இடை மறிக்கப்பட்ட சம்பவம் நடப்பதற்கு 11 நாட் களுக்கு முன்னர்)

3) காவல் துறையிடம் வாகன பதிவு சம்பந்தப்பட்ட நகல்களை இவர் வழங்கி யுள்ளார். பீட் துணை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் முத்திரை அடங்கிய பதிவு சம்பந்தப் பட்ட கோப்புகள் Ext. 1075 என்று அடையாளப்படுத்தப்பட்டு நீதிமன்றத்தில் வைக்கப்பட்டன.

4) நீதிமன்றத்தில் இவர் வாக்குமூலம் அளிக்கும்போது, வாகனத்தின் உடைய RC புத்தகத்தின் நகல்களையும், வாகனப் பதிவு சம்பந்தப்பட்ட நகல்களையும் அடையாளம் காட்டியுள்ளார்.

5) கடன் வாங்கி இருந்ததால் ஒரிஜினல் பேப்பர்கள் நிதி நிறுவனத்திடம் இருந்தன. எனவே அவர் நகல்களை காவல் துறையிடம் வழங்கியுள்ளார்.

6) வாகனத்தை மூன்று லட்சத்திற்கு வாங்கி யுள்ளார். அதில் ஒரு லட்சத்தை உரிமை யாளருக்கு வழங்கியுள்ளார். மீதி பணத்திற்காக அவர் நிதி நிறுவனத்தை நாடியுள்ளார்.

பிம்பிரி - சின்ச்வாத் துணை வட்டார போக்குவரத்து அலுவலகம் மற்றும் பீட் வட்டார

போக்குவரத்து அலுவலகம் இவற்றிடமிருந்து தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்

MH-14-X-4380 என்ற நம்பர் உடைய வாகனத்தை பற்றி பெறப்பட்ட விவரங்கள் நமக்கு வேறு ஒரு கதையை சொல்லுகின்றது.

1) ஷிண்டே விடமிருந்து தான் வாகனத்தை வாங்கினேன் என்று சாட்சி கூறினார். ஆனால் ஷிண்டே என்ற எந்தப் பெயரிலும் அவ்வாகனம் இல்லை. பிம்பிரி- சின்ச்வாத் துணை வட்டார போக்கு வரத்து அலுவலகம் தந்த தகவலின் படி, MH-14-X-4380 என்ற நம்பர் உடைய வாகனம் 7 ஜனவரி 2003 இல் புனே போசரி பகுதியில் வசிக்கும் பாலாசாஹெப் யஷ்வந்த் முலிக் என்பவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்பு,

வாகனத்தை ரபிக் சேக் (இருப்பிடம்: புந்தேபுர மாவட்டம், பீட்) என்பவருக்கு மாற்ற 28 ஏப்ரல் 2006இல் பிம்பிரி - சின்ச்வாத் துணை வட்டார போக்கு வரத்து அலுவலகத்திடமிருந்து பீட் துணை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு NOC (No objection Certificate) வழங்கப் பட்டுள்ளது.

2) மேலும் பீட் துணை வட்டார போக்கு வரத்து அலுவலகம் தந்த தகவலின்படி, MH-14-X-4380 என்ற நம்பர் உடைய வாகனம்

2006 இலோ அல்லது அதன் பின்போ பீட் RTOவில் பதிவு செய்யப்படவில்லை. எனவே ரபிக் சேக் என்பவரின் பெயரில் வாகனம் மாற்றப்பட்டது என்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாது.

ரபிக் சேக் அளித்த வாக்குமூலத்தை வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் தந்த தகவல் களோடு சேர்த்துப் பார்த்தால் 28 ஏப்ரல் 2006 இல் வாகனம் ரபிக் சேக் பெயரில் மாற்றப்பட

வில்லை என்பது தெளிவாகிறது.


மேலும், வாகனம் மாற்றப்பட்ட தற்கான வேறு எந்தவிதமான ஆவணங்களும் இல்லை. வாகனத்தை வாங்குவதற்கு பணத் தேவைக்காக நிதி நிறுவனத்திடம் விண்ணப்பித்து உள்ளேன் என்று ரபிக்ஷேக் கூறினார். ஆனால் எப்பொழுது அவர் கடனை பெற்றுக்கொண்டார், எப்பொழுது பண பரிமாற்றங்கள் நிறைவடைந்தன என்பதை நிருபிக்கும் எந்த ஆவணமும் சமர்ப்பிக்கப் படவில்லை. - தொடரும்...




நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.50/-

முஸ்லிம்களை ஏன் கட்டுப்படுத்தாது என்றால், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 25 முஸ்லிம்களுக்கும், சிறுபான்மையினருக்கும் மத விவகாரங்களில் முழு சுதந்திரத்தை வழங்குகின்றது. அரசியல் நிர்ணயச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் ஆற்றல் மிக்கவையா? வழிகாட்டும் கொள்கைகள் ஆற்றல் மிக்கவையா என வருகின்றபோது அடிப்படை உரிமைகளே ஆற்றல் மிக்கவை. ஆகவே வழிகாட்டும் கொள்கையில் அமைந்துள்ள பிரிவு 44 நம்மை எந்த விதத்திலும் முஸ்லிம்களை கட்டுப்படுத்தாது. (ஆதாரம் *The Muslim of India. A Documentary Record by A.G.Noorani P.157-158)*

- நூலிலிருந்து




நூலைப்பெற
போன்:
7401213394
7358278146
8148129887
விலை
ரூ.25/-

இந்த சித்திரவதைக் கூடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுபவர்கள், தாங்கள் எங்கே அழைத்துச் செல்லப்படுகின்றோம் என்பதை அறிந்திடவே மாட்டார்கள். அவர்களின் கண்களை கட்டித்தான் அழைத்துச் செல்வார்கள். அவர்களை யாரும் சந்திக்க இயலாது. அவர்கள் தங்களை சித்திரவதைப் படுத்துபவர்களை மட்டுமே பார்த்திட இயலும். இவற்றில் முக்கிய சித்திரவதைக் கூடம் மும்பையிலுள்ளது. ஹயசநல – ஆய்ரி வசதி கூடம் என இதற்குப் பெயர். இங்கே நான்கு அறைகள் இருக்கின்றன. இங்கே வைத்துதான் 2006 மாலேகான் குண்டு வெடிப்போடு சம்மந்தப்பட்ட செய்யத் கான் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்பவர் விசாரிக்கப்பட்டார். சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்.

- நூலிலிருந்து



vaigarai velicham official






தொடர்...

# முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

பாகம் 2 தொடக்கம்

- அல்லாமா அபுல் ஹஸன் அலி நத்வி (ரஹ்)

உலகத் தலைமை முஸ்லிம்களிடமிருந்து இடம் மாறி ஐரோப்பியர்களிடம் சென்றதால் உலகின் மனப்போக்கில் ஏதேனும் மாறுதல் ஏற்பட்டதா? உலகில் வாழும் பல்வேறு இன மக்களின் குணங்களிலும் அவர்களின் மனிதநேய அணுகுமுறைகளிலும் பொதுமக்களின் சிந்தனையோட்டத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டனவா?

இந்தத் தலைமை மாற்றத்தால் மனித இனம் ஏதேனும் பலன் பெற்றதா? அதனால் ஏற்பட்ட இழப்பைவிட பலன் அதிகமா? பலனைவிட இழப்பும் துன்பமும் அதிகமா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில்களை நாம் பார்ப்பதற்கு முன்னால் மேற்கத்திய நாகரிகத்தின் இயல்பையும் அது இயங்கும் முறைகளையும் அதன் ஆன்மாவையும் அதை ஒரு நாகரிகமாக ஏற்று வாழ்ந்திடும் சமுதாயங்களின் தத்துவங்களையும் அந்த சமுதாயங்கள் எப்படி உருவாயின என்பதையும் நாம் கண்டிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கி.பி. இருபதாம் நூற்றாண்டில் (நாம் காணும் இந்த) மேற்கத்திய கலாச்சாரம் என்பது பிந்தைய நூற்றாண்டுகளில் தோன்றியதல்ல. அதாவது ஐரோப்பாவின் இருண்ட காலம் என்றறியப்படும் காலத்தையொட்டி தோன்றியதல்ல. பலரும் நினைத்துக் கொண்டிருப்பதுபோல அது நவீனமானதுமல்ல.

மாறாக, அதன் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முந்தையது. ஆம், அது ரோம, கிரேக்க கலாச்சாரங்களின் வழித்தோன்றல்.

அவ்விரு கலாச்சாரங்களின் அரசியல் வாரிசாகவும், சமூக மற்றும் அறிவு வாரிசாகவும் வந்ததுதான் இந்த மேற்கத்திய

# மேற்கத்திய நாகரிகத்தின் இயல்பும் அதன் வரலாறும்

தமிழில் : பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி

கலாச்சாரம். சமூக தத்துவம் அரசியல் அமைப்பு ஆகியவற்றில் அவ்விரு கலாச்சாரங்களும் என்ன உள்ளடக்கங்களைக் கொண்டிருந்தனவோ அவற்றைத் தாங்கியே இந்த மேற்கத்திய கலாச்சாரமும் அறிவு வாரிசாகவும் மன வாரிசாகவும் வந்தது.

அவ்விரு கலாச்சாரங்களின் சிறப்பம்சங்களும் குணங்களும் இதில் பிரதிபலித்தது மட்டுமல்ல. இதன் குருதியோட்டத்தில்கூட ஊடுருவியிருந்தது.

ஐரோப்பியர்களின் மனோபாவத்தில் முதன் முதலில் ஈர்ப்புக்குரியதாக தெரிந்தது கிரேக்க நாகரிகம்தான். ஐரோப்பியத் தத்துவத்தின் அடிப்படையின் மீது முதன்முதலாக நிலை நின்றதும் கிரேக்க நாகரிகம்தான். அதிலேதான் ஐரோப்பாவின் ஆன்மாவும் வெளிப்பட்டது. வரலாறு கூறும் உண்மை இதுதான்.

(பிறகு ஐரோப்பியர்கள் கிரேக்க நாகரிகத்தை கைவிட்டனர்) ஐரோப்பாவில் கிரேக்க நாகரிகம் வீழ்ந்தது. அதன் இடிபாடுகளில்மேல் ரோம நாகரிகம் எனும் மாளிகை எழுந்து நின்றது. அது ஐரோப்பிய ஆன்மாவைச் சுமந்துகொண்டது.

ஐரோப்பிய மக்களும் ரோம நாகரிகத்தின் சிறப்பியல்புகளையும் தன்மைகளையும் பல நூற்றாண்டுகளாக பேணிப் பாதுகாத்து வந்தனர். அதன் தத்துவதுக்கு அறிவுக்கும் நடத்தைக்கும் சிந்தனைகளுக்கும் வாரிசுகளானார்கள்.

இந்த ரோம நாகரிகம் ஐரோப்பியர்களிடத்தில் எழிலார்ந்த ஆடையணிந்தும் கவனத்தை ஈர்க்கும் நிறம்பூசியும் வெளிப்பட்டது. பார்ப்பதற்கு புதிய ஆடைபோல தோற்றமளித்தாலும் அதன் ஊடு நாலும் பாவு நாலும் கிரேக்கமும் ரோமும்தான்.

எனவேதான் சொல்கிறேன் ஐரோப்பியக் கலாச்சாரத்தை அறிந்திடும் முன்னரே கிரேக்க, ரோம் நாகரிகங்களையும் நாம் அறிந்திட வேண்டும். அவற்றின் இயல்பையும் ஆன்மாவையும் திறம்பட அறிந்து கொண்டால்தான் இருபதாம் நூற்றாண்டில் இருக்கும் நாம் மேற்கத்திய நாகரிகத்தை திறனாய்வு செய்து அதைப்பற்றி ஒரு முடிவெடுக்க முடியும்.

## கிரேக்க நாகரிகத்தின் சிறப்பம்சங்கள்

கிரேக்கர்களை பெரும் பாக்கியம் மிக்கவர்கள். புத்திசாலிகள். அறிவில் இலக்கியத்தில் பெரும் தயாரிப்புகளுடன் இருந்தவர்கள். சிந்தனைகளிலும் சாமார்த்தியத்திலும் வளம் மிக்கவர்கள்.

தன் தத்துவத்தாலும் இலக்கியத்தாலும் உலகில் தனக்குத் தக்கதோர் இடத்தை நிரந்தரமாக பிடித்துக் கொண்டவர்கள்.

கிரேக்க அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், பேரறிஞர்கள் தந்த அறிவுப் பொக்கிஷங்களால் உலகின் நூலகங்கள் வளம்பெற்றிருக்கின்றன.

இப்போது நமக்குத் தேவை என்னவென்றால் இப்படிப்பட்ட மாமனிதர்கள் உருவாக்கித் தந்த நாகரிகத்தின் இயல்பை நாம் அறிந்திட வேண்டும். அதன்மீது நாம் ஒரு திறனாய்வுப் பார்வையை வைத்தால், தோற்றத்திலும் நிகழ்விலும் அது இதர நாகரிகங்களுடன் சேர்ந்திருப்பதைப் பற்றியெல்லாம் சிந்திக்காமல் அதன் இயல்பையும் சிறப்பையும் ஆய்வு செய்தால் நமக்குக் கிடைக்கும் விடை என்னவென்றால், அதோர் உன்னதமான நாகரிகம் இதர நாகரிங்களைவிட குறிப்பாக (கிழக்கு) கீழை நாகரிகங்களைவிட பல சிறப்புக் கூருகளைக் கொண்டது என்பதுதான்.

1) ஐம்புலன்களால் அறிய முடிவதை மட்டுமே ஏற்க முடியும். புலனறிவுக்கு அப்பாற்ற எதையும் பொருட்படுத்த வேண்டியதில்லை.

2) மார்க்கப்பற்றும் இறையச்சமும் மதிக்கத்தக்கவையல்ல.

3) இவ்வுலக வாழ்வுக்கு தீவிரமான பெருமதியளிப்பது உலகப்பயன்களுக்கும் அதன் சுகங்களுக்கும் கூடுதல் மதிப்பளிப்பது.

4) தேசியவாத உணர்வு.

கிரேக்க நாகரிகத்தில் இவையெல்லாம் தூக்கலாக இருந்தன.

இப்படி பல்வேறு வார்த்தைகளைக் கொண்டு சொல்லப்பட்டவற்றை ஒரு வார்த்தையில் சுருங்கக் கூறுவதென்றால் “உலகாதாயம்” என்று சொல்லிவிடலாம்.

கிரேக்க நாகரிகத்தின் அடையாளமே உலகாயதம்தான்.

கலாச்சாரம், அறிவு, தத்துவம், கவிதை, மதம் என எவையெல்லாம் கிரேக்கர்களுடன் சம்பந்தப்பட்டிருந்ததோ அவை அனைத்திலும் உலகாயதம் ஊடுருவியிருந்தது.

கடவுளின் பண்புகளையும் ஆற்றலையும் உருவத்துடன் பிணைத்துதான் அவர்களால் சிந்திக்க முடிந்தது. எனவே அவர்கள் பல சிலைகளை வடித்தார்கள். அவற்றுக்காக கோவில்களையும் வணக்கத்தலங்களையும் கட்டினார்கள்.


vaigarai velicham official

உணவளிக்க ஒரு கடவுள். அன்பு செலுத்த ஒரு கடவுள். அடக்கி ஆள ஒரு கடவுள் என்று வடித்தார்கள். குணங்களுக்கு ஏற்ப கடவுள்களுக்கு உருவம் தந்தார்கள்.

அவற்றைச் சுற்றி பலக் கட்டுக்கதைகளையும் புராணங்களையும் கட்டமைத்தார்கள். வெறும் அர்த்தங்களாக இருந்தவற்றுக்கு உருவம் தந்தார்கள். அதற்கேற்ற உடலையும் வடிவத் தையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். அன்புக்கு ஒரு கடவுள், அழகுக்கு ஒரு கடவுள். அவைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உருவம்.

பத்து அறிவுகள், ஒன்பது கோள்கள் என்றெல்லாம் அரிஸ்டாட்டிலின் தத்துவத்தில் காணப்படுகிறதே அவையெல்லாம் கிரேக்கர் களின் இயல்பில் நிறைந்திருக்கும் 'உலகாதா யத்தின் முன் வைப்புகளின்றி வேறில்லை. இந்த உலகாதாயத்தை கிரேக்கர்களால் தவிர்க்க முடியவில்லை.

கிரேக்க நாகரிகத்தில் உலகாதாயம் தூக்கலாக இருந்தது என்பதை ஐரோப்பிய அறிஞர்கள் ஒப்புக்கொள்கின்றனர். தமது நூல்களிலும் ஆய்வுகளிலும் அதை வெளிப்படையாகவே சரி காண்கின்றனர்.

ஜெர்மனிய அறிஞர் **Dr. Hass** என்பவர்

"எது ஐரோப்பிய நாகரிகம்?" என்ற தலைப்பில் ஜெனீவாவில் மூன்று பேருரைகள் நிகழ்த்தியுள்ளார் இவர். "கீழ்திசை நாடுகளால் மேற்கத்திய நாகரிகம் எந்த தாக்கமும் பெற்ற தில்லை. முழுக்க முழுக்க அது தனித்த, தனித் தன்மை மிக்க நாகரிகம்தான்" என்ற கருத்துடைய வராவார்.

அவருடைய உரையின் சுருக்கத்தை இங்கே தருகிறோம்...

"கிரேக்க கலாச்சாரம் தான் இப்போதைய மேற்கத்திய கலாச்சாரத்தின் மையம். ஒருவன் தன் வயதுக்கு ஏற்ற வலிமையைப் பெறுவது அவர்களிடம் மிக முக்கியமானதாக இருந்தது.

தன் வயதுக்கு ஏற்ற உடலழகைப் பெற்றவனே பரிபூரணமானவன். அவனே முன்மாதிரி என்று அவர்கள் கருதினர். ஐம்புலன்களால் உணரத்தக்க வைகளுக்கு அவர்கள் தந்த அதீத முக்கியத்துவமே இதற்குக் காரணம்.

உடற்பயிற்சி, விளையாட்டுக்கான பயிற்சி, நடனங்கள் முதலியவற்றில் பெரும் ஈடுபாடுக் காட்டினார்கள். பௌதீக அறிவியல், தத்துவம், உவமைக் காட்டுதல், பாடல்கள், கவிதை ஆகியவற்றின் மூலம் தம் சிந்தனையை கூர்த் தீட்டிக் கொள்வார்கள். அதேநேரத்தில் சிந்தனை வளர்ச்சி, உடல் வளர்ச்சியை விட மேம்பட்டு விடாமல் பார்த்துக்கொள்வார்கள்.

அவர்களின் மார்க்கத்தில் ஆன்மிக உயிர் இருக்கவில்லை. அதில் மதம் குறித்த அறிவும் இல்லை. மத அறிஞர்கள் என்ற வகுப்பினரும் இல்லை. அவர்களிடம் நடைமுறையிலிருந்த 'அஸ்புஸ்' சடங்குகள் முதலியவற்றில் காணப் பட்ட. ஆன்மிக வண்ணம் என்பது கிழக்கத்திய உலகத்திலிருந்து அவர்கள் இரவலாகப் பெற்றவைதானேயன்றி அவற்றை கிரேக்க நாகரிகத்துடன் சேர்த்துப் பார்ப்பது சரியல்ல.

"கிரேக்கர்கள் மார்க்கப்பற்றையோ பயபக்தி யையே பெரிதாகக் கருதவில்லை. தமது செயல் களில் கவனம் செலுத்தினர். வேடிக்கை விளை யாட்டு, உலகம் வாழ்வு பேரானந்தம் இவற்றில் முனைப்புக் காட்டினர்" என்று ஏராளமான ஐரோப்பிய அறிஞர்கள் தம் கணிப்பை பதிவு செய்கின்றனர்.

அறிஞர் **Lecky** கூறுகிறார் :

கிரேக்கர்களின் இயக்கங்கள் அறிவையும் புத்தியையும் மட்டுமே சார்ந்திருந்தன. எகிப்திய இயக்கங்கள் இதற்கு நேரெதிராக உள்ளார்ந்த ஆன்மிகம் சார்ந்திருந்தன.

ரோம் நாட்டைச் சார்ந்த அபோலிஸ் என்ற எழுத்தாளர் கூறுகிறார்

"எகிப்தியர்கள் பணிந்துவேண்டி, கசிந்துருகி தம் கடவுளுக்கு கண்ணியம் செய்வர். கிரேக் கர்களோ ஆடல் பாடல்களால் தம் கடவுளுக்கு மரியாதை செய்வர். கிரேக்க சரித்திரமும் இதை உண்மைப்படுத்துகிறது. இக்கருத்துக்கு வலிமை சேர்க்கிறது".

கடவுள் பயமோ பக்தியோ பெரிதாக இல்லாமல் பெருங்கொண்டாட்டங்கள், பண்டிகைகள், விளையாட்டுகள் ஆகியவற்றை மட்டுமே சடங்குகளாகக் கொண்டதுதான் கிரேக்கர்களின் மதம். இதுபோல் வேறெந்த மார்க்கத்தையும் நாம் காணமுடியவில்லை. பிரமுகர்களுக்கும் பெரிய மனிதர்களுக்கும் கண்ணியம் தருவதைப்போல கடவுளுக்கும் கண்ணியம் தந்தனர் அவ்வளவுதான். வழக்கமான சம்பிரதாயங்கள் சடங்குகள் இவற்றால் கடவுளை கண்ணியப்படுத்துவதே போதும் என்று கருதினர். (Source : WE.H. Lecky, History of European Morel, Landon 1869, Vol.1, P-344,345)

- தொடரும்...

*- முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன 2ஆம் பாகத்திலிருந்து*

# ஏழைகள் பற்றி இஸ்லாம்...

இன்றைய உலகில் ஏழைகள் என்றாலே ஊனமாக பார்ப்பதும், குடும்ப, சமூக நிகழ்வுகளில் தனித்து வைப்பதும், அவர்களின் மனதை காயப்படுத்துவதும் நாளுக்கு நாள் அதிமாகிக் கொண்டு இருக்கிறது. மத வழிப்பாட்டுத் தலங்களில்கூட அவர்கள் ஏழை பணக்காரன் என்று பிரித்து பார்க்கப்படுகிறது.

ஏழைகள் அவமதிப்பதையும், பிரித்துப் பார்ப்பதையும் இஸ்லாம் வண்மையாகக் கண்டிக்கிறது.

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :**

“ஏழைகளை விட்டுவிட்டு செல்வந்தர்கள் மட்டுமே அழைக்கப்படும் வலிமா (மணவிருந்து) உணவே உணவுகளில் மிகத் தீயதாகும். விருந்து அழைப்பை ஏற்காதவர் அல்லாஹ்வுக்கும் அவருடைய தூதருக்கும் மாறு செய்தவராவார்.” (புகாரி)

“எந்தவொரு விருந்துக்கும் செல்வர்ந்தர்கள் அழைக்கப்பட்டு, ஏழை எளியவர்கள் மறுக்கப்படுகிறார்களோ அவர் அல்லாஹ்வுக்கும், அவருடைய தூதருக்கும் மாறு செய்தவராவார்.” (முஸ்லிம்)

(நபியே) நியாயத் தீர்ப்பைப் பொய்ப்பிகின்றானோ அவனை நீர் பார்த்தீரா? பின்னர் அவன்தான் அநாதைகளை விரட்டுகிறான். மேலும் ஏழைகளுக்கு உணவளிப்பதின் பேரிலும் அவன் தூண்டுவதில்லை. (107:1-3)

ஏழைகளுக்கு உதவி செய்வதில் சிறப்பைப் பற்றி முஹம்மது (ஸல்) இவ்வாறு கூறினார்கள் :

கணவனை இழந்த கைம் பெண்ணுக்காகவும், ஏழைக்காகவும் பாடுபடுகிறவர், இறைவழியில் அறப்போர் புரிபவர் போன்றவராவார். அல்லது இரவில் நின்று வணங்கிப் பகலில் நோன்பு நோற்பவரைப் போன்றவராவார்.

(புகாரி)

“ஸலாமைப் பரப்புங்கள். ஏழைகளுக்கு உணவளியுங்கள். மக்கள் தூங்கும்போது தொழுங்கள் (இதனால்) சொர்க்கத்தில் நுழையுங்கள். (திர்மிதி)

ஏழைகளுக்கு தனது கையால் தானம் வழங்குவது தீய மரணத்தை விரட்டும், பாதுகாக்கும். (தபரானீ, பைஹகீ)

**ஏழைகளிடம் கடினமாக நடந்துகொள்வதை இஸ்லாம் தடை செய்கிறது**

“உம்மிடம் பொருளில்லாமல் அதற்காக, நீர் உம்முடைய இறைவனின் அருளை ஆதரவு வைத்து (அதை) எதிர்பார்த்திருக்கும் சமயத்தில் (உம்மிடம் எவரேனும் உதவி கேட்டு) அவர்களை நீர் புறக்கணிக்கும்படி நேரிட்டால் (அப்போது) அவர்களிடம் அன்பான சொல்லையே சொல்வீராக” (17:28)

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஜகாத் பற்றி கூறும்போது...

“அது அவர்களின் செல்வதர்களிடமிருந்து எடுக்கப்பட்டு அவர்களிலுள்ள


vaigarai velicham official

ஏழைகளுக்கு வழங்கப்படும் எனக் கூறினார்கள்" (முஸ்லிம்)

ஏழைகளுக்கு உதவி செய்வதன்மூலம் இறைவனை காணலாம். மறுமை நாளில் அல்லாஹ் (ஒரு மனிதரிடம்) ஆதமின் மகனே (மனிதா) நான் உன்னிடம் உணவு கேட்டேன். ஆனால் நீ எனக்கு உணவளிக்கவில்லை என்பான். அதற்கு மனிதன் "என் இறைவா நீ அகிலத்தாரின் அதிபதியாக இருக்க, உனக்கு நான் எவ்வாறு உணவளிக்க இயலும்? என்று கேட்பான். அதற்கு அல்லாஹ் உனக்குத் தெரியுமா? உன்னிடம் என் அடியானான இன்ன மனிதன் உண்பதற்கு உணவு கேட்டான். ஆனால், அவனுக்கு நீ உணவளிக்கவில்லை. தெரிந்துகொள் அவனுக்கு நீ உணவளித்திருந்தால் அதற்குரியதை என்னிடம் நீ கண்டிருப்பாய் என்று கூறுவாய். (முஸ்லிம்)

ஏழைகளின் சிறப்புகள் பற்றி முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்...

செல்வந்தர்களான முஸ்லிம்களைவிட ஏழை முஸ்லிம்கள் நாற்பது வருடங்கள் முன்னதாக சுவர்க்கத்தில் நுழைவார்கள். (திர்மிதி)


கியாமத் நாளில் நீங்கள் அனைவரும் ஒன்று கூடியிருக்கும்போது இந்த சமுதாயத்தின் ஏழை-எளியோர் எங்கே? என்று அறிவிப்புச் செய்யப்படும். (அறிவிப்பைக் கேட்டதும்) ஏழை எளியோர்கள் எழுவார்கள். நீங்கள் என்ன அமல்கள் செய்தீர்கள்? என அவர்களிடம் வினவப்படும். எங்கள் இரட்சகனே நீ எங்களை சோதித்தாய், நாங்கள் பொறுமையாக இருந்தோம். நீ மற்றவர்களுக்குச் செல்வத்தையும், ஆட்சியையும் கொடுத்தாய் என்று அவர்கள் கூறுவார்கள். நீங்கள் உண்மையே கூறினீர்கள் என்று அல்லாஹுதஆலா கூறுவான்.

எனவே மற்ற பொதுமக்களுக்கு முன்னதாக அவர்கள் சுவர்க்கத்தில் நுழைவார்கள். செல்வந்தர்களிடமும் ஆட்சியாளர்களிடமும் கடினமாகக் கேள்விக் கணக்கு கேட்கப்படும் என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (இப்னு ஹிப்பான்)

உலகத்திற்கோர் முன்மாதிரி, எங்கள் உயிரினும் மேலான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இப்படி பிரார்த்தனைப் புரிந்தார்கள். இப்படிப்பட்ட பிரார்த்தனையை இந்த உலகில் எந்தத் தலைவனும் கேட்டதில்லை, கேட்கவும் விரும்ப மாட்டார்கள்.

"யா அல்லாஹ், என்னை ஏழைகளின் சுபாவத்தில் வாழவைப்பாயாக, ஏழ்மையான நிலையில் உலகிலிருந்து என்னை மரணிக்கச் செய்வாயாக, ஏழைகளின் கூட்டத்தில் என்னை எழுப்புவாயாக"

"நிச்சயமாக என் இறைவன் தன் அடியார்களில் யாருக்கு நாடுகிறானோ அவருக்கு செல்வத்தை விசாலப்படுத்துவான். இன்னும் தான் நாடியவர்களுக்கு சுருக்கியும் விடுகிறான். ஆகவே நீங்கள் எந்தப் பொருளை (அல்லாஹ்வின் பாதையில்) செலவு செய்தபோதிலும் அவன் அதற்குப் பிரதிபலன் அளிக்கிறான். மேலும் அவன் கொடையாளிகள் அனைவரிலும் மிகவும் மேலானவன்" *(34:39)*



## மேட்டுப்பாளையத்தில்

## இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கு நிகழ்வாக

# மால்கம் X (எ) மாலிக் அல்ஷாபாஸ் கருத்தரங்கம்




*25.02.2024* ஞாயிற்றுக்கிழமை காலை *10.30* மணியளவில் நிகழ்வு ஆரம்பமானது. முதல் நிகழ்வாக சமீபத்தில் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு இன இழிவை ஒழித்த தோழர் சிகா மார்க்ஸ் (எ) உமர் முக்தார் அவர்கள் "தான் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட நிகழ்வுகளையும், தாழ்த்தப் பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இஸ்லாம் மட்டுமே தீர்வு என்று ஆணித் தரமாகவும் நேர்த்தியாகவும் பேசி முடித்தார்".

இரண்டாவது நிகழ்வாக இமாம் முஹம்மத் இல்யாஸ் பாகவி (காட்டூர் சுன்னத் வல் ஜமாத் பள்ளிவாசல் தலைமை இமாம்) அவர்கள் "இஸ்லாத்தின் ஓரிறைக் கோட்பாட்டையும், ஏன் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிமுகம் செய்து வைத்தார்".

மூன்றாம் நிகழ்வாக தோழர் தொல் குடிமைந்தன் (கோவை வடக்கு மாவட்ட செயலாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி) அவர்கள் "மால்கம் X அவர்களின் அமெரிக்க நிறவெறிக் கொள்கைக்கு எதிராக போராடிய வரலாற்றையும், தானும் தான் சார்ந்து இருக்கின்ற கட்சியும் தன்னுடைய தலைவரும் எந்த அளவிற்கு இஸ்லாத்திற்கும் இஸ்லாமிய மக்களுக்கும் நெருக்கமாக இருக்கின்றோம் என்று விரிவாக எடுத்துரைத்தார்."

இறுதியாக சகோதரர் முஹம்மத்


vaigarai velicham official









ரஃபின் (நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் மதுரை) அவர்கள் "மால்கம்X அவர்களின் முழு வரலாற்றையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய முக்கியத்துவத்தையும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டால் என்னென்ன தாக்கங்களை உண்டாக்கும் என்றும் பேசி முடித்தார். பார்வையாளர்கள் கேட்ட இஸ்லாத்தைப் பற்றியான கேள்விகளுக்கும் பதில் அளித்தார்.

(குறிப்பு : வந்திருந்த அனைத்து விருந்தினர்களுக்கும் பங்கேற்பாளர்களுக்கும் விருந்து உபசரிப்போடு நிகழ்வு முடிந்தது)

இவன் :

**நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்,**
**வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம்,**
**தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்.**



# நாகர்கோவில் வடச்சேரியில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி








vaigarai velicham official









25.02.2024 அன்று நாகர்கோவில் வடச்சேரியில் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி நாகர்கோவில் வடசேரி எஸ்.ஜி.எஸ் ஹாலில் வைத்து 25-02-2024 ஞாயிறு அன்று ஒரே நொடியில் தீண்டாமை ஒழிந்துவிடும் என்னும் நூல் வெளியீட்டு விழா மிக சிறப்பாக நடைப் பெற்றது அல்ஹம்துலில்லாஹ்

இதில் நூல் ஆசிரியர் வழக் கறிஞர் சின்னசாமி அவர்களும், குமரி மாவட்ட தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் தலைவர் ஜின்னா, செயலாளர் அப்துல் பாஸித், திருப்பூர் மாவட்ட தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் செயலாளர் காதர் மைதீன், ஆதி தமிழர் கட்சி ஒருங்கிணைப் பாளர் மார்த்தையன் அவர்களும் மற்றும் ஆதி திராவிட சேவா கட்சி ஒருங்கிணைப்பாளர் பிரசாத் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

இதில் பிரசாத் அவர்கள் நூலை வெளியிட்டார் சுமார் 85 பேர் கலந்துக்கொண்டு தீண்டாமை விடுதலை தீர்வை அறிந்துக்கொண்டு விழாவை சிறப்பித்தனர். கேள்வி பதில் நிகழ்ச்சியில் அவர்களின் சந்தே கங்களுக்கு பதிலளிக்கப்பட்டது

நிகழ்ச்சியின் இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப் பட்டது இதில் கலந்துக் கொண்ட அனைவருக்கும் இறைவன் ஹிதாயத் வழங்கிடுவானாக

நன்றி ஒளி திரை - ஆசிஃப்கனி

குழந்தைகள் இப்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள், அவற்றை நாம் எப்படி எதிர் கொள்ள வேண்டும். என்பன பற்றிய தகவல் களைத் தந்து கொண்டிருந்தோம்.

இவற்றில் பெருமானார் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களையும் அவ்வப்போது குறிப் பிட்டிருந்தோம். அதில் குழந்தை வளர்ப்பு பற்றிய இன்றைய ஆராய்ச்சிகள், அந்த ஆராய்ச்சி முடிவுகளையே அதிர வைக்கும் அளவில் அமைந்த பெருமானார் (ஸல்) அவர்களின் பொன்மொழிகள் இவற்றைத் தந்நோம் படிப் போர் ஆச்சரியத்தால் ஆட் கொள்ளப்பட்பார்கள்.

இந்த முயற்சியின் தொடர்ச்சியாக இன்னும் பல தகவல்களை இங்கே தருகின்றோம்.

நமது குழந்தைகளை இறைவனை அஞ்சி நடக்கின்ற நல்லக் குழந்தைக ளாக வளர்த்திட வேண்டும். அத்தோடு இஸ்லாம் என்ற இலட்சி யத்தின் இளவல்களாகவும் அவர்களை நம் வார்த்தெடுத் திடவேண்டும். அவர்களது வாழ்க் கைக்கு ஓர் இலட்சியமிருக்கின்றது என்பதை அவர்களது பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைத்தாக வேண்டும்.

இஸ்லாத்தின் இளவல்களாகக் குழந்தைகளை ஆக்கிட ஒரு நல்ல மின்னணி வேண்டும் என்கின்றார்கள் இஸ்லாமிய அறிஞர்கள். நல்ல குழந்தை களை பெற்றெடுக்க ஒரு நல்ல திரு மணம் வேண்டும் என்கின்றார்கள்.

நல்ல திருமணம் என்பது இஸ்லாமிய அறிஞர்களின் கருத்தில் பணத்திற்காகவோ, பாட்டுக்காகவோ, அழகுக்காக வோ அல்லாமல் இறைவனை அஞ்சி நடக்கின்ற பெண்களை மனமுவந்து மனங்குளிர மஹர் தந்து செய்திடும் திருமணம் என்பதாகும்.

திருமணத்திற்காக இன்னும் சொன்னால் வாழ்க்கை என்ற ஆயிரங்காலத்துப் பயிறுக்காக மணமகளை மணமகனைத் தேர்ந்தெடுப்பதில் இறைவனை அஞ்சி நடப்பவர்களுக்கே முதலிடம்

# குழந்தை வளர்ப்பின் அடிப்படை!





vaigarai velicham official

தரப்பட வேண்டும்.

எப்போது இறைவனை அஞ்சி நடப்பவர்கள் தம்பதிகளாக ஆகிவிட்டார்களோ அப்போது நல்ல குழந்தை வளர்ப்பிற்கான முதல் ஆழமான அஸ்திவாரம் போடப்பட்டுவிட்டது என்று பொருள்.

அதன்பின்னர், பெற்றக் குழந்தைக ளுக்கு நாம் போதிய பாசத்தையும் பரிவையும் தந்திட வேண்டும். இதுவும் நமது கடமை. இது கடமை என்பது மட்டுல்ல, நமது குழந்தைகளின் உரிமை, நபிகளாரின் (ஸல்) தோழர் ஒருவர் தன் குழந்தையை வாரியணைத்துக் கொண்டி ருந்தார்கள். அதைக் கண்டு மனங்குளிர்ந்த பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த நபித் தோழர் அவர்களிடம் இப்படிக் கேட்டார்கள்:

"நீங்கள் அந்தக் குழந்தைகளிடம் அன்பு காட்டுகின்றீர்களா?" இதற்கு அந்த நபித்தோழர் ஆமாம் நான் அந்தக் குழந்தையிடம் அன்பு செலுத்துகின்றேன்" எனப் பணிவாகப் பதில் சொன்னார்கள். இதனை செவிமடுத்த இறை வனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

"இந்தக் குழந்தையிடம் நீங்கள் காட்டிய அன்பைவிட அதிகமான அன்பை அல்லாஹ் உங்களின்பால் சொரிந்திடுவான். அன்பு செலுத்துபவர்களிலெல்லாம் அதிகமாக அன்பு செலுத்துபவன் அவனே!" எனக் கூறினார்கள்.

நூல் : புகாரி

குழந்தைகளிடம் அன்பு செலுத்தாதவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் வன்மையாகக் கண்டித்தார்கள்.

தங்களது பேரக்குழந்தையாகிய ஹஸன் பின் அலி (ரலி) அவர்களுக்கு முத்தம் கொடுத்தார்கள். இதனை பார்த்துக்கொண்டு நின்ற அல் அக்ரா பின் ஹபிஸ் அத்தாமிம் (ரலி) அவர்கள் சொன்னார்கள்: "எனக்கு பத்து குழந்தைகள் இருக்கின்றார்கள் நான் அவர்களில் எவரையும் எப்போதும் முகர்ந்ததில்லை என்றார்கள்."

அவரை ஏறிட்டுப் பார்த்தார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். பின்னர் இப்படி கூறினார்கள்:

"யார் அன்பு செலுத்தவில்லையோ அவர் அன்பு செலுத்தப்படமாட்டார்"

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரலி)
நூல்: புகாரி

ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒரு பெண்மணி வந்தார்கள். வந்த பெண்ணிடம் ஆயிஷா (ரலி) அவர்கள் மூன்று பேரித்தம் பழங்களைக் கொடுத்தார்கள். அந்தப் பெண்மணி, அவற்றில் இரண்டை தன்னுடைய இரண்டு மகன்களுக்கு ஆளுக்கு ஒன்றாக தந்துவிட்டார்கள். மூன்றாவது பழத்தை தனக்கென வைத்துக் கொண்டார்கள்.

அந்தக் குழந்தைகள் தங்களுக்கு தரப்பட்ட வற்றை சாப்பிட்டுவிட்டு மீண்டும் தாயின் முகத்தைப் பார்த்தன. அந்தத் தாய் தனக்கென வைத்திருந்த பழத்தை இரண்டாக உடைத்து அந்தக் குழந்தைகளின் கைகளில் தந்தார்கள்.

ஒரு பகுதியை மட்டும் தனக்கென வைத்துக் கொண்டார்கள்.

அந்தத் தாயின் அன்புள்ளம் கண்டு நஞ்சம் நெகிழ்ந்தார்கள் ஆயிஷா (ரலி) அவர்கள், இதனை இறைவனின் தூதர் முஹம்மது (ஸல்) அவர் களிடம் சொன்னார்கள். அதற்கு முஹம்மது (ஸல்) அவர்கள் இப்படி பதில் சொன்னார்கள்.

"இதுகண்டு நீ ஏன் ஆச்சர்யப்பட வேண்டும். அந்தப் பெண் தன் குழந்தைகளிடம் அன்பு செலுத்தியதின் மூலம் அல்லாஹ்வின் அன்பை நிரம்பவே சம்பாதித்துக் கொண்டார்கள்.

(நூல், புகாரி)

பெருமானார் (ஸல்) அவர்களின் பேரக் குழந்தை மரணத்தின் விளிம்பில் இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் தன் மடியில் எடுத்துக் கிடத்தினார்கள். அவர்களின் கண்களில் கண்ணீர்த் துளிகள் திரண்டன. இதனைக் கண்ட ஸஅத் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களே என்ன இது? எனக் கேட்டார்கள். இதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் இதுதான் அல்லாஹ்வின் அன்பு. அதை அவன் தன் கருணையினால் மனிதர்களின் மனதிலும் பதிக்கிறான்" என்றார்கள்.

பிறிதொரு அறிவிப்பில் இஃது இப்படி இடம் பெறுகின்றது.

"அவனுடைய அடியார்களில் அல்லாஹ் மிகப் பெரியவன். தான் விரும்புபவர்களின் உள்ளத்தில் இரக்கத்தைத் தருவான். அல்லாஹ் தன் அடியார்களில் யார் அடுத்தவர்களிடம் அன்பு செலுத்துகின்றார்களோ அவர்களிடத்தில் அன்பு செலுத்துவான்.

(நூல் : புகாரி, முஸ்லிம்)

# வாய் துர்நாற்றம் இருக்கிறதா அதை எப்படி சரி செய்வது?





மருத்துவர் **ஆர்.முரளி கார்த்திக்,** பல் மருத்துவர், சென்னை.

வயதானவர்கள் பலரும் இன்று சந்திக்கும் பொதுவான பிரச்னை வாய் துர்நாற்றம். இது நம்முடன் நெருங்கிப் பழகுபவருக்கு ஒரு தர்மசங்கடத்தை உருவாக்கலாம். வாய் துர் நாற்றம் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. இப்பதிவில் இதற்கான காரணங்கள். சரிசெய்யும் முறை மற்றும் தவிர்ப்பது எப்படி என்று பார்ப்போம்.

**வாய் துர்நாற்றம் ஏற்படுவதற்கான காரணங்கள்**

**வாய் வறட்சி**

வயதானவர்களுக்கு உமிழ்நீர் சுரப்பது குறைவதாலும், மருந்துகளின் பக்கவிளைவுகளாலும், வாய் வழியாகச் சுவாசிப்பதாலும் வாய் வறட்சி ஏற்படலாம். வாயில் போதுமான அளவு எச்சில் இல்லாமல் இருந்தால் அது பாக்டீரியாக்களைப் பெருக்கி வாய் துர்நாற்றத்தை உருவாக்கும்.

**ஈறு நோய்கள்**

பற்களில் காரை படிவது, பல் ஈறுகளில் வீக்கம், புண், ஈறுகளில் சீழ் பிடிப்பது போன்ற பிரச்னை இருப்பவர்களுக்கு, அந்த ஈறுகளில் பாக்டீரியாக்களின் தொற்று அதிகமாக இருக்கும். அதனால் வாய் துர்நாற்றம் ஏற்படலாம்.

**பற்களில் சொத்தை**

சொத்தைப் பற்கள் இருந்தால் பல் இடுக்குகளில் உணவு துகள்கள் மாட்டிக்கொள்ளும். அவை அழுகி, கந்தகம் எனும் வேதிப்பொருளை உருவாக்கும். இதுவும் துர்நாற்றம் வீசுவதற்கு ஒரு காரணமாக அமையலாம்.

**நாக்கில் பாக்டீரியாக்களின் வளர்ச்சி**

நாக்கை நாம் சரியாகச் சுத்தம் செய்யாவிட்டால் அதில் வெள்ளைப் படலம் படிந்து துர்நாற்றம் வீசக்கூடும்.

**உணவு முறை**

இன்றைய மேற்கத்திய உணவுப் பழக்கங்களாலும், பூண்டு, வெங்காயம் போன்ற உணவுகளை அதிகம் எடுத்துக்கொண்டு வாயைச் சுத்தம் செய்யாமல் இருந்தாலும் துர்நாற்றம் வீசக்கூடும். தண்ணீர் குறைவாக எடுத்துக்கொள்வதும் ஒரு காரணமாக அமையலாம்.

**உடல் உபாதைகள்**

வயிற்றில் புண், ஆசிட்ரிஃப்ளக்ஸ், நாள்பட்ட இரைப்பை அழற்சி மற்றும் குடல் கோளாறுகள் இருப்பவர்களுக்கு வாய் துர்நாற்றம் அதிகமாக இருக்கும்.

கட்டுப்பாடில்லாத சர்க்கரை நோய் கொண்டவர்களின் வாய்களில் ஒரு புளித்த பலத்த நாற்றம் வீசக்கூடும்.

கல்லீரல் நோய் மற்றும் சிறுநீரக நோய் உள்ளவர்களுக்கும் வாய் துர்நாற்றம் வீசக்கூடும்.

**வாய் துர்நாற்றம் தடுக்கும் வழிகள்**

வாய் துர்நாற்றத்தைத் தடுக்க விரும்புவோர் வாயைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் இரண்டு முறை காலை மற்றும் இரவு நேரங்களில் மிருதுவான பல் துலக்கிக்கொண்டு பற்களைச் சுத்தம் செய்ய வேண்டும்.

சாப்பிட்ட பின்பு வாயை நன்கு கொப்பளிக்க வேண்டும். நாக்கினையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

இறைச்சி, மீன் போன்ற அசைவ உணவுகள் சாப்பிட்ட பின்பு பற்களின் நடுவில் உணவு துகள்கள் மாட்டிக்கொண்டால் அவற்றை ஃபிளாஸிங் (Dental Floss) மற்றும் பல் துலக்கி வயர்கள் (interdental brush) பயன்படுத்தி நீக்க வேண்டும்.

நீரிழிவு நோய் உள்ளவர்கள் சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

வாய் வறட்சி உள்ளவர்கள் தண்ணீர் அதிகமாக எடுத்துக்கொள்ள வேண்டும். மற்றும் செயற்கை உமிழ்நீர் (Artificial saliva) உபயோகப் படுத்தலாம்.

**மவுத் வாஷ் உபயோகப்படுத்தலாமா?**

பல் மருத்துவரின் ஆலோசனையுடன் மவுத் வாஷ் பயன்படுத்தி வாய் துர்நாற்றத்தைப் போக்கிக்கொள்ளலாம். பல் மருத்துவரை அணுகி நமது ஈறுநோய்கள் மற்றும் சொத்தைப் பற்களை அடைத்துக்கொண்டால் இந்தப் பிரச்னையைச் சரிசெய்து கொள்ளலாம்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று



# ஆஸ்துமாவை அலற வைக்கும் சித்த மருத்துவம்

**Dr. S. அருள் சொரூபி** M.D.(S).,M.A.,(Yoga)
சித்த மருத்துவர், மேல்மருவத்தூர்.

மழை, பனி எனக் காலநிலை மாறிய உடனே இரைப்பு நோய் என்று சங்க இலக்கியங்களில் கூறப்பட்ட ஆஸ்துமா நோய் அழைக்காமலே வந்துவிடும். ஏன் வருகிறது?

- சிலருக்கு ஒவ்வாமை காரணமாக வரும்.
- மாறுபட்ட உணவுப் பழக்கவழக்கத்தினால் வரும்
- அதீத கவலையால் வரும் உடல், மனம், சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் காற்று மாசு, புகை, தூசு காரணமாகவும் வரலாம்.
- சிலருக்குச் சில நோய்களைத் தொடர்ந்து இரைப்பும் இழுப்பும் வரலாம்

**குறி குணம்**

மூச்சுவிடச் சிரமம், மூச்சுதிணறல், மார்பை இறுக்கிக் கட்டியது போன்று இருக்கும். இருமல் இருக்கும். சளி சரிவர வெளியாகாது. மூச்சுவிடும்போது சில சமயம் 'நொய் நொய்' என்ற சத்தம் எழும். பசியிராது. சாப்பிட்டாலும், படுத்தாலும் மூச்சுத் திணறல் அதிகமாக இருக்கும்.

**என்ன தீர்வு**

- எளிதில் ஜீரணமாகும் உணவுகளைச் சாப்பிட வேண்டும்
- இரவு படுக்கைக்குப் போகும் மூன்று அல்லது இரண்டு மணி நேரத்திற்கு முன்பே இரவு உணவு உட்கொள்ளுதல் நன்று.
- நன்கு காய்ந்து ஆறிய வெந்நீரை வெதுவெதுப் பாகக் குடிக்கவும்
- மிதமான நடைப்பயிற்சி அவசியம்
- சுவாசப் பயிற்சி மிக மிக அவசியம். - பிராணாயாமம் தொடர்ந்து செய்தால் உடல் ஆரோக்கியமாவதுடன், ஆஸ்துமா உடனே குணப்படும்

மேலும் உணவில் மிளகு, இஞ்சி, சுக்கு, மஞ்சள், தினமும் சேர்த்துக்கொள்ளவும். தக்க மருத்துவரின் அறிவுரையின் பேரில் பின்வரும் மருந்துகளை உடல் வன்மைக்கு ஏற்றவாறு மருத்துவரின் அறிவுரைப்படி எடுக்கலாம்.

- சுக்கு, மிளகு, திப்பிலி சேர்ந்த திரிகடுகு பொடியைத் தினமும் பாலில் ஒரு சிட்டிகை கலந்து எடுக்கலாம்
- தாளிச் சாதி வடக மாத்திரையை மூன்று வேளை சுவைத்துச் சாப்பிடலாம்
- கற்பூர சூரணம் 1கிராம், பூரண சந்திரோதயம்

50 மி.கி, வெற்றிலை அல்லது தேனுடன் தினம் இருவேளை சாப்பிடலாம்

- அல்லது பாவன திரிகடுகு சூரணம் 1 கிராம் அதனுடன் மேக நாராயண செந்துரத்தை 25 மி.கி/ எடுத்து தேனுடன் கலந்து சாப்பிடலாம்.
- அமுக்கரா சூரணம் அயசெந்தூரம் 100 மிகி பவள பற்பம் 200 மி.கி தேனுடன் கலந்து சாப்பிடலாம்
- அல்லது துளசி சூரணம் 1. கிராம் பாலுடன் ஒரு வேளை எடுத்துக்கொள்ளலாம் அல்லது கஸ்தூரி மாத்திரையை இஞ்சிச் சாற்றில் உரசிக் கொடுக்கலாம்
- அல்லது சுவாச குடோரி மாத்திரை இஞ்சி சாற்றில் கொடுக்கலாம்
- தூதுவளை லேகியம் இரு வேளை 5 கிராம் கொடுக்கலாம்
- அஸ்வகந்தா பலாலாஷா தி தைலத்தை தலை மற்றும் உடல் முழுவதும் தேய்த்து குளிக்கலாம்.


எப்போது குளித்தாலும் வெந்நீரில் குளிக்க வேண்டும். பனிக் காலங்களில் இஞ்சி, மஞ்சள் கலந்த சூடான பால் குடிக்கலாம்

- நன்றி முதுமை எனும் பூங்காற்று

## பருத்தி ஆடைகளின் நன்மைகள்!

- நீடித்து உழைக்கும் திறன் கொண்டது
- தோல் சம்பந்தப்பட்ட பிரச்னைகளிலிருந்து பாதுகாக்கிறது
- தோல் பிரச்னைகள் வராமல் இருக்க மருத்துவர்கள் பரிந்துரைப்பது
- பிறந்த குழந்தை துயில்வதற்கு உகந்தது, மென்மையானது
- பருத்தி ஆடையாவது, காற்று உள்ளே சென்று வர உகந்தது
- மேலும் நம் தோள்களில் உள்ள மாசு நீரை வெளியேற்றும் தன்மை கொண்டது
- சாதாரண சலவை போதுமானது


இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு....!




வேர்கள் வெளியீட்டகம்

மட்காவ்ன் (கோவா) குண்டு வெடிப்பு (2009):

2009ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் தேதி தீபாவளிக்கு ஒரு நாள் முன்பு மட்கால்ன் நகரைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஒன்று கூடும் இடத்தை வெடிகுண்டு வைப்பதற்கென தேர்வு செய்திருந்தார்கள், சம்பவ இடத்தில் ஒரு கைப்பையை வைத்து விட்ட்டிருந்தார்கள். அதில் கான் மார்கெட் என அச்சிடப்பட்டிருந்தது.

அந்தப் பையில் முஸ்லிம்கள் பயன்படுத்தும் அத்தர் நறுமணக் குப்பிகள் இருந்தன.

அதாவது திட்டமிட்டப்படி இந்தக் குண்டு வெடித்திருந்தால் நூற்றுக்கணக்கான அப்பாவி இந்துக்கள் மாண்டிருப்பார்கள். காவல்துறையின் சந்தேகம் உடனடியாக முஸ்லிம்கள் மீது தான் விழும். முஸ்லிம்கள் பலர் சிறைப்பட்டிருப்பார்கள். அவர்களுக்கு எதிராக பொய்யான குற்றச்சாட்டுகள் புனையப்பட்டு படுபயங்கரமான விஷயங்கள் ஊடகங்களில் பரப்பப்பட்டிருக்கும். அவையாவும் குற்றப்பத்திரிகையாக தாக்கல் செய்யப்படும். அவையும் ஊதி ஊதி பெருக்கப்படும். பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இவையாவும் பொய்யானவை, உமையான குற்றவாளிகளை காவல்துறை கைது செய்யவில்லை என்று நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்யும்.......

- இந்த நூலிலிருந்து

விலை ரூ.30/-

படியுங்கள்! நாடு எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்!

பாசிசத்தை மாய்க்கவும் - பாரதத்தை பாதுகாக்கவும் முன் வாருங்கள்

போன் : 7401213394 / 7358278146 / 8148129887

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்




# வேர்கள்

## பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சிறையில் எனது நாட்கள்**<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் | - ரூ.350.00 |
| 2. | **ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு**<br>மு. குலாம் முஹம்மது | - ரூ.140.00 |
| 3. | **சாதி ஒழிந்தது** - டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 4. | **End of Casteism** T.M. Mani | - ரூ.50.00 |
| 5. | **அஹமதாபாத் குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 6. | **டெல்லி குண்டுவெடிப்புகள்,** மு. குலாம் முஹம்மது | - ரூ.10.00 |
| 7. | **நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் விரிவாக்கப்பட்ட பதிப்பு** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 8. | **மால்கம்**-X, மு.குலாம் முஹம்மது | - ரூ.120.00 |
| 9. | **தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம்** டி.எம்.மணி | - ரூ.20.00 |
| 10. | **செந்தமிழ்நாட்டுச் சேரிகள்,** டி.எம்.மணி | - ரூ.40.00 |
| 11. | **கர்கரேயை கொலை செய்தது யார்?** | - ரூ.250.00 |
| 12. | **சிந்திப்பீர் செயல்படுவீர்,** நா.கோதண்டபாணி | - ரூ.15.00 |
| 13. | **ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம்,** ப.கோபால கிருஷ்ணன் | - ரூ.40.00 |
| 14. | **சாதி ஒழிந்தது** (ஹிந்தி) டி.எம்.மணி | - ரூ.50.00 |
| 15. | **நாம் பிரிந்து விடவேண்டாம்,** பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.175.00 |
| 16. | **தாலிபானின் பிடியில்,** மு. குலாம் முஹம்மத் | - ரூ.150.00 |
| 17. | **தீண்டாமைக்குத் தீர்வு** | - ரூ.30.00 |
| 18. | **பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு**<br>மு. குலாம் முஹம்மத் | - ரூ.110.00 |
| 19. | **பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள்,** மு. குலாம் மஹம்மத், | - ரூ.90.00 |
| 20. | **இஸ்லாமிய நாகரிகம்,**<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.130.00 |
| 21. | **கஷ்மீரின் பாதி விதவைகள்,** மு. குலாம் முஹம்மத், | - ரூ.70.00 |

| | | |
|---|---|---|
| 22. | **எது முதலில்?**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.450.00 |
| 23. | **சாதி ஒழிந்தது** (கன்னடம்) | - ரூ.50.00 |
| 24. | **அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன?**<br>டி.எம். உமர் ஃபாரூக் | - ரூ.20.00 |
| 25. | **கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்?** மு. குலாம் முஹம்மத் | - ரூ.30.00 |
| 26. | **முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம்**<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், | - ரூ.15.00 |
| 27. | **இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும்** | - ரூ.50.00 |
| 28. | **இஸ்லாம் வழங்கும் தண்டனைகள்** | - ரூ.40.00 |
| 29. | **இஸ்லாமும் விஞ்ஞானமும்** | - ரூ.30.00 |
| 30. | **இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா?** | - ரூ.50.00 |
| 31. | **இஸ்லாமும் பெண்களும்** | - ரூ.60.00 |
| 32. | **இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா?** | - ரூ.70.00 |
| 33. | **தேசப்பிரிவினைக்கு யார் காரணம்?**<br>விரிவாக்கப்பட்ட பதிப்பு, மு. குலாம் முஹம்மத் | - ரூ.100.00 |
| 34. | **திருக்குர்ஆன் கூறும் பொறுமை**<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | - ரூ.80.00 |
| 35. | 26/11- **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** | - ரூ.220.00 |
| 36. | **ஒரு தலித் போராளியின் வாழ்வும்,**<br>**அவர் காட்டிய வழியும்** - அ.மார்க்ஸ் | - ரூ.20.00 |
| 37. | **முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்**<br>வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.10.00 |
| 38. | **நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**<br>தி.லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.10.00 |
| 39. | **குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்?**<br>சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் | - ரூ.25.00 |
| 40. | **இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன்**<br>**லேப்டாப்பில் இருந்ததென்ன?** | - ரூ.20.00 |
| 41. | **கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான்**<br>கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் | - ரூ.25.00 |
| 42. | **கூரியூர் ஜின்னா ஷஹீத்** - மு. குலாம் முஹம்மத் | - ரூ.60.00 |
| 43. | **முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும்** | - ரூ.20.00 |
| 44. | **இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு,** எஸ்.எம். முஷ்ரிப், | - ரூ.30.00 |
| 45. | **சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்,**<br>**காந்திஜி கொலை ஏன்? எப்படி?** | - ரூ.30.00 |


vaigarai velicham official

| | | |
|---|---|---|
| 46. | **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்**<br>எஸ்.எம். முஷ்ரிப், IPS, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 47. | **குஜராத் : 2002 பெண்கள் குழந்தைகளுக்கெதிரான கொடூரங்கள்,** தமிழில்: வளர்மதி | - ரூ.150.00 |
| 48. | **இஸ்லாம் ஒன்றே வழி!**<br>அனிசுத்தீன் அஹமத், தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.120.00 |
| 49. | **இஸ்லாம் உங்கள் பார்வைக்கு**<br>ஹமுத அப்த் அல் அத்தி, தமிழில் : மு. குலாம் முஹம்மத் | - ரூ.400.00 |
| 50. | **முஸ்லிம்கள் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?**<br>ஹள்ரத் அபுல்ஹஸன் நத்வி (ரஹ்), தமிழில் : மௌலவி அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ | - ரூ.300.00 |
| 51. | **சீனாவின் பிடியில் உய்கூர் முஸ்லிம்கள்** | - ரூ.20.00 |
| 52. | **இஸ்லாம் நாங்கள் தேர்தெடுத்த மார்க்கம்** | - ரூ.100.00 |
| 53. | **முஹம்மது (ஸல்) நமது காலத்திற்கு அனுப்பப்பட்ட நபி**<br>கரன் ஆம்ஸ்ட்ராங் | - ரூ.20.00 |
| 54. | **நானொரு RSS முழுநேர ஊழியன் எனது வாழ்க்கைப் பயணம்** | - ரூ.50.00 |
| 55. | **பொதுசிவில் சட்டம் முழு வரலாற்று பின்னணி** | - ரூ.50.00 |
| 56. | **அலாவுத்தீன் கில்ஜியும் பத்மாவதியும்** | - ரூ.40.00 |
| 57. | **எங்கே சமத்துவம் அது இங்கே கிடைக்கும் வாரீர்** | - ரூ.60.00 |
| 58. | **சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து புனித மக்கா மாநகரம் வரை** | - ரூ.60.00 |
| 59. | **பா.ரஞ்சித் அவர்களின் உரையும் ஜி.வி.உமர் ஃபாரூக் அவர்களின் கவலையும்** | - ரூ.25.00 |
| 60. | **முஸ்லிம்களை வகுப்புவாதத்தின் பக்கம் இழுத்துக் கொண்டிருப்பது யார்** | - ரூ.20.00 |
| 61. | **அயா சோபியா உருவான வரலாறு** | - ரூ.50.00 |

## எமது விற்பனையில்...

| | | |
|---|---|---|
| 01. | **கோவை கலவரத்தில் எனது சாட்சியம்**<br>A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் | - ரூ.100.00 |
| 02. | **மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்**<br>ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு | - ரூ.100.00 |
| 03. | **குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள்**<br>ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, | - ரூ.170.00 |
| 04. | **நாடார்கள் வரலாறு கருப்பா? காவியா?**<br>தி.லஜபதி ராய், மூத்த வழக்கறிஞர் | - ரூ.140.00 |
| 05. | **பலி கடாக்கள்** | - ரூ.300.00 |

## BOOKS IN ENGLISH

| | | |
|---|---|---|
| 1. | **END OF CASTEISM** - T.M. Umar Farooq,<br>English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam | - Rs.50.00 |
| 2. | **THE GREAT BETRAYAL** - Elyass Davidson, By Pharos Media | - Rs.695.00 |
| 3. | **MUHAMMED THE PROPHET FOR OUR TIME**<br>Karen Armstrong | - Rs.325.00 |
| 4. | **KAFKA LAND - PREJUDICE LAW AND COUNTER TERRORISM** - Manisha Sethi | - Rs.350.00 |
| 5. | **WHO KILLED KARKARE**<br>The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, | - Rs.300.00 |
| 6. | **26/11 PROBE WAY JUDICIARY ALSO FAILED** - S.M. Mushrif | - Rs.275.00 |
| 7. | **ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION**<br>Kamaluddin Ahamed | - Rs.60.00 |
| 8. | **MUSLIMS AGAINST PARTITION OF INDIA**<br>Shamsul Islam, Pharos Media | - Rs.280.00 |
| 9. | **PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN**<br>(EPITOMS OF HINDU MUSLIM UNITY) - Syed Naseer Ahamed | - Rs.25.00 |
| 10. | **IMAGE AND SUBSTANCE-MODI'S FIRST YEAR OF OFFICE**<br>Nilofar Suhrawardy | - Rs.150.00 |
| 11. | **Innocent Prisoners** | - Rs.495.00 |
| 12. | **Brahminists Bombed Muslims Hanged** | - Rs.350.00 |
| 13. | **Kodikkal- TheLiving Witness of Social Justice** | - Rs.300.00 |

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது**

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. **ஜாதி ஒழிந்தது** - டி.எம். உமர் பாரூக் - ரூ.60.00
02. **நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி** - ரூ.30.00
கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

# வேர்கள் பதிப்பகம்

52/1, கோனிக்கா பில்டிங், மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

GPay **8148129887** Vaigarai Velicham Official

தொடர்புக்கு : **8148129887, 7401213394**

வழியாக புத்தகம் ஆர்டர் செய்ய **9786214186**

**Vaigarai Velicham Official** **vaigarai velicham official**

**darultrust@yahoo.com** **Website : Darulislam.in**



Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002